Registered as a Newspaper

விலை 12/=

# ஈழநாதம்

பக்கம் - 20

மட்டக்களப்பு பதிப்பு

வார வெளியீடு

நாதம் - 01 ஜனவரி 14 - 20-2005 வெள்ளி - 38



## சுனாமியும் சுவாமியும்



வாசகர்களுக்கு எமது இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்


## சுனாமி பேரழிவும் சுயலாப அரசியலும்



## அம்பாறை அகதிகளின் ...?

## அனர்த்த நிவாரண பணிகளில்........

## சிந்தனைக்கு



தமிழ் மக்களின் போராட்டம் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம், தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக் கொள்ளும் அரசியல் சுதந்திர த்திற்கான போராட்டம்.

தேசியத் தலைவர்

ஈழநாதம்
கிழக்குப்பதிப்பு EEZHANATHAM
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065-2226110,
batti@eezhanatham.com
14.01.2005

## உறுதியும் தன்னம்பிக்கையும் கொள்வோம்

ஆழிப் பேரலையினால் தமிழர் தாயகம் அழிந்து சிதைந்து காணப்படுகின்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் காவு கொள்ளப்பட்ட நிலையில் தைப் பொங்கல் இன்று தமிழர் வாழ்வில் வந்து சந்திக்கின்றது. எவரும் நினைத்துப் பார்க்காத அந்தக் கடற்கோள் அழிவு எமது தாயக தேசத்தில் பெரும் ஒப்பாரிச் சத்தத்தை உருவாக்கிவிட்டது.

பல ஆயிரக் கணக்கான மக்கள் பலிக்கடாவாக்கப்பட்டுள்ளனர். பல இலட்சக் கணக்கான மக்கள் உறவுகளை இழந்து, உடமைகளை இழந்து, ஊரை இழந்து உடுத்த உடையுடன் நிர்க்கதியாகி அகதி முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இந்த இன்னல்களுக்குள் தைப்பொங்கல் பண்டிகை எம்மை மற்றுமொருமுறை வலம் வந்து எட்டிப் பார்க்கிறது.

கடந்த 20 வருட காலப் போரில் சிங்களப் பேரினவாத சிலந்தி வலைக்குள் சிக்குண்டோம். துப்பாக்கி வேட்டொலிகளும், எறிகணைகளும் விமானக் குண்டு வீச்சுக்களும் தாயக மண்ணைச் சல்லடையாக்கின. விமானங்கள் மேலே வட்டமடிக்க எறிகணைகள் முற்றத்திலே வீழ்ந்து வெடிக்க எமது இனம் தைப் பொங்கலைக் கொண்டாட முடியாத காலமும் உண்டு. தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கையை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொண்டு ஆண்டாண்டு கூறிக் கொண்டிருந்தது தான் எஞ்சியது. எதுவும் அர்த்த புஷ்ரியுடன் நடைபெறவில்லை.

அப்போது போர் அனர்த்தத்தினால் அவலங்களைச் சந்தித்து சிறகுடைந்த பறவை போன்று கிடந்த எமது இனம் மீண்டும் போர் ஓய்வு நிலையில் தத்திப் பறக்க எத்தனிக்கும் போது, இந்தப் பேர் அனர்த்தத்தின் கோரத் தாண்டவம் கணப் பொழுதில் அரங்கேறி விட்டது.

கடந்த வருடம் முற்றத்தில் பொங்கலிட்டு, படையலிட்டு வழிபட்ட ஆயிரக் கணக்கான மக்கள் இன்று அகதி முகாம்களில் முடங்கிக் கிடக்கின்றனர்.

கோலமிட்ட முற்றம் இன்று மண்ணோடு மண்ணாகி விட்டது. புத்தாடை, பட்டாசு கொழுத்தி கொண்டாட்டம கண்டு குதூகலித்து மகிழ்ந்த இளம் சிறார்கள் எத்தனையோ பேர் ஊழித்தாண்டவத்தில் அள்ளுண்டு போய் விட்டனர். பல நூறு சிறார்கள் பரிதவித்து நிற்கின்றனர்.

தாயை இழந்து, தந்தையை இழந்து, கணவனைஇழந்து, மனைவியை இழந்த ஏக்கமும் வேதனையும் வெந்தணலாகிக் கொண்டிருக்கிறது. இனியும் ஒரு ஆழிப்பேரலை எம் தேசத்தை அனர்த்தம் பண்ணாதா என்ற ஏக்கமே மக்களை ஆட்டிப் படைக்கின்றது.

இந்த அவலங்களிலிருந்து மீட்சி பெறுவதற்கான நிவாரண உதவிகள் மீள் கட்டுமானப் புனரமைப்பு வேலைகள் தங்கு தடையின்றி வழங்கப்பட வேண்டும்.

சர்வ சமூகத்தின் பிரதிநிதிகள் தமிழர் தாயகத்திற்கு வந்து அழிவுகளைப் பார்த்து மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு கூட சிறிலங்கா அரசு கதவடைப்புச் செய்துள்ளது.

ஐ. நா. செயலர் கொபி அனான் அவர்கள் பாதிப்புற்ற பகுதிகளுக்குச் செல்வதற்கு ஆரம்பமாக இருந்த போதும் சிறிலங்கா அரசு மேற்கொண்ட அனுகு முறைகள் காரணமாக கொபி அனானின் வருகை தவிர்க்கப்பட்டது. இவ்வாறான நிலையில் உடுத்த உடையுடன் எஞ்சியிருக்கும் உறவுகளுக்கு இன்று நாம் உதவுவோமாக.

தை பிறந்தால் வழி பிறக்கும் என நம்பியிருக்கும் தமிழினம் எதிர்காலத்தில் நிம்மதியாக வாழும் சூழல் ஏற்பட வேண்டும்.

இன்று நிர்க்கதியாகியிருக்கும் தமிழ் பேசும் உறவுகள் சொந்த அமைவிடம் அமைத்து வாழும் ஒரு சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

மீண்டும் கடலலை வருகிறது. என்ற கவலையுடன் உயிரைக் காப்பாற்ற ஓடும் அவலம் இனியும் வரக்கூடாது.

இலங்கையில் அழிவிலிருந்து எவ்வாறு உயிர் தப்புவது என்ற சிந்தனையோட்டத்தால் தமிழினத்தின் விடுதலை உணர்வு மழுங்கடிக்கக் கூடாது. நாம் பலமாக நிற்போம். எமது உரிமையை வென்றெடுப்போம். இயற்கையின் சீற்றத்தையும் எதிர்கொள்வோம், மீள்வோம் என்ற உறுதியும், தன்னம்பிக்கையும் கொண்டு இத் தைத்திரு நாளை வரவேற்போமாக.

# மரண வீட்டில் மடியில் வீழ்ந்து வெடித்த குண்டு

ஆழிப்பேரலை அனர்த்தம் மட்டக்களப்பு மாவட்டத்தையும் விட்டு வைக்கவில்லை. கரையோரப் பிரதேச கிராமங்களில் வாழ்ந்த ஆயிரக்கணக்கான மக்களை அள்ளுண்டு போனதன் சோகமும், வேதனையும், தவிப்பும், குமுறலும், முனகலும் எம் தேசத்தை விட்டு நீங்கவில்லை. இந்த நிலையில் கடந்த 8ஆம் திகதி வாகனேரியில் மரணவீடு ஒன்றில் வீசப்பட்ட கைக் குண்டு மூன்று பொது மக்களைப் பலிக்கடாவாக்கிவிட்டது.

மற்றும் 46 பேர் இரத்தக் காயங்களுடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இரு மதக் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட தகராறின் விளைவு இராணுவத்துடன் சேர்ந்து செயற்படுகின்ற சில தேசவிரோதிகளே இக்கு



ண்டுத் தாக்குதலுக்குக் காரண கர்த்தாக்கள்.

மட்டு அம்பாறை அரசியல் துறையும் இக்குண்டுத் தாக்குதலைக் கண்டித்திருந்தனர். இச்சம்பவத்தின் பின் னர் சந்தேகத்தின் பேரில் வாழைச்சே னையில் வைத்து இருவர் சிறிலங் காப் பொலிசாரினால் கைது செய்யப்ப ட்டுள்ளனர்.

மதபோதகர் ஒருவரின் மகனான மணியம் ஜெயப்பிரகாஜ் (24) கணபதிப்பிள்ளை கமலநாதன் (20) ஆகிய இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். இச்சம்பவத்தில் காயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் உள்ளங்களின் உணர்வுகள் இவை.

"டும்" என்று சத்தம் கேட்டதும் நாங்கள் நினைத்தோம் கடல் தான் பொங்கி வருகின்றது என்று. ஏனென்றால் கடல் கொந்தளித்த அன்று அவ்வாறான சத்தம் ஒன்று கேட்டதாக ஆட்கள் கூறினார்கள். ஆனால் பிறகுதான் பார்த்தம் விளையாடிக் கொண்டிருந்த எங்கட தம்பி கால் மேலையும், தலை கீழையுமாய்க் கிடந்து அவதிப்படுகின்றார்கள்.

இவ்வாறு அண்மையில் வாகனேரியில் கிரனைட் வீச்சு சம்ப



வத்தில் படுகாயமடைந்து மட். போதனா வைத்தியசாலையின் 09 ஆம் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் வாகனேரியைச் சேர்ந்த பூபாலபிள்ளை சித்திரவேல் எனும் குடும்பஸ்த்தர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்: எனது அம்மம்மா இறந்து இரண்டாவது நாள் சாவீட்டுக்குச் செல்வதற்காக சம்பவதினம் பி.ப. 05.00 மணியளவில் சாப்பிட்டுவிட்டு எனது வீட்டில் இருந்து அங்கு சென்றேன்.

சாவீட்டிலே உறவினர்கள், நண்பர்கள் என நூற்றுக் கணக்காணவர்கள் காணப்பட்டனர். ஆண்கள் அனைவரும் கூட்டம், கூட்டமாக குழுமி இருந்து கடதாசிக் கூட்டம் விளையாடிக் கொண்டிருந்தோம். அப்போது நேரம் 09.30 மணியிருக்கும் "டும்" என்று ஒரு சத்தம் கேட்டது.

அப்போது விளையாடிக் கொண்டிருந்த அனைவரும் திடுக்கிட்டு எழுந்தோம். நாங்கள் நினைத்தோம் கடல் தான் பெருக்கெடுத்து வருகின்றதாக்கும் எண்டு. பிறகு பார்த்தம் எங்களுக்குப் பக்கத்தில் விளையாடின தம்பியாக்கள் மண்ணுக்குள் கிடந்து உருண்டு வாறாங்க. கறுப்பாக புக எழும்புது, பெற்றோல் மெக்ஸ் வெளிச்சத்தில் நல்லாத் தெரியுது.

சனமெல்லாம் கீர், வார் என்று கத்துகின்றார்கள். அங்கும் இங்குமாக அனைவரும் சிதறி ஓடுகின்றார்கள். அப்போது பார்க்க சனமெல்லாம் ஓடின மற்றப் பக்கம் பார்த்து "டும்" என்று அடுத்து கேட்டது. அதோடே ஓடின சனம், ஓடினமாதிரியும், விழுந்த சனம் விழுந்த மாதிரியும் கிடந்தது தான்.

**" யாருக்கு வெடிபட்டது யாரை யார் தூக்குவது எண்டு தெரியாமல் எல்லோரும் ஓடித்திரிந்தனர். நிலத்தில வெடிபட்டுக்கிடந்த ஆட்களெல்லாம் எழும்ப ஏலாம 'ஐயோ, அம்மா' எண்டு நிலத்தில கிடந்து கையக் கால அடிச்சாங்க"**

யாருக்கு வெடிப்பட்டது யாரையார் தூக்குவது என்று தெரியாமல் சனங்கள் ஓடித்திரிந்தனர். எழும்ப ஏலாம சனமெல்லாம் நிலத்தில் கிடந்து "ஐயோ அம்மா" என்று கையக் காலப் போட்டு அடிச்சுதுகள். அதில் எனக்கும் தலையிலும், கையிலும், கண்ணிலும், காலிலும் வெடிப்பட்டுத்து வெடிப்படாத ஆட்கள் என்ன செய்தார்களெண்டா வெடிச் சத்தம் கேட்டவுடனே சனமெல்லாம் அங்காலையும், இங்காலையும் சிதறி நாங்க இருந்த வீட்டுக்குப்பின் பக்கமாக காட்டுப் பக்கம் ஓடித்தாங்க. வெடிப் பதட்டத்துடன் ஒரே ஓட்டமாகக் காட்டுக்க ஓடித்தாங்க. அதனால் வெடிப்பட்ட ஆக்களைத் தூக்கயும் ஆளில்லை சாத்தையும் ஆளில்லை. சனம் கிடந்து அவதிப்பட்டுதுகள்.

பிறகு அந்தக் காட்டில ஓடின ஆட்கள்தான் சாவீட்ட கத்திற சத்தம் கேட்டு ஒளிச்சி, ஒளிச்சி ஒன்றும், இரண்டுமாக வந்து அங்க

**நேரடி ரிப்போர்ட்**
**எம்.யுவராஜ்**

கிடந்த ஆட்களைக் கண்டு பதறியடிச்சி தூக்கித், தூக்கிச் சாத்தினார்கள். பிறகு எங்கள ஏத்திறத்திற்காக மெசின் எடுத்துவரப் போனாங்க. ஆனால் அங்க மெசின்காரன் இல்லையாம். என்று திரும்பி வந்தாங்க. பிறகு பார்க்க பெரிய வாகனம் இரையிற சத்தம் கேட்குது.

அங்க பார்த்தா ஆமிக்கார ஆட்கள் ஓடிவாறாங்க காயப்பட்ட ஆட்கள் எல்லாரையும் தூக்கித், தூக்கி அவங்கட வாகனத்தில் ஏத்தினாங்க, அதோட மெயின் றோட்டால வந்த வாகனங்களையும் மறிச்சி, மறிச்சி நிப்பாட்டி அதையும் கொண்டு வந்து ஆட்களை ஏத்தினார்கள். எல்லாரையும் கொண்டு வந்து வாழைச்சேனை வைத்தியசாலையில் சேர்த்தார்கள்.

அங்க சொன்னாங்க இங்க நாங்க ஒன்றும் செய்ய முடியாது என்று. உடனே எல்லோரையும் கிளீன் பண்ணிப் போட்டு அம்பிலன்சில மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு இரவோடு இரவாக ஏத்தினாங்க. விடியப் பார்த்தால் மட்டக்களப்பு வைத்தியசாலையில் கிடக்கிறம்.

இதில மூன்று பேர் அந்த



இடத்திலே இறந்து விட்டாங்க. இன்னும் இரண்டு பேர் அவசர சிகிச்சைப் பிரிவில் இருக்கிறாங்க. ஏனைய 43 பேர் வாட்டில இருக்கிறம். எல்லோரும் தூரத்துக்கார ஆட்களில்ல. எல்லாரும் மாமன், மச்சான், அண்ணன், தம்பிதான். நெருங்கிய உறவுக்காரர்கள் தான் என்றார்.

இந்தச் சம்பவத்தை யார் செய்திருப்பார்கள்? இதன் பின்னணி யார் என்று கேட்ட போது அதற்கு அவர் கூறினார் இறந்தவர் என் அம்ம



ம்மா ஏற்கனவே எங்களுக்குள் மதப் பிரச்சினை ஒருக்கா உருவானது. அதன் பின்னணியாக இந்தச் சம்பவம் நடந்திருக்கலாம் என நாங்கள் சந்தேகப்படுகின்றோம் என அதற்கு அவர் பதிலளித்தார்.


எது எப்படி இருந்தாலும் இது ஒரு மனித நேயமற்ற செயல். இயற்கை அனர்த்தத்தினால் இன்று எமது தாயகம் சொல்லொண்ணா இழப்புக்களைச் சந்தித்து இருக்கும் இவ் வேளையில் சிறிய, சிறிய பிரச்சினைக்கெல்லாம் மனிதனைப் பலி கொள்வது ஒரு மிருகத்தனமான செயல். அந்த மரண வீட்டில் காணப்பட்ட ஆயிரக் கணக்கானோரில் காணப்பட்ட அந்த உறவுகளில் மூவர் கொல்லப் பட்டும், இருவர் உயிருக்காகப் போராடிக் கொண்டும் இருக்கும் வேளையில் 43 பேர் படுகாயங்களுக்குள்ளாகி இருக்கின்றனர்.

இச்சம்பவத்தில் அகப்பட்டு காயமுற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் மற்றுமொருவரான மாங்கேணியைச் சேர்ந்த வேலன் சுந்தரம் என்பவர் கூறுகையில்:-

(தொடர்ச்சி 19ம் பக்கம்.)

# மட்டு மாவட்ட அனர்த்த நிவாரணப் பணிகளில் விடுதலைப் புலிகள் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றார்கள்

## மட்டு அரச அதிபர் வே. சண்முகம் ஈழநாதத்திற்கு வழங்கிய நேர்காணலில் தெரிவிப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் பாதிப்புற்றோருக்கான துயர் துடைப்புப் பணிகள் மற்றும் நிவாரணப் பகிர்வுகளில் விடுதலைப் புலிகள் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றனர். அவர்களால் எவ்வித இடையூறுகளும் இல்லை. இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் வேல்முருகு சண்முகம் ஈழநாதம் வாரவெளியீட்டுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்தார்.

சுனாமிப் பேரலைத் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு உயிர்களையும், உடமைகளையும் இழந்து நலன்புரி நிலையங்களில் தங்கி இருக்கும் மக்களது தேவைகள், நிவாரணப் பணிகள் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் வே.சண்முகம் அவர்கள் ஈழநாதம் பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலின் முழுவிபரம் வருமாறு.

**கேள்வி:-** *சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட போது பாதிக்கப்பட்ட மக்களின் தொகை எவ்வளவு? தற்போது அதன் எண்ணிக் கையைக் கூறமுடியுமா?*

**பதில்:-** அனர்த்தம் ஏற்பட்ட அன்று பாதிக்கப்பட்ட மக்கள் பாடசாலைகள், பொது இடங்களை நோக்கி ஓடி வந்தனர். அதனடிப்படையில் 26ஆம் திகதி பிப அண்ணளவாக மதிப்பீட்டின்படி 63,000 குடும்பங்கள் களுவாஞ்சிகுடி தொடக்கம் வாகரை வரையில் இடம்பெயர்ந்து இருந்தார்கள். தற்போது 18,564 குடும்பங்கள் நலன்புரி நிலையங்களில் தங்கி இருக்கின்றார்கள். 9,333 பேர் உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

**கேள்வி:-** *அனர்த்தம் நடந்த அன்று அரசாங்க அதிபர் என்ற நிதியில் நீங்கள் எத்தகைய நடவடிக்கைகளை மேற் கொண்டீர்கள் என்று கூறமுடியுமா?*

**பதில்:-** நாங்கள் உடனடி நடவடிக்கையாக சமைத்த உணவைக் கொடுப்பதற்கான நடவடிக்கையை எடுத்தோம். 63,000 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. அடுத்த நாள் மழை, மூன்றாம் நாள் மீண்டும் அலை வருகிறது என்று வீட்டுக்குப் போன மக்கள் மீண்டும், முகாமை நோக்கி வந்தனர். எல்லாமாக 70,000 குடும்பங்கள் ஒரு கிழமைக்குள் இருந்தனர்.

**கேள்வி:-** *சமைத்த உணவுகளை எந்த விதத்தில் பெற்றுக் கொடுத்தீர்கள்.*

**பதில்:-**சில நிறுவனங்கள் மூலமாகவும், கூட்டுறவுச் சங்கங்களில் இருந்த பொருட்களை வாங்கி கிராம சேவகரூடாக சமைத்துக் கொடுப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தோம்.

**கேள்வி:-** *நிவாரண மீட்புப் பணிகளில் அரசாங்கத்தின் உதவியாக இதுவரையும் எவ்வளவு தொகை கிடைத்திருக்கிறது என்று கூறமுடியுமா?*

**பதில்:-** பத்து மில்லியன் ரூபா உடனடி நிதியுதவியாக அரசு வழங்கியது. இதில் இறந்தவர்களுக்க ரூபா 15,000 படி தற்போது கொடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

**கேள்வி:-** *சில நலன்புரி நிலையங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வரும் நிவாரணப் பொருட்களை உடனடியாக வழங்காது அவற்றைச் சேமித்து வைப்பதாகவும் இது தங்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்துவதுடன் அவற்றுக்கு என்ன நடக்கிறது என்பது தெரியாது என்றும் மக்கள் குறைபடு கிறார்களே இதற்கு உங்கள் பதில் என்ன?*

**பதில்:-** சில தனிப்பட்டவர்கள் கொண்டுவரும் அதாவது வெளியிடங்களில் உள்ள மக்களிடமிருந்து சேகரித்து பல்வேறு வகையான பொருட்களைக் கொண்டு வருகிறார்கள். அத்தகைய பொருட்களை உடனே அந்தந்த நலன்புரி நிலையங்களுக்கே கொடுக்கிறார்கள். சிலவேளைகளில் எங்களுக்குத் தெரியாமலே அவர்களிடம் கொடுத்து விட்டுப் போகிறார்கள். எங்களிடம் உதவி வழங்க முன்வந்தவர்களுக்கு எப்படி வழங்க வேண்டும் என்பது பற்றி வழிப்படுத்தி விடுவோம் என்றார்.

**கேள்வி:-** *அரசாங்கம் வழங்கும் நிவாரண உதவி மட்டக்களப்பு மாவட்டத்திற்குப் போதுமானதாக உள்ளதா? அல்லது இன்னும் தேவைப்படுகிறதா?*

**பதில்:-**அரச நிவாரணப் பொருட்கள் மட்டக்களப்பு மாவட்டத்திற்குப் போதுமானதாக இருக்கின்றது.

**கேள்வி:-** *சுனாமியால் பாதிப்புற்ற மக்களுக்கு வழங்கப்பட்ட அரச நிவாரணத்தை அடிப்படையாகக் கொண்டு ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு வழங்கப்படுகின்ற நிவாரணம் எவ்வளவு? அதன் பெறுமதி யாது?*

**பதில்:-**அரசாங்கத் தரப்பால் பாதிக்கப்பட்ட ஒரு குடும்பத்திற்கு ரூபா 2500 பெறுமதியான சமையல் உபகரணங்கள் வாங்குவதற்கு கொடுக்கின்றோம். அதைவிட, சமூக சேவைத் திணைக்களத்தால் ஒரு வாரத்திற்கு ஒருவருக்கு ரூபா 375 பெறுமதியான உணவுப் பொருட்களை வழங்குவதற்கு தற்போது கூப்பன் முறை ஒன்றை நடைமுறைப் படுத்துவதற்குரிய செயற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

**கேள்வி:-** *மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்ட தங்களது சொந்த இடத்திற்கு மீண்டும் சென்று குடியமர்வதற்கு தயக்கம் காட்டுகிறார்கள். அத்தகைய மக்களை நிரந்தரமாக வீடுகளை அமைத்து குடியமர்வதற்கு எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறீர்கள்.?*

**பதில்:-** தற்போது அரசாங்கத்தின் தீர்மானம் கடற்கரை ஓரங்களில் 500 மீற்றருக்கு உட்பட்ட பகுதிகளில் குடியிருப்புக்களை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யக்கூடாது. அதன் அடிப்படையில் நாவலடி, திருச்செந்தூர் டச்பார் போன்ற கடற்கரையை அண்மித்து வாழ்ந்த மக்களை வேறு இடங்களில் குடியமர்த்த தீர்மானித்துள்ளோம்.

**கேள்வி:-***கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களை மீளக் குடியேற்ற நீங்கள் தீர்மானித்துள்ள இடங்கள் எவை என்று கூறமுடியுமா?*

**பதில்:-**தற்போது சத்துருக்கொண்டான், திராய்மடு போன்ற இடங்களைத் தெரிவு செய்திருக்கிறோம்.

**கேள்வி:-** *கடற்கரைப் பிரதேசத்தில் 500 மீற்றருக்குட்பட்ட பகுதியில் பாதிக்கப்பட்டிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கையைக் கூறமுடியுமா?*

**நேர்காணல்:-கே.கிரிஜா**

**பதில்:-** 16,370 வீடுகள் முற்றாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட இவை 500 மீற்றருக்குட்பட்டவையே. 6375 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்திருக்கின்றது.

**கேள்வி:-***நிவாரண, மீட்பு பணிகளின் போது விடுதலைப் புலிகள் தடையாக இருப்பதாக அரச ஊடகங்கள் கூறுகின்றன. எனவே மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அவர்களின் நடவடிக்கை எத்தகையது?*

**பதில்:-**விடுதலைப் புலிகள் எங்களுக்கு எதுவித தடையையும் ஏற்படுத்தவில்லை. மாறாக அவர்களும் சேர்ந்துதான் நிவாரணம், மீட்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். இங்கு எங்களால் நியமிக்கப்பட்ட குழுவில் நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் தயாமோகனும் அங்கம் வகிக்கிறார். அவரும் சேர்ந்துதான் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றார் தடையென்று கூறுவதற்கில்லை.

**கேள்வி:-***தமிழீழ விடுதலைப் புலிகள் உங்களுக்கு எவ்வாறான உதவிகளை வழங்குகின்றார்கள் என்பது பற்றி விளக்க முடியுமா?*

**பதில்:-** விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் குறிப்பாக வாகரை போன்ற பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருட்களை அவர்களே பொறுப்பெடுத்து மக்களுக்கு வழங்குவதுடன் மீட்புப் பணிகளிலும் ஈடுபடுகின்றார்கள். விடுதலைப் புலிகளால் எங்களுக்கு உதவி கிடைக்கின்றதே தவிர அவர்களால் எவ்வித தடையும் இல்லை. குறிப்பாக- 8ம் திகதி களுவாஞ்சிகுடிக்கு பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிடச் சென்றபோது விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள், மீட்புப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததை என்னால் அவதானிக்க முடிந்தது.

**கேள்வி:-** *நிவாரணம், மீட்புப் பணிகளில் அரச அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவ்வாறான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர் ?*

**பதில்:-** அரச உத்தியோகஸ்தரைப் பொறுத்த மட்டில் அனர்த்தம் நடந்த முதலாவது வாரத்திலேயே பெரும்பாலான அரச உத்தியோகஸ்தர்கள் வந்து அறிக்கை சமர்ப்பிக்கவில்லை. எனவே அவர்களுக்கு ஊடகங்கள் ஊடாக "உடனே வேலைக்குச் சமூகமளிக்க வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் வேலையில் இருந்து நீக்கப்படுவீர்கள்" என்ற அறிவித்தல்களைக் கொடுத்தோம். தற்போது எல்லோரும் வேலையில் இணைந்து கொண்டிருக்கிறார்கள், அவர்களும் எங்களுக்கு முடிந்தளவு ஒத்துழைப்பு வழங்குகிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்களால் முடிந்த ஒத்துழைப்பை வழங்குகிறார்கள்.

**கேள்வி:-** *சுனாமிப் பேரலையால் பாதிக்கப்படாத அரச ஊழியர்களும் சேவைக்குச் செல்லவில்லை என்று பரவலான கருத்து நிலவுகின்றதே. இது உண்மையா?*

**பதில்:-**அப்படியான ஒரு தகவல் வந்தபோதுதான் மேற்குறித்த தகவலை ஊடகங்கள் மூலமாகத் தெரியப்படுத்தினோம். இதை அறிந்தும் வேலைக்குச் சமூகமளிக்காது இருக்கும் அரச சேவையாளர்களை சேவையில் இருந்து நீக்குவதற்கான கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே இவை எல்லாவற்றையும் தாமாக உணர்ந்து செய்யப்பட வேண்டிய விடயங்கள் சிலர் இதனைச் சிந்திப்பதில்லை.

நானும் பாதிக்கப்பட்டவர்தான். கடந்த 26ஆம் திகதி 11 மணிக்கு எமது காரியாலயத்திற்கு வரமுடியாமல் நின்றேன். எம்.எல். காரியாலயத்தில் திறப்பு இல்லை. பிரதேச செயலாளருக்கு திறப்பு எதுவென்று தெரியாது. உடனே எமது அலுவலகக் கதவை உடைத்து திறந்து உடனே பிரதேச செயலாளர், கிராம உத்தியோகஸ்தர்களைச் சந்தித்து கலந்துரையாடி பாதிப்பட்ட மக்களுக்குரிய சமைத்த உணவை வழங்குவதற்கு நடவடிக்கையை மேற்கொண்டோம்.

**கேள்வி:-** *வெளிநாட்டு இராஜதந்திரிகள் பாதிக்கப்பட்ட பிரதேசங்களையும், மக்களையும் வந்து பார்வையிட்டுச் சென்றார்களா?*

**பதில்:-** இந்திய உயஸ்தானிகர் வந்து போனார். பிரித்தானிய உயஸ்தானிகர், பிரித்தானிய அமைச்சர் போன்றோர் வந்து பாதிக்கப்பட்ட பகுதிகளையும், மக்களையும் பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

**கேள்வி:-** *வெளிநாட்டவர்களின் உதவி எவ்வாறு அமைந்திருந்தது?*

**பதில்:-** அவர்களிடம் எங்களது தேவையை முன்வைத்திருக்கிறோம் அவர்கள் போய் அரசாங்கத்தின் ஊடாகத்தான் அவர்களது நிவாரண உதவிகள் கிடைக்கும்.

**கேள்வி:-** *மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போதைய நிலையில் எவ்வகையான உதவிகளை நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?*

**பதில்:-** தற்போது உணவுப் பொருட்கள் வழங்கிக் கொண்டிருக்கின்றோம். அடுத்ததாக பாடசாலைகள் ஆரம்பமாக இருப்பதனால் பாதிக்கப்பட்ட மக்களைத் தங்க வைக்க தற்காலிகமான இடத்தைத் தெரிவு செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அதனைச் செய்து ஆறு, ஏழு மாதத்திற்கு அவர்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கிக் கொண்டிருக்கும் போதே நிரந்தரமான வீடுகளை அமைத்தும் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகளைத் திட்டமிடக் கூடிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கின்றோம்.

எங்கே, எந்தெந்த இடங்களில் வீடுகளைக் கட்டிக் கொடுப்பது, எந்தமாதிரியான வீடுகளைக் கட்டுவது போன்ற விபரங்களை நகர எண்ணிக்கை, வீடுகளின் எண்ணிக்கைகள் தொடர்பாக அதற்குரிய வர்களைச் சேர்த்து திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.

**கேள்வி:-** *வெளிநாடுகளைச் சேர்ந்த வைத்தியர்கள் மட்டக்களப்பிற்கு வந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு வைத்திய சேவை வழங்குகின்றார்களா?*

**பதில்:-** ஆம், பிரான்சிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் வைத்தியர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் நடமாடும் வைத்திய சிகிச்சைகளை வழங்கி வருகிறார்கள். அவர்களுக்கு நாங்கள் டி.பி.எஸ் தலைமையில் அவர்கள் எந்தெந்த இடத்திற்குச் சிகிச்சை அளிக்க வேண்டும் என்பது பற்றி அவர்கள் தீர்மானிப்பார்கள்.

**கேள்வி:-** *பாடசாலைகளில் தஞ்சம் அடைந்துள்ள மக்களை எங்கு தங்க வைப்பதென்று மாற்று நடவடிக்கையை மேற்கொண்டுள்ளீர்கள்?*

**பதில்:-** மட்டக்களப்பு நகர்ப்பகுதியில் பாடசாலைகளில் தஞ்சம் அடைந்திருக்கின்ற மக்களை சத்துருக்கொண்டான், மாமாங்கம், சிங்கள மகா வித்தியாலயம் போன்ற சில இடங்களை அடையாளம் கண்டு அந்த இடங்களுக்கு மாற்றவுள்ளோம்.

**கேள்வி:-** *இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான உதவிகள் எந்த விதத்தில் கிடைக்கின்றது?*

**பதில்:-**யுனிசெவ் சில சில மீள் நடவடிக்கைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். தாய், தந்தையர்களை இழந்து அனாதைகளான குழந்தைகள் சம்மந்தமான விபரங்களை எடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றோம். இவ்வாறு பாதிக்கப்பட்ட குழந்தைகளைத் தத்தெடுப்பதற்கு சில பேர் முன்வருகின்றார்கள். ஆனால் அரசாங்கம் திடீரென்று அந்த ஏற்பாடுகளைத் தடைசெய்துள்ளது. ஏனெனில் சிலர் குழந்தைகளைக் களவாடி வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள். அதனால் குழந்தைகளை சரியாக இனம் கண்டு அதன் பின்பு தான் அவர்களை எவ்வாறு பராமரிப்பது என்பதை அரசாங்கம் முடிவெடுக்கும் என்றார்.

# சுனாமியும் சுவாமியும்


''மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல'' இருபது ஆண்டு காலம் போரினால் அழிவுண்ட வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்ப பகீரத முயற்சி செய்து கொண்டிருந்த தமிழீழ கடலோர தமிழ் மக்களின் வாழ்க்கையோடு 'விதி' மீண்டும் விளையாடியுள்ளது.

மின்னாமல் முழங்காமல், சொல்லாமல் கொள்ளாமல், கண்ணை மூடி முழிக்கு முன் வரலாறு காணாத அனர்த்தங்களையும் அவலங்களையும் உயிர் அழிவுகளையும் சுனாமி ஏற்படுத்தியுள்ளது.

ஊருக்குள் அழையா விருந்தாளியாக நுழைந்த சுனாமி சாதி மத பேதமின்றி எல்லோரையும் விழுங்கியுள்ளது. தேவாலயங்களில் திருப்பலி பூசையில் ஈடுபட்டிருந்த கிறித்தவர்கள், மசூதியில் குரான் ஓதிக்கொண்டிருந்த இஸ்லாமியர், கோயில்களில் வழிபாடு செய்து கொண்டிருந்த இந்துக்கள், பௌத்தர்கள் எல்லோரும் பலியானார்கள்.

முன்னாளில் கடற்கோளினால் நிலம் விழுங்கப்பட்டதை சங்க இலக்கியங்கள் பதிவு செய்து வைத்துள்ளன. சிலப்பதிகாரம் எழுதிய இளங்கோ அடிகள் தன் காலத்துக்கு முன் ஏற்பட்ட கடற்கோளை குறிப்பிடுகிறார்.

''வடிவேல் எறிந்த
வான்பகை பொறாது, பஃறுளி
ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள,
வடதிசை கங்கையும்
இமயமும் கொண்டு



தென்திசை ஆண்ட
தென்னவன் வாழ்க!''

பஃறுளி ஆறும் அதனை அடுத்து இருந்த குமரிமலையும் கொடுங்கடல் கொண்டதாக அடிகள் குறிப்பிடுகிறார். இந்தக் கடற்கோள் 2,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்டிருக்க வேண்டும்.

சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது கி.பி. 1450ம் ஆண்டில் ஏற்பட்ட பயங்கர கடற்கொந்தளிப்பால் தமிழகத்தின் தென்பகுதி கடலில் மூழ்கின. இப்படி தமிழகத்தின் நிலப்பரப்பில் இருந்து துண்டிக்கப்பட்ட நிலப்பரப்பில் கச்சதீவு உட்பட 11 தீவுகள் உருவாகின. இப்படித் தோன்றிய தீவுகள் இராமநாதபுரம் சேதுபதி மன்னர்களுக்குச் சொந்தமாக இருந்தன. சுனாமி கடல் கொந்தளிப்பு இதற்கு முன்பு ஏற்பட்டதில்லை. சுனாமி அலைகளின் தாக்குதல் பற்றி இப்போதுதான் முதல் முறையாக தெரியவந்துள்ளது.

இதற்கு முன்பு சுனாமி அலைகள் யப்பான், அமெரிக்கா, இந்தோனேசியா ஆகிய 3 நாடுகளை மட்டும் தாக்கி இருக்கின்றன. எனவேதான் இந்த கொடூர அலைகளுக்கு 'சுனாமி' என யப்பானிய மொழியில் பெயரிடப்பட்டுள்ளது. சுனாமி என்றால் 'துறைமுக அலை' என்று பொருளாம்.

சுனாமி அலைகள் கடலில் எப்படித் தோன்றுகின்றன? பூமியின் 71 விழுக்காடு நிலப்பரப்பு கடலுக்கு அடியில்தான் இருக்கிறது. அந்த 71 விழுக்காடு நிலப்பரப்பில்தான் நிறைய எரிமலைகள் உள்ளன. அவை அடிக்கடி வெடித்துச் சிதறுகின்றன. அது போல கடலுக்கு அடியில் உள்ள 71 விழுக்காடு நிலப்பரப்பில் நிலநடுக்கம் அடிக்கடி இடம்பெறுகின்றன. எரிமலை மற்றும் சக்தி வாய்ந்த நில நடுக்கங்கள் ஏற்படும்போது, அவற்றின் அதிர்வுகள் கடல் தண்ணீரில் எதிரொலிக்கும்.

சாதாரணமாக ஒரு குளத்தில் கல் வீசினாலே அந்த தண்ணீரில் அதிர்வு ஏற்பட்டு வளையம், வளையமாக அலைகள் கரை வரை போவதைப் பார்க்கலாம்.

நடுக்கடலில் நிலநடுக்கத்தால் ஏற்படும் அதிர்வு அலைகளும் இதே மாதிரித்தான் வளையமாகக் கிளம்பி கரையை நோக்கி பாய்ந்து வரும். இந்த சுனாமி அலைகள் வழக்கமாக கடலில் சந்திரனின் ஈர்ப்புச் சக்தியாலும் காற்று அழுக்கத்தாலும் எழும் அலைகள் போல அல்லாது அவை மிக மிக சக்தி வாய்ந்தவை.

கடந்த டிசெம்பர் நத்தார் நாளன்று காலை சுமாத்ரா தீவின் தென்கிழக்கே 250 கி.மீ தொலைவில் ரிக்டர் அளவில் 9 புள்ளி நிலநடுக்கம் ஏற்பட்டது. பூமிக்கு அடியில் நில நடுக்கம் இரண்டு காரணங்காளால் ஏற்படுகின்றன. பூமிக்கு கீழேயுள்ள தீக்குழம்பின் மீது நாம் வாழும் தளம் அடுக்கு முறையில் ஒன்றன் மேல் ஒன்றாகவும் அருகருகாகவும் இருக்கிறது. இந்த அடுக்கில் விரிசல் ஏற்பட்டு ஒன்றில் இருந்து ஒன்று விலகும் போது நில நடுக்கம் ஏற்படுகிறது. அல்லது ஒன்றோடு ஒன்று உராயும் போதும் நில நடுக்கம் ஏற்ப டுகிறது. அப்போது ஏற்படும் அதிர்வுகள் கடலின் மேல்மட்டத்தில் எதிரொலிக்கும். மேலெழும் அலைகள் கரையை நோக்கிப் பாய்கின்றன.

இந்த அலைகள் கிளம்பி கரையை நோக்கிப் பாய்ந்து வரும்போது கடற்பகுதியில் அதன் தாக்கம் தெரியாது. ஆழ்கடலில் படகுகளில் மீன் பிடித்துக் கொண்டிருப்பவர்களைக் கூட இந்த அலைகள் சாதாரணமாக ஒரு குலக்கு குலக்கி விட்டு கடந்து வந்து விடும்.

கரையை நெருங்க நெருங்க சுனாமி அலைகள் தங்கள் சுயரூபத்தைக் காட்டத் தொடங்குகின்றன. கரையை நெருங்க சில கிலோ மீட்டர் தூரம் இருக்கும்போது சுனாமி அலைகள் சூடுபிடித்து 50 மைல் வேகத்தில் ஓ.. ஓ.. ஓ... என்ற பேரிரைச்சலோடு காதைக் கிழித்துக் கொண்டு செல்லும்.

கரையை நெருங்கியதும் சுனாமி அலைகள் மதம்கொண்ட யானை போல எம்பி எழுந்து உயரத்தில் சுழலும். குறைந்த பட்சம் 30 அடி முதல் 60 அடி உயரத்துக்கு கடல் தண்ணீர் கொந்தளித்து எழும்பும்.

உயரே எழும்பி சுழலும் கடற் கொந்தளிப்பு 3 கிலோ மீட்டர் தூரம் வரை ஊருக்குள் புகுந்து விடும். அந்தச் சமயத்தில் எதிர்கொள்ளும் மனித உயிர்கள், பொருட்கள் எல்லாவற்றையும் சுனாமி அலை துவம்சம் செய்து விடும். கடற்கரையை சுனாமி அலைகள் வெறித்தனமாக துவம்சம் செய்யும்போது அதன் சக்தி அணுசக்தி வெடிப்புக்கு ஈடான விளைவுகளை கொடுக்கிறது என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

மேலும் சுனாமி அலைகளின் எடை பல தொன் கணக்கில் இருக்கும். எனவேதான் இந்த அலைகள் பெரிய கட்டிடங்களை, கப்பல்களை மிக இலேசாக கவிழ்த்து விடுகின்றன.

**-நக்கீரன் -**

உலகில் சுனாமி அலைகள் பெரும்பாலும் பசிபிக் பெருங்கடல் பகுதியில்தான் தோன்றுகின்றன. இந்தியப் பெருங்கடலில் சுனாமி அலைகள் இதுவரை ஏற்பட்டதே இல்லை.

சுனாமி அலைகளை கண்டு பிடிக்க பசிபில் பெருங்கடல் பகுதியில் நவீன கருவிகளை அமெரிக்கா நிறுவி உள்ளது. எனவே சுனாமி அலைகள் பசிபிக் பெருங்கடலில் தோன்றும் போதெல்லாம் அமெரிக்கா தன் செயற்கை கோள்கள் மூலம் அதைக் கண்டு பிடித்து விடுகிறது. சுனாமி அலைகள் கரைக்கு எப்போது வரும் என்று அமெரிக்கா துல்லியமாக ஆராய்ந்து தன் மக்களை விளிப்புப்படுத்தி வெளியேற்றி விடுகிறது.

சுனாமி அலைகளின் முதல் தாக்குதல் பற்றிய எச்சரிக்கை நமக்குத் தெரியாமலே போய் விட்டது. முதல் தாக்குதல் நடந்த பிறகே இந்திய பெருங்கடலில் தோன்றிய சுனாமி அலைகள் பற்றி உலக ஆய்வு நிறுவனங்கள் தங்கள் பார்வையைத் திருப்பின.

ஹாவாய் தீவின் தலைநகரான கொனலுலுவில் (Honolulu) இருக்கும் ஆய்வு மையத்தில் டிசெம்பர் 12-26 நத்தார் நாளன்று காலை சுமாத்ரா தீவின் தென் கிழக்கே 250 கி.மீ தொலைவில் காலை ரிக்டர் அளவில் 9 புள்ளி நிலநடுக்கம் பதிவாகியது. அதன் விளைவாக கடல் அலைகள் 60 அடிக்கு எழும்பும் என்றும் பல ஆயிரம் மைல்கள் அது பயணிக்கும் என்பதும் ஆய்வாளர்களுக்குத் தெரிந்து விட்டது. உடனே இலங்கை நேரத்தின்படி காலை 7.00 மணிக்கு தங்கள் இணையதளத்தில் சுனாமி பற்றிய எச்சரிக்கை அறிவிக்கப்பட்டது.

அதாவது இலங்கையின் வட-கிழக்கு மற்றும் தென்பகுதியை சுனாமி அலைகள் தாக்குவதற்கு 2 மணித்தியாலங்கள் முன்னரே கொனலுலு ஆய்வு மையம் தனது இணையதளத்தில் எச்சரிக்கை விடுத்தது.

ஆனால் அந்த மையம் வேறு வழிகளில் அதனை அறிவிக்கத் தவறிவிட்டது. தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி மூலம் அந்த அனர்த்தத்தை வெளியிட்டிருக் கலாம். அல்லது இலங்கை, இந்தியா, பங் காளதேஷ் போன்ற நாடுகளில் உள்ள அமெரிக்க தூதுவராலயங்களுக்கு அந்தச் செய்தியை அறிவித்து கரையோரத்தில் வாழும் மக்களை அப்புறப்படுத்தச் சொல்லி இருக்கலாம். ஆனால் இதில் எதையுமே அந்த மையம் செய்யத் தவறிவிட்டது. அதன் காரணமாக ஆயிரக்கணக்கான உயிர்கள் அநியாயமாக கடலுக்குப் பலியாகின.

அறிவியலும் தகவல் தொழில் நுட்பமும் கொடிகட்டிப் பறக்கும் இன்றைய நவீன உலகில் இப்படியொரு தவறு ஏற்பட்டது மன்னிக்க முடியாத குற்றமாகும்.

தாய்லாந்து நாட்டுக்கு இந்தச் செய்தி கொடுக்கப்பட்டது. ஆனால் தாய்லாந்து அரசு தனது சுற்றுலாதுறைக்கு பின்னடைவு ஏற்படும் என்ற பயத்தில் அதனை மூடி மறைத்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

கண்கெட்ட பின் சூரிய வணக்கம் செய்வது போல இப்போதுதான் இந்தியா சுனாமியை முன்கூட்டி அறியும் கருவிகளை பல கோடி ரூபாயில் நிறுவ முயற்சி செய்கிறது.

சுனாமி கடலலைகள் உலக வரை படத்தில் ஆசியப் பிராந்திய நாடுகளின் அமைவிலும் மாற்றத்தை ஏற்படுத்துமளவுக்கு பலம்வாய்ந்தவையாக அமைந்து விட்டன என அமெரிக்காவின் பிரபல இயற்பியல் நிலவியல் அறிவியலாளர் ஹென் ஹட் கட் தெரிவித்துள்ளார்.

இந்த பூமி நடுக்கம் சுமாத்திராவின் தென்கிழக்கு மூலையின் 25 கி.மீ. அளவுக்கு பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதோடு அதனைச் சூழவுள்ள சிறுதீவுகள் அமைந்திருந்த நில அமைப்பை 20 மீட்டர் (66 அடி) தூரத்திற்கு அப்பால் தள்ளிச் சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தோனேசியாவின் வடமேல் முனையான சுமாத்திரா தீவும் 36 மீட்டர் தூரம் அதன் முன்னைய அமைவிலிருந்து தென்மேற்குத் திசைக்குத் தள்ளப் பட்டுள்ளது.

சுமாத்திரா தீவு இவ்விதம் அமைப்பு அடிப்படையில் நகர்த்தப்பட்டிருப்பது மட்டுமன்றி அதன் முன்னைய கடல் மட்டத்திலிருந்தும் மேலுயர்ந்து உள்ளது. இந்தியா மற்றும் பர்மா ஆகிய நாடுகள் முன்னரை விட அவற்றின் கடல் மட்டத்திலிருந்து தாழ்ந்திருக்கிறது.

சுமாத்ராவில் ஏற்பட்ட நிலநடுக்கம் அதைத் தொடர்ந்து எழுந்த சுனாமி கடல் பேரலைகள் பூமி தன்னைத்தானே சுற்றிச் சுழல்கிற அச்சுப்பாதையையே (கற்பனை கோடு) குலுக்கி அசைத்து விட்டது என்கிறார்கள். பூமியின் சுற்றுவட்ட பாதையில் மாற்றம் இருக்காது. ஆனால் பூமி தன்னைத் தானே சுற்றுவதில் சிறிய மாற்றங்கள் இருக்கக் கூடும். அதாவது பூமியின் சுழற்சி வேகம் சற்று அதிகரிக்கலாம். இதனால் ஒரு நாளின் நேரத்தில் 3 மைக்ரோ வினாடிகள் வரை குறையலாம்.

இயற்கையின் சீற்றத்தை தடுத்து நிறுத்த முடியாது. அந்தளவுக்கு அறிவியல் இன்னும் முன்னேறவில்லை. ஆனால் அதை முன்கூட்டியே அறிந்து தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கும் ஆற்றல் மனிதனுக்கு இருக்கிறது.

வழக்கம் போல பழமைவாதிகளும் மதவாதிகளும் பழியை அப்பாவியான கடவுள் மீது போட்டு விட்டார்கள். தமிழ்நாடு முதல்வர் செல்வி ஜெயலலிதா பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து சுனாமியால் ஏற்பட்ட அழிவுகள் 'கடவுள் சித்தம்' என்று சொல்லியிருக்கிறார். பதைக்கப் பதைக்க இரண்டு இலட்சம் மக்களைக் கொன்று குவித்த சுனாமி கடவுள் சித்தத்தால் ஏற்பட்டது என்பதும் அந்தக் கடவுளைக் கருணையற்ற ஒரு பாவியாக சித்தரிக்கும் முயற்சியாகும். ஜெயலலிதா சொல்வது உண்மை என்றால் அவர் குறிப்பிடும் கடவுள் கடவுளாகவே இருக்க முடியாது!

திரைப்பட நடிகர் ரஜனிகாந்த் 'உலகில் பாவிகள் அதிகரித்ததால் இந்த அனர்த்தம் ஏற்பட்டது' என்று தத்துவம் பேசியுள்ளார். அவரை மன்னிக்கலாம். அந்தப் பாவிகளில் அவரும் ஒருவரா இல்லையா. என்பதை அவர் சொல்லவில்லை.

சங்கர மடத்தை சேர்ந்த காவி ஒன்று 'மடத்துக்குக் களங்கம் கற்பித்தைப் பொறுக் காத ஆண்டவன் இந்த அனர்த்தத்தை ஏற்ப டுத்தி மக்களைத் தண்டித்துள்ளான்' எனப் பேசியிருக்கிறது. சங்கராச் சாரியாரை தீபாவளி நாளன்று கைது செய்தது ஜெயலலிதா. அவரல்லவா கடவுளின் தண்டனைக்கு ஆளாகி இருக்க வேண்டும்? மாறாக ஒன்றும் அறியாத அப்பாவி மக்கள் ஏன் தண்டிக்கப்பட வேண்டும்?



இப்படி சுனாமி விளைவித்த அழிவுக்கு ஆளாள் மனம் போன போக் கில் காரணம் கற்பிக்கிறார்கள்.

சிறையில் வாடும் ஜெயேந்திரர் 'சின்ன பெரியவாள் சிறைக்கு வந்து விட்டால் சந்திரமௌலீஸ்வரர் பூசை நின்று போய் விடும். நியமப்படி அது நடக் காமல் போனால், இப்போ சந்தித்திருப்பதை விட மிகப் பெரிய இயற்கை அழிவை நம் தேசம் சந்திக்க நேரிடும்' என்கிறார்.

சந்திரமௌலீஸ்வரர் பூசை நாளும் செய்த பலனாக சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் ஒருவர் இப்படி மற்றவர்களைப் பயமுறுத்துவது நல்ல நகைச் சுவையாக இருக்கிறது! 'திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயிலில் நடக்கிற மிகப்பெரிய திருவிழா, கார்த்திக தீபப் பெருவிழா. மலையில் தீபத்தை ஏத்துவது மீனவ இன மக்கள்தான். இவங்கள் 'பர்வத ராஜகுல மரபினர்' என்று சொல்றாங்க. சில சமயம், கார்த்திகை மாசத்தில் இரண்டு கிருத்திகை வருமாம். அதில் இரண்டாவது கிருத்திகையில்தான் நேரங்காலம் பார்த்து தீபம் ஏத்து வாங்களாம். இந்த ஆண்டு அப்படி ஒரே மாசத்தில் இரண்டு கிருத்திகை வந்ததை முன்கூட்டியே கவனிக்காமல் முதல் கிருத் திகையில் தீபத்தை ஏத்தினதால்தான் சுனாமிப் பயங்கரம் நடந்து மீனவர்கள் வாழ்க்கையை சூறையாடிடுச்சு' என்று திருவண்ணாமலை பக்தர்கள் புலம்புறாங்களாம்! ஆக இவர்கள் கற்பனை பண்ணுகிற கடவுள் 'அப்பு' போல ஒரு பெரிய தாதாவாக இருப்பார் போல் தெரிகிறது!


முடிவாக நிலநடுக்கும், எரிமலை, சுனாமி போன்ற இயற்கை நிகழ்வுகளை மனிதனால் தடுக்க முடியாது என்பது உண்மையே. ஆனால் அறிவியலின் துணையோடு அவற்றை முன்கூட்டியே அறிந்து தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அதன் தாக்கத்தைக் குறைக்கலாம். உயிரழிவுகளைப் பெருமளவு தவிர்க்கலாம்.

மதவாதிகள் நம்புவது போல் சுனாமிக்கும் சுவாமிக்கும் துளிகூட தொடர் பில்லை. பூசை செய்வதாலோ, யாகம் வளர்ப்பதாலோ, ஜெபம் செய்வதாலோ, நேர்த்தி செய்வதாலோ எந்தப் பயனும் இல்லை. புத்தியைப் பயன்படுத்தினால் மட்டுமே பயன் உண்டு.

**சுனாமி அலைகள் கடலில் எப்படித் தோன்றுகின்றன?**

**பூமியின் 71 விழுக்காடு நிலப்பரப்பு கடலுக்கு அடியில்தான் இருக்கிறது. அந்த 71 விழுக்காடு நிலப்பரப்பில்தான் நிறைய எரிமலைகள் உள்ளன. அவை அடிக் கடி வெடித்துச் சிதறுகின்றன. அது போல கட லுக்கு அடியில் உள்ள 71 விழுக்காடு நிலப்பரப்பில்தான் நிலநடுக்கம் அடிக்கடி இடம்பெறுகின்றன. எரிமலை மற்றும் சக்தி வாய்ந்த நில நடுக்கங்கள் ஏற்படும்போது, அவற்றின் அதிர்வுகள் கடல் தண்ணீரில் எதிரொலிக்கும்.**

# சுனாமி பேரழிவும் சுயலாப அரசியலும்



**சுனாமிப் பேரழிவினால் தமிழர் தாயகம் பெரும் அழிவுகளைச் சந்தித்திருக்கும் இன்றைய நிலையில் சிங்களப் பகுதிகளில் நடந்த அழிவுகளை வெளியுலகுக்குக் காட்டி அனுதாபத்தையும் ஆதரவையும் தேடுவதிலேயே பேரினவாத அரசும் பேரினவாத சக்திகளும் முனைப்புக் காட்டி வருகின்றன.**

மறுபுறும் விடுதலைப் போராட்டத்திலிருந்து மக்களின் உணர்வுகளை மாற்றி திசை திருப்பும் தந்திரோபாய நகர்வும் அரங்கேறி வருகிறது.

திடீர் என ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தம் இலங்கைத்தீவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதில் மூன்றில் இரண்டு

துக்கும் இராணுவ அதிகாரிகளை ஜனாதிபதி நியமித்தார்.அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு அகதி முகாம்களிலும் சிறிலங்காப் படையினரை அரசு நிறுத்தியுள்ளது.

தமிழ் மக்களே புலிகள், புலிகளே மக்கள் என்ற கோட்பாட்டைச் சிதறடித்து விடுதலைப்புலிகளுக்கும் தமிழ் மக்களுக்குமிடையிலான உறவில் விரிசல் நிலையை ஏற்படுத்துவதும், படைதரப்பினர் தமிழ் மக்களுக்கான மனிதாபிமானப் பணிகளை முன்னெடுப்பதாக வெளிக்காட்டுவதுமே இதன் நோக்கமாகும்.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிவாரணப் பொருட்களை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியூடாக அம்பாறை மாவட்டத்துக்கு எடுத்துச் செல்ல முயன்ற போது வவுணதீவு, கறுத்தப்பாலம் போன்ற சோதனைச் சாவடிகளில் வைத்து படையினர் அவற்றை மறித்து, விடுதலைப்புலிகள் எடுத்து விடுவார்கள் எனக் கூறியபோது அரச சார்பற்ற நிறுவனங்கள் உடனடியாக விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்க விடுதலைப்புலிகள் படையதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து அனுமதிக்கப்பட்டது.

அதேவேளை திருக்கோயில் பகுதியில் துயர் துடைப்புப் பணியில் ஈடுபட்ட பெண் போராளி ஒருவர் மோசமாகத் தாக்கப்பட்டார். இன்னொரு சம்பவத்தில் தமிழர் புனர்வாழ்வுக்

இராணுவம் நல்லவர்கள் என்ற ஒரு மனப்பாங்கை தமிழ் மக்களிடையே உருவாக்குவது விடுதலைப்புலிகளை ஓரங்கட்டுவது என்ற இரு காய் நகர்த்தல்கள் சுனாமிப் பேரழிவின் பின் துயர் துடைப்புப் பணிகளின் போது நடந்தேறிக் கொண்டிருக்கிறது.

கடந்த இருபது வருடத்துக்கு மேலாக நடந்த விடுதலைப் போராட்டத்தின் போது சிறிலங்கா இராணுவம் தமிழர் தாயகப் பகுதியில் இராணுவம் தமிழர் தாயகப் பகுதியில் நடத்திய வெறியாட்டமும், படுகொலைகளும் இன்னும் தமிழ் மக்களின் மனங்களை விட்டு அகலவில்லை. அதன் தாக்கமும் அவலமும் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் போர் ஓய்வு நிலையில் கூட படைத் தரப்பு தமிழ்

காணாமல் போயிருக்கலாம் எனும் செய்தி அரச ஊடகங்களில் ஒலிபரப்பப்பட்டது. தயாசந்த கிரியை மேற்கோள்காட்டி ஒலிபரப்பப்பட்ட செய்தியை விடுதலைப்புலிகள் வன்மையாகக் கண்டித்திருந்தனர்.

இதே போன்று முல்லைதீவு மாவட்டத்தில் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்த நிலை தொடர்பாக கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஊடகங்களுக்குத் தெரிவித்த செய்தியைக் கூட தலைமைப் பீடம் இல்லை. அதனால் தான் கேணல் சூசை அவர்கள் இப்போது விடுதலைப்புலிகளின் தரப்பில் ஊடகங்களுக்குச் செய்தி வழங்குகிறார் என்ற போலியான செய்திகளைத் தென்னிலங்கை ஊடகங்களும் அரச ஊடகங்களும் வெளி

"தமிழ் மக்களே புலிகள், புலிகளே மக்கள் என்ற கோட்பாட்டை சிதறடித்து விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்குமிடையிலான உறவில் விரிசல் ஏற்படுத்தும் படையினர் தமிழ் மக்களுக்கான மனிதாபிமானப் பணிகளை முன்னெடுப்பதாக வெளிக்காட்டுவதுமே இதன் நோக்கமாகும்"

பங்குக்கு மேல் தமிழர் தாயகத்தில் ஏற்பட்டுள்ளது.

ஏறக்குறைய சுமார் இருபதாயிரம் தமிழ் பேசும் மக்கள் சுனாமிப் பேரலையினால் பலியாகியுள்ளனர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்து தாயகப் பிரதேசத்திலுள்ள மருத்துவ மனைகளில் நிரம்பிக் கிடக்கின்றனர். பல இலட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளாகியுள்ளனர். பல பாரம்பரிய தமிழ்க் கிராமங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் சிறிலங்கா அரசு மனிதாபிமான உதவிகளை வழங்கும் விடயத்தில் எதுவித பக்கச்சார்பும் காட்டக்கூடாது. அத்துடன் பாதிப்புற்ற மக்களுக்கு சர்வதேச சமூகத்திலிருந்து கிடைக்கின்ற உதவிகளைத் தடையின்றிக் கிடைப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஆனால் அரச நிவாரண உதவி என்பது பாதிப்புற்ற மக்களுக்கு முயல் கொம்பான நிலையில், தாயகப் பிரதேசத்தில் பாதிப்புற்ற மக்களுக்கான துயர் துடைப்புப் பணிகளில் தமிழர் புனர்வாழ்வுக்கழகமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் மிகுந்த அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றனர்.

இந்த நிலையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிவாரணப் பணிகளை முடக்குதல், விடுதலைப்புலிகளின் மனிதாபிமான மீட்புப் பணிகளை ஓரங்கட்டுதல், போன்ற நடவடிக்கைகளைத் தந்திரோபாயமாகக் கையாளும் நடவடிக்கைகளை அரச தரப்பு மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒரு அங்கமாகவே நிவாரணப் பணிகளுக்குப் பொறுப்பாக ஒவ்வொரு மாவட்டத்

கழகம் மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதற்காக எடுத்துச் சென்ற நிவாரணப் பொருட்களை பலாத்காரமாகப் பறித்த படைத்தரப்பு புலிகள் கடத்திச் சென்ற பொருட்களை உங்களுக்குக் கொண்டு வந்து தருகிறோம் எனக் கூறி கொடுத்துச் சென்றுள்ளனர்.

இவற்றை விட அம்பாறை மாவட்டத்தில் தென்பகுதியில் இருந்து வந்த நிவாரணப் பொருட்களைப் பொறுப்பேற்ற படையினர் அவற்றை தாங்கள் வழங்குவதுபோல் மக்களுக்குப் பகிர்ந்தளித்துள்ளதாக தெரிய வருகிறது. அண்மையில் அம்பாறை மாவட்டத்தின் காயத்திரி கிராமத்திற்கு இந்திய இராணுவ மருத்துவக் குழுவினர் கொண்டு வந்த மருந்துப் பொருட்களை பொது மக்களுக்கு வழங்காது தாம் எடுத்துச் சென்றதாக அப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவற்றை விட மட்டக்களப்பு நகரில் உள்ள புத்த விகாரை ஒன்றுக்குள் வெளியிடங்களில் இருந்து வரும் நிவாரணப் பொருட்களை மக்களுக்குப் பகிர்ந்தளித்து விலாசம் காட்டும் நடவடிக்கைகளும் நடந்துள்ளது.

அதேவேளை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் திருமலை மாவட்டத்தில் பராமரிக்கப்பட்டு வந்த நலன்புரி நிலையங்களுக்குச் சென்ற படையினர் முகாம்களைப் பொறுப்பேற்றுள்ளனர். இதன் நோக்கம் என்ன என சற்று ஆராய்வோமெனில் தமிழ் மக்களிடையே இருந்து விடுதலைப்புலிகளைப் பிரித்தெடுப்பதற்கான தந்திரோபாய முனைப்புகளே நடந்தேறி வருகின்றன. மனிதாபிமானப் பணி, துயர் துடைப்புப் பணி என்ற போர்வையில் சிங்கள

மக்களுடனோ அல்லது விடுதலைப்புலிகளுடனோ புரிந்துணர்வைப் பலப்படுத்தவில்லை. கண்துடைப்பிற்கான நடவடிக்கைகளே நடைபெற்றது. மாறாக தேச விரோதிகளுக்குக் களமமைத்து கச்சிதமான காரியங்களை நடத்தி வந்ததையாவருமறிவர்.

இன் நிலையில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் தாயக தேசத்தில் நிர்க்கதியாகியிருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களின் துயர் துடைப்புப் பணிகளை அரச படைகள் மனப்பூர்வமாக மேற்கொள்ளுமா என்பது கேள்விக்குறி.இவை தவிர தமிழ் பகுதிகளில் ஏற்பட்டுள்ள அழிவுகள் மீள் கட்டுமானம் மூலம் புனரமைக்கப்பட வேண்டுமாயின் சர்வதேச சமூகத்தின் உதவி அவசியம் தேவை. இதனை விடுதலைப்புலிகள் சர்வதேச சமூகத்துக்கு வலியுறுத்தியுள்ளனர்.

ஆனால் சிறி லங்கா அரச தரப்பு சர்வதேச சமூகத்தின் உதவிகள் தாயகப் பிரதேசத்துக்குச் சென்றடைவதற்குத் தடையாக இருக்கின்றன. அண்மையில் இலங்கைக்கு வந்த ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனான் அவர்கள் தெற்காசிய நாடுகளில் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தைப் பார்வையிடுவதற்காகவே அவர் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

ஆனால் தமிழர் தாயகப் பகுதிக்கு அவர் வந்து பார்வையிடுவதற்கு சந்திரிகா அம்மையார் அனுமதிக்கவில்லை. அம்பாந்தோட்டை, காலிப் பிரதேசங்களைக் காட்டியதுடன், கண் துடைப்பிற்கு திருமலைக்குக் கூட்டிச் சென்று காட்டி விட்டு அவரது பயணத்தை ஆளும் தரப்பு சுருக்கிக் கொண்டது.

**-பிரவீனா-**

அனர்த்தம் அதிகம் நிகழ்ந்த அம்பாறை மாவட்டத்திற்கோ, அல்லது விடுதலைப் புலிகளின் காட்டுப்பாட்டுப் பகுதியான முல்லை தீவுக்கோ கொபி அனான் செல்வதற்கு ஜனாதிபதி அனுமதிக்காது தடுத்தமை தமிழ் மக்களைக் கவலையடையச் செய்துள்ளது.

தாயகத்தின் உயிர், உடமை அழிவுகளை கொபி அனான் நேரிடையாகக் கேட்டு பார்த்து ஐ.நா.வின் அனுதாபம் தமிழ் பேசும் மக்களுக்குக் கிடைத்து விடக்கூடாது என்பதிலே அரசு குறியாய் இருக்கிறது. இவ்விடயத்தில் ஆளுந்தரப்பில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் கட்சிகள் கூட அழிவுகள் அதிகம் நடந்த அம்பாறை மாவட்டத்திற்கு கொபி அனானைக் கூட்டி வருவதற்கான களமுயற்சிகளில் ஈடுபடவில்லையே என்ற கருத்து அம்பாறை மாவட்ட மக்களிடையே நிலவுகின்றது.ஐக்கிய நாடுகள் சபை ஊடாகக் கிடைக்கும் உதவிகளை தடுக்கும் முயற்சிதான் இது.

இதேவேளை விடுதலைப்புலிகளைப் பலவீனமாகக் காட்டும் ஊடகப் பிரசாரங்களில் ஆளும் தரப்பு செயற்பட்டு வருகிறது. வன்னிப் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்ட ஒரு பிரேதப் பெட்டியை வைத்து விடுதலைப்புலிகளின் தலைமை அல்லது விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பொறுப்பாளர் இறந்து அல்லது



யிட்டன.

அத்துடன் விடுதலைப்புலிகளின் கடற்புலிகளின் பலம் சிதைந்து விட்டது. இனி புலிகள் சண்டை பிடிக்கமாட்டார்கள் என ஜனாதிபதி தெரிவித்திருந்த கருத்தும் வாசகர்களுக்கு இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியது அவசியம். ஆனால் கடந்த சில நாட்களுக்கு முன் வெளிநாட்டு செய்தியாளர்களை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கூட்டிச் சென்று காண்பித்தார்.

கடற்புலிகள் பலமிழக்கவில்லை. அவர்கள் பலத்தோடும் உறுதியோடும் இருக்கின்றனர் என்பதை செய்தியாளர் பிரான்ஸ் ஹறிசன் பி.பி.சி. தமிழ் ஓசையில் அம்பலப்படுத்திருந்தார். இந்திய இராணுவத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்ற இரண்டாம் ஈழ யுத்தத்தின் போதும் விடுதலைப் புலிகள் பலவீனப்பட்டுவிட்டதாக சிங்கள ஆட்சியாளர்கள் பிரசாரம் செய்தனர்.

கடந்த வருடம் கருணா விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னரும் விடுதலைப்புலிகளின் சரித்திரம் முடிந்துவிட்டது என தென்னிலங்கை ஊடகங்களும் அரச ஊடகங்களும் பொய்களை ஊதித் தள்ளின. தற்போது நடந்துள்ள இந்தப் பேரனர்த்தத்தால் தமிழ் மக்கள் ஆறாத் துயரத்தில் மூழ்கியுள்ள இக்கால கட்டத்தில் கூட சிங்களப் பேரினவாத அரசு சுயலாபப் போக்கினைக் கடைப்பிடித்து வருகிறது.

சுனாமிப் பேரழிவு அனர்த்தத்தால் தமிழ் பேசும் மக்கள் சந்தித்துள்ள இழப்புக்களால் தேசியத் தலைவர் ஆழ்ந்த வேதனையும், துக்கமும் அடைந்துள்ளார். கிழக்கு மாகாணம் அதிக பாதிப்புக்களைச் சந்தித்துள்ளதால் தளபதிகளையும் போராளிகளையும் பாதிப்புற்ற பகுதிகளுக்குச் சென்று துயர்துடைப்புப் பணிகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டிருந்தார்.

இதற்கமைய மட்டு. அம்பாறை மாவட்டங்களில் மக்களுக்கான துயர்துடைப்புப் பணிகளில் விடுதலைப்புலிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் நிலையில் அரச தரப்பும் படைகளும் வேண்டுமென்றே குழப்ப நிலையை உருவாக்கி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# ஆழிப்பேரலை அனர்த்தத்திற்குள் பிறக்கும் தைப்பொங்கல்

**மா.க.ஈழவேந்தன்**

"**தை** பிறந்தால் வழி பிறக்கும்" என்பது தமிழரிடையே வழங்கும் பழமொழி யாகும். இப்பழமொழியில் எல்லை மீறிய நம்பிக்கை உடைய தமிழன் ஒவ்வொரு ஆண்டும் தை பிறக்கிற போது தமிழனுக்கு வழி பிறக்கப் போகின்றது என்ற நம்பிக்கையில் உணர்ச்சிவசப்பட்டு, உற்சாகத்தோடு நல்ல பல எதிர்பார்ப்புக்களை எதிர்பார்த்து வாழ்ந்தான். ஆனால் தமிழகத்திலும் சரி, தமிழீழத்திலும் சரி ஏன் கடல் கடந்த நாடுகளிலும் சரி உருப்படியாய் எதுவும் ஏற்படாததனால் ஏமாற்றத்திலேயே தமிழன் மூழ்கியுள்ளான். அத்தோடு அண்மையில் வெள்ளப்பெருக்கால் ஏற்பட்ட பாதிப்பு ஒருபுறம், வரலாறு காணமுடியாதளவிற்கு கடற்கொந்தளிப்பினால் ஏற்பட்ட உயிரழிவுகள் மறுபுறம். இதனால் மக்கள் அடைந்த பேரவலம் இன்னொருபுறம். இவ்வாறு பல இன்னல்களுக்கிடையே இத் தை பிறக்கப் போகின்றது. எனினும் "இடுக்கண் வருங்கால் நகுக." என்ற வள்ளுவரின் கூற்றுக்கிணங்க, இத்துன்ப நிகழ்ச்சிக்கிடையே நல்லதையே எதிர்பார்ப்போம்.

**உலக வரலாறு உணர்த்தும் உண்மை**

உலக வரலாற்றை நாம் உன்னிப்பாகக் கவனிப்போமாயின் எந்த ஒரு நாடும் என்றுமே ஏற்றம் பெற்ற நாடாகவோ அல்லது வீழ்ச்சியுற்ற நாடாகவோ இருந்ததாகச் சான்றில்லை. தனி ஒரு மானிடனில் ஏற்படும் ஏற்ற இறக்கம் நாடுகளுக்கும் பொருந்தும். உலகத்திற்கும் பொதுவாய்ப் பொருந்தும். உலகப் புகழ் படைத்த வரலாற்று ஆசிரியன் டவுன்பி (Townby) உலக நாடுகளின் வெற்றி தோல்வியைக் கூர்ந்து ஆராய்ந்த நிலையில் (21நாகரிகம் படைத்த நாடுகளில் பத்தொன்பது நாடுகளின் வீழ்ச்சிக்கு அடிப்படைக் காரணம் பிறநாட்டுப் படையெடுப்பு ஆக்கிரமிப்பு அல்ல. மாறாகத் தம்மீது தமக்கு நம்பிக்கையின்மையின் விளைவு) 'Of the, 21 civilizations nineteen perished not because of external aggression but due to the evaporation of belief within' என்று கூறியிருப்பது பொருள் பொதிந்த பொன்னுரையாகும். எந்த ஒரு நாடும் தன்மீது நம்பிக்கை இழந்த நிலையில் வாழ்ந்ததாக வரலாறு இல்லை. ஆகவே எம் தமிழினம் தலைதூக்க வேண்டின் முதலில் எமக்கு எம்மீது நம்பிக்கை வேண்டும். இதனைத்தான் விவேகானந்த அடிகள் கூட "ஆண்டவன் மீது உனக்கு நம்பிக்கை இல்லாது விடினும் உன்மீது நம்பிக்கை வைத்து வாழ்" என்றும், "உனக்கு உன்மீது நம்பிக்கை இல்லையோ அன்றோடு உன் வாழ்வு முடிந்து விட்டது" என்றும் எச்சரித்துள்ளார். அவரின் நம்பிக்கை வழங்கும் உரையை நாம் எவரும் மறக்க முடியாது. 'தெய்வத்தால் ஆகாதது. எனினும் முயற்சி தன் மெய்வருந்தக் கூலி தரும்' என்ற பொய்யா மொழிப் புலவரின் கூற்றும் என்றும் பொய்க்கப் போவதில்லை.

**ஏ தமிழா நம்பிக்கை இழக்காதே**

கி.பி.10 ஆம் ஆண்டிலும் 11 ஆம் நூற்றாண்டிலும் இராஜராஜ சோழனும், இராஜேந்திர சோழனும் உலகெங்கும் கொடி கட்டி வாழ்ந்த வரலாறு உண்டு. கங்கை கொண்ட வரலாறு, கடாரம் கொண்ட வரலாறு. ஈழத்தைக் கைப்பற்றிய வரலாறு எல்லாம் இவர்கள் காலத்தில் நடைபெற்றது. சோழன் ஆண்ட வரலாற்றினை தமிழனின் பொற்காலம் என்றும் வரலாறு வர்ணிக்கின்றது. 'The golden era of the cholas'என்று பெரும் புகழ் படைத்த வரலாற்று ஆசிரியன் நீலகண்ட சாஸ்திரி சாற்றும் கருத்தினை இங்கு நினைவு கொள்வோமாக! இராஜராஜசோழன் கட்டிய தஞ்சைப் பெருவுடையார் கோயில் மிகப் பெருமையுடைய கோயில். உலகின் கவனத்தை ஈர்ந்துள்ள



கோயில். பெருவுடையார் கோயிலைப் பற்றி பன்மொழிப் புலவர் தே.பொ.மீ.கூறுகையில்

"கோயில் பெரிது, கோபுரம் பெரிது, சிவலிங்கம் பெரிது, நந்தி பெரிது, அனைத்தும் பெரிது, மன்னன் உள்ளமும் பெரிது"

என்று கூறியுள்ள கூற்றும் எமக்கு இனிப்பூட்டும் செய்தியாகும். இராஜராஜ சோழனின் மைந்தன் இராஜேந்திர சோழன் அடுத்த பெருமை பெற்றிருப்பதும் இங்கு நினைவு கொள்ளத்தக்கது. அவன் எழுப்பியுள்ள கங்கை கொண்ட சோழபுரம் கோயில் அவன் கங்கை கொண்ட வரலாற்றினையும் கோயிலின் திராவிட சிற்பத் திறனையும் திறம்பட எடுத்துரைக்கின்றது. அத்தோடு இராஜேந்திர சோழன் ஈழத்தைக் கைப்பற்றிய போது இன்றைய பொல நறுவைக்கு 'புலஸ்திய நகர்' என்று பெயரிட்டு எழுப்பியுள்ள சிவன் கோயில் ஈழத்தை அவன் கைப்பற்றிய வரலாற்றினை எடுத்துரைப்பதோடு அவன் சிவபக்தனாக விளங்கினான் என்ற செய்தியையும் செப்புகிறது. இவை அனைத்திற்கும் மேலாகச் சோழர்கள் இமயத்தில் புலிக் கொடி பொறித்த புகழ் பெற்ற வரலாற்றையும் நாம் மறப்பதிற்கில்லை. மாறாக என்றும் இறுமாப்புடன் பேசத்தக்க இனிய செய்தியாக இது விளங்குகின்றது.

இப்பெருமைமிக்க சோழரின் வரலாறு முடிவுற்று ஏறக்குறைய ஓராயிரம் ஆண்டுகள் கடந்துள்ளது. வீழ்ந்த தமிழினம் ஆயிரம் ஆண்டுகள் கடந்த நிலையில் மீண்டும் தலை தூக்குவது இயற்கையோடு ஒட்டிய நிகழ்ச்சி ஆகும். 'விழ விழ எழுபவன் தமிழன்' என்பதற்கமைய வீழ்ந்துள்ள தமிழன் மீண்டும் எழுற்சி பெறுவது உறுதி. எனவே ஏமாற்றங்கள் பல கண்ட நிலையிலும் நாம் சோர்வடையாது உள்ளத் தூய்மையோடு, துடிப்போடு தெளிவோடு, துணிவோடு செயலாற்றின் நாளை நமதே வெற்றி நமதே என்ற நிலை உருவாவதை உலகின் எந்த சக்தியும் தடுக்க முடியாது.

**தையின் தோற்றமும் அதன் வரலாறும**

விழா எடுத்து வீழ்ந்தவன் தமிழன் என்று கூறும் அளவிற்கு தமிழன் எடுக்காத விழாக்கள் இல்லை. தமிழன் பல விழாக்களை எடுத்துள்ளான் என்பதற்கு ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்மந்தரின் பின்வரும் பாடல் சான்று பகிர்கின்றது.

*"ஐப்பசி ஓண விழா கார்த்திகை*
*விளக்கீடு*
*மார்கழி ஆதிரை நாள்*
*நெய்ப் பூசம் ஒண்புழுக்கல்*
*நேரிழையார்*
*கொண்டாடும்*
*தைப்பூசம்*
*மாசிக்கடலாட்டு*
*பங்குனி உத்தரம்*
*பதிணெண் கணங்கள் தம்*
*'அட்டமி நாள்"*


என்று ஞானசம் பந்தர் குறிப்பிடும் இவ்விழா க்கள் எதுவும் தமிழனின் முழுத் தனித்துவத்தைக் காட்டுவதாக அமையவில்லை. சிலவற்றில் தமிழ்ச் சாயல் உண்டு. ஆனால் பலவற்றில் வடநாட்டின் வல்லாண்மைக்கு நாம் ஆளாகி இருப்பதையே இவ்விழாக்கள் எடுத்துக் காட்டு கின்றன. ஆனால் இவற்றிற்கு முற்றிலும் மாறுப ட்டு விளங்குவது தான் தைப் பொங்கல் திரு நாள். "தைப் பொங்கல் திருநாள்" என்ற சொற் றொடரே தனித்தமிழ் சொல்லாட்சியையும் தமி ழன் அடையாளத்தையும் காட்டி நிற்கின்றது.

**தைப்பொங்கல் வேறு மகரசங்கராந்தி வேறு**

இங்கும் தமிழன் தனித்துவத்தைச் சிதைக்கும் முறையில் 'மகரசங்கராந்தி' என்ற வடமொழிச் சொல்லாட்சி எம்மீது திணிக்கப்பட்டுள்ளது. வேறு சொற்களில் இயம்பின் வடநாட்டின் பண்பாட்டுப் படையெடுப்புக்குச் சான்றாய் மகரசங்கராந்தி என் சொல்லை வலிந்து வழக்கத்திற் கொண்டு வர பெருமுயற்சிகள் எடுக்கப்படுகின்றன. பண்பாட்டுப் படையெடுப்பு காலப் போக்கில் அரசியல் படையெடுப்புக்கும் வழிவகுக்கும் என்பதை நாம் உணர்ந்து என்றும் விழிப்போடு இருத்தல் வேண்டும்.

**சுப்பிரமணிய முதலியார்சுட்டிக் காட்டும் பாங்கு**

தமிழர் பொங்கலுக்குச் செய்கின்ற சடங்குகள் வடமொழியாளர் சங்கராந்திக்கு செய்வதில்லை. வடமொழியாளர் செய்வனவற்றைத் தமிழர் செய்யும் ஏற்பாடும் கிடையாது. எனவே ஒரு நாளை வெவ்வேறு வகையில் இவர்கள் அறிந்து கொண்டாடினர். எனவே பயிர்களுக்கு இன்றியமையாத வெப்பத்தைத் தந்து உயிர் கொடுத்து வளர்த்து வந்த கதிரவனை நோக் கி உழவர்க ளாகிய தமி ழர்கள் அவ்வு தவியினால் வந்த புதிய விளைவைக் கொண்டு கொண்டாடுவதாகிய இப்பொங்கல் தமிழர்க்கே சிறப்பாக உரிய விழாவாகின்றது என்பது வெளிப்படை என்று தமிழறிஞர் சி.கே. சுப்பிரமணிய முதலியார் மொழிந்துள்ள கூற்றுக்கு நாமும் வழிமொழி கூறும் நிலையிலேயே





இருக்கின்றோம்.

**போகிப் பண்டிகை**

தைப்பொங்கல் விழா சிறப்பாக அமையப் பொங்கலுக்கு முதல் நாள் நாம் வதியும் வதிவிடமும் சுற்றாடலும் தூய்மையாக்கப்படுகின்றது. இது போகிப் பண்டிகை என்று குறிப்பிடப்படுகின்றது. எம்மைச் சூழ்ந்துள்ள அழுக்குகள் அனைத்தும் போக்கப்படுவதனால் போகிப் பண்டிகை என்று பெயர் பெற்றது போலும். 'மாதங்களில் நான் மார்கழி' என்று கண்ணன் பகவத்கீதையில் பகிர்ந்திருந்தாலும் பீடை நோய் பிடித்த மாதம் மார்கழி என்று தமிழர்கள் கருதுவதனால் மார்கழியைப் போக்கி தையை வரவேற்கும் நிகழ்ச்சியாக இது அமைகின்றது.

**உழவின் உயர்வு**

உழவின் உயர்வை உணர்த்தும் நாள் தைத்திருநாள். "பாடுபடுபவர்க்கே இந்தப் பாரிடம் சொந்தமையா" என்ற கவிமணியின் கூற்றை ஏற்று உலகின் அச்சா ணியாக விளங்கும் உழவுத் தொழி லின் உயர்வை உவந்து போற்றும் விழாவாகவும் இப்பொங்கல் விழா அமைகின்றது. உழவுத் தொழில் உயர்ந்து விளங்க உறுதுணையாக விளங்குவது ஞாயிறின் தோற்றமாகும். எனவே 'ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்' என்று கதிரொளி வீசும் கதிரவனுக்கு நன்றி செலுத்தப்படுகின்றது. 'இருள் கடிந்து உள்ளத்து எழுகின்ற ஞாயிறே போன்று'. இறையருள் தன் இதயத்தில் ஏற்பட்டுள்ளது என்று மணிமொழியாளர் மாணிக்கவாசகர் மொழிந்துள்ள திருவாசகச் சொற்றொடரும் எம்மை ஆட்கொள்ளத்தான் செய்கின்றது.

**நன்றியுணர்வை நவிலும் மாட்டுப் பொங்கல**

'பொங்கலோ பொங்கல்' என்று தைப் பொங்கலை எம் நெஞ்ச நிறைவோடு கொண்டாடிய நிலையில் அடுத்த நாள் நிகழ்ச்சி மாட்டுப் பொங்கலாக, பட்டிப் பொங்கலாக மலர்ந்துள்ளது. செங்கதிர்ச் செல்வனுக்கு நன்றி நவின்ற தமிழன் தன் உற்றார் உறவினர்களுடன் கூடி மகிழ்ந்த தமிழன் தன் உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக விளங்கிய ஏற்றம் தந்த எருதினையும், நனி சுவை மிக்க பால் தந்த பசுவினையும் ஆவினையும் மறக்காத நன்றியுணர்வுள்ள விழாவாக மாட்டுப் பொங்கல் அமைகின்றது. 'உண்ணீர்! உண்ணீர்!' என்று தனக்குத் துணை நின்ற ஏற்றம் தந்த எருதுக்கும் பசும்பால் தந்த பசுவிற்கும் தமிழன் உணவூட்டும் காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும். தமிழனின் நன்றியுணர்வை மானிட சமுதாயத்தை மட்டும் தழுவி நில்லாது விலங்கு உலகையும் வியந்து போற்றுகின்ற உயர் உள்ளத்தையும் உலகிற்கு எடுத்துக் காட்டுகிறது. எனவே இவ்வாண்டுப் பொங்கலை வரவேற்கும் நாம் 'மன்னிய சுவை என இனிக்கும் எம் வண்டமிழ் பரவையாண்டும்' என்று வாழ்த்துவோமாக.




# போர் உலா

**"உலக மகா கவிஞருள் ஒருவரான ஷெல்லி இறக்கும்போது வயது 29. மக்கள் கவிஞன் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் இறக்கும்போது வயது 29. யுகக் கவிஞன் என அழைக்கப்பட்ட பாரதி இறக்கும் போது அவனுக்கு வயது 39. இந்நூலாசிரியன் இறந்த போது இவன் வயது 20 தான்"**

## 01 கப்டன் மலரவன்

*1990, கார்த்திகை 09ம் நாள்,*

பனிக்காற்று ஊ ஊ என வேகமாக வீசி அடித்துக் கொண்டிருந்தது. பால் போன்ற வெண்ணிலவை முகிற் கூட்டங்கள் வெட்டியோடின. விரைவாக அவற்றைக் கலைத்து விட்டு நிலவு வெளியே வந்து சிரித்தது. கிழக்கு வான ஓரத்தில் கொஞ்சம் கருமுகில்கள் தொட்டந் தொட்டமாய்ச் சிதறிக்கிடந்தன. நட்சத்திரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் தூங்கித் தூங்கி விழித்துக் கொண்டிருந்தன. வானில் இடையிடையே இராக் குருவிகள் பறந்தன. ஆட்காட்டி ஒன்று அவலமாய்க் கத்தியபடி கடந்து போனது.

''உது கத்துறது கூடாது எங்கிறவ. எங்கட அப்பு நெடுகச் சொல்வார். அவற்ற தேப்பன் வண்டிலில வெளிக்கிடேக்க உது குறுக்கால போனதாம். அப்பவும் ஆத்தை சொல்லச் சொல்ல நல்ல வெறியில வெளிக்கிட்டுப் போனவராம். விடியக் காலத்தால பக்கத்து ஊராக்கள் சவத்தைத்தான் கொண்டு வந்தவையாம். ஏதோ வண்டிலால இழுத்துப் போட்டு அடிச்சிட்டுதாம்'' என்று வலு ''சீரியசாய்'' சொன்னான் வசந்தன்.

''நீயொரு பேயனெண்டு தெரிஞ்சு கொப்பர் நல்லா கயிறு விட்டிருக்கிறார். நீயும் கேட்டுக் கொண்டு வந்தனியே. எங்களுக்குச் சொன்னமாதிரி வேறாக்களுக்குச் சொல்லிப் போடாத. பிறகு உருப்படியாய் வரமாட்டாய் என வசந்தனைச் சீண்டினான் இதயன்.

''டேய், அவன் எனக்குச் சொன்னவன். நீ ஏன் கத்துறாய்'' என இடையில் வெட்டினேன் நான். வசந் கையில் எடுத்த தடிக்குச்சியால் இதயனுக்கு ஒரு குத்து விட்டுத்தான் அடங்கினான்.

உழவியந்திரம் வெளியை (வெட்டையை) விட்டுக் காட்டுப் பாதையில் இறங்கியது. எல்லோரும் வயிற்றைப் பிடித்துக் கொண்டார்கள், ''இனி கொஞ்சத் தூரம் தண்ட வாளத்திலதான் போகும்.'' றைவர் சேது கூறிச் சிரித்தது கேட்டது.

''இவன் ஒரு மூதேவி. இப்படி இடங்களில வேணுமென்று ஓடுவான்.'' நாங்கள் கத்திறதப் பார்த்தா இவனுக்குச் சந்தோசம் போல'' தன் இயலாமையைக் கொட்டினான் வசந்தன்.

காட்டுப் பாதை என்பது காட்டுக்குள்ளே மரங்களை வெட்டி பாதை போல அமைத்து, பின் நீரில் அள்ளுப்படாமல் மரக் கட்டைகளை வெட்டி சிலிப்பர் கட்டை போல வரிசையாய் அடுக்கி பின்னர் மண் போட்டு இறுக்குவதே. இது வருடா வருடம் மழை முடிந்தவுடன் சீரமைக்கப்படும். கேட்டவுடன் சுலபமாகக் கூறி விடலாமே தவிர இது மிகக் கடினமான வேலை. காட்டை வெட்டிச் சீராக்குவதே பெரும் பாடு. பின்பு மரங்களைச் சிலிப்பர் கட்டை போல துண்டு துண்டாக்கி சுமந்து வரவேண்டும். பின் சிவந்த மண்ணைக் குன்றாய்க் குவிந்திருக்கும் இடங்களில் வெட்டி அள்ளிக், கடகங்களில் சுமந்து வர வேண்டும். இவளவுக்கும் கோல்சரும் ஆயுதமும் உடலில் தான் இருக்கும். வியர்வையில் எல்லாப் போராளிகளும் குளித்து விடுவார்கள். அனல் தெறிக்கும் வெயிலில் இந்த வேலை செய்வதென்றால் மிகக் கடினம். என்ன செய்யிறது. எங்கட றோட்டு, நாங்கள்தானே செய்யோணும் என 'தளபதி' உற்சாக மூட்டுவார். அவர் கூடப் பல இடங்களில் தானும் நின்று செய்வார்.

இளம் போராளிகள் தாங்கள் வெட்டிய வீதியைத் துப்பரவு செய்வார்கள். அந்த நேரத்தில்கூட நண்பர்களை வம்புக்கிழுக்கும் இதயன் மற்றவர்களைச் சீண்டுவான். சில வேளை இவனை யாராவது மண்ணால் குளிப்பாட்டி விடுவார்கள். வியர்வைச் சேற்றில் மண் பட பார்ப்பதற்குப் பரிதாபமாக இருக்கும்.

''டடெங் டாங்'' என உழவியந்திரம் பெரிதாய்க் குலுங்கியது.

''ஐயோ! ஏன்ரா இப்படி ஓடுகிறாய்? மெல்லமாப் போவன்'' என வசந்தன் கேட்பதும், சேது அட்டகாசமாய்ச் சிரிப்பதும் தெளிவாகக் கேட்டது.

''உவன் சிரிக்கிற சிரிப்பைப் பார்த்தா இன்டைக்கு பிரட்டி எடுப்பான் போல கிடக்குது'' என்று இதயன் எரிச்சலுடன் கூறினான். எம்மைத் தொடர்ந்து வரும் உழவியந்திரங்கள் மிகத் தொலைவில் வருவது தெரிந்தது. டேவிட் அண்ணர் ஓட்டிவருவதற்கு ஒற்றை லைற்தான் எரிந்தது. அது தூரத்தில் தெரிந்தது.

பெரிய பெரிய பாலை, வீரை மரங்களைப் பார்க்கையில் ஏனோ துக்கமாக இருந்தது. ''எங்களை விட்டு எங்க போறியள்'' அவை காற்றுக்கு அசைந்து இரைந்தன.

'எவ்வளவு நல்ல காடு, தாய் மாதிரி இவ்வளவு காலமும் எங்களைக் காத்தது இதுதானே. இனி எப்ப வரப்போறம்' என மனதில்



எண்ணிக் கொண்டேன். ஆவலை அடக்க முடியாமல் கையை உயர்த்தி மரங்களிற்கு 'டாட்டா' காட்டினேன்.

''டேய் என்னடா செய்யிறாய்?' என வசந் கேட்டான். ரைக்டர் குலுக்கி மண்டை பிசகிட்டுதோ என எண்ணினான் போலும்!

''சும்மாதான்'' என்று, விழியில் திரையிட்ட நீரைத் தட்டி விட்டேன். முத்தாய் உருண்டு அது செம்மண்ணில் விழுந்தது. - எமது வியர்வை ஊறிய மண்ணில் இதயன் இப்போது லைற்றைப் பிடித்தபடி நித்திரை தூங்கினான்.

நான் கோல்சரைக் கொஞ்சம் தளர்த்தி விட்டு ரீ.81 ஐ உயர்த்திப் பிடித்துக் கொண்டேன். முகில்கள் வேகமாய் தலைக்கு மேல் விரைந்தன.

காட்டின் ஆரம்ப முகாமில் ஒருகணம் குலுங்கி நின்ற ரைக்ரரை சலாம் வேகமாக வெளியே எடுத்தான். ரைக்ரர் மணல் வெளியூடாகப் பாயத் தொடங்கியது. உற்சாகமாக ஓடினான்.

''சலாம், ரைக்ரரை நிப்பாட்டு. வசந்தன் கீழே விழுந்திட்டான். என்ன கண்டறியாத ஓட்டம் ஓடுறாய், பேயா!'' எனத் திட்டிக் கொண்ட இதயன் இறங்கி, முன்பக்கமாக ஓடினான். சலாம் நல்லாப் பயந்து போனான். என்னடா, என்னடா எனக் கேட்பதற்குள் ரைக்ரரின் 'மட்காட்டில்' ஏறிய இதயன் இனி எடடா என்றான்! சலாமிற்கு நொடியில் விளங்கியது.

இவன் தன்னை ஏமாற்றி விட்டான் என்று! இல்லாவிட்டால் சலாமாவது நிப்பாட்டி ஏறு என்று சொல்லுறதாவது. தோல்வியுடன் சலாம் சிரித்தபடி அக்சிலேற்றரை ஊன்றி மிதிக்க ரைக்ரர் ஜீப் மாதிரிப் பாய்ந்தது.

''இனி இவங்க இரண்டு பேரும் சேர்ந்து எங்களக் கொல்லப் போறாங்கள்'' என்று வசந் ஆற்றாமையால் எரிந்தான். தன் பெயரைப் பாவித்த கோபம் அவனுக்கு இருந்தது. தூரத்தில் நாயாற்றுப் பாலம் பெரிய மிருகம் போல குந்தியிருந்தது.

''இந்தியன் இருக்கேக்க மச்சான், இதில எல்லாம் வர ஏலாது. மண்டை சிதறும்!'' என்று பழையதை நினைவு கூர்ந்தான் வசந்தன்.

''இவ்விடத்தில் தான் ஒருக்கா நல்லாக் குடுத்த நாங்கள்'' என்று ஞாபகப் படுத்தினேன்.

''ஏராளமான ஆமி செத்ததல்லே?' என வினா எழுப்பினான்.

''ஓ 26 ஆமி செத்தது. 21ஆயுதம் எடுத்த நாங்கள். கால் கஸ்ரோ, பிறன் எல்லாம் எடுத்தது.'' என்று நினைவு கூர்ந்தேன்.

ரைக்ரர் வீதியில் ஏற முன், நீர்க்கிடங்கினுள் விட்டு எடுத்தான். சலாம் என்னிலும் வசந்திலும் அதன் பெரிய டயர் நீரை வாரி எறிந்தது! சலாம் சிரிக்க எனக்கு உண்மையில் கோபம் வந்தது. ''விசரா, றைபிளல்லே நனைஞ்சு போச்சு'' என்று கோபத்தைக் கொட்டினேன். ''சரி நான் இனி அப்படி ஓடல்ல'' என்று சலாம் சொன்னான். வாய்க்குள் போன நீரைத் துப்பியபடி வசந் இருந்தான்.

பெரிய கருமுகில் ஒன்று சந்திரனைத் திரையிட்டு மறைத்தது. வெள்ளிகள் கூடக் குறைந்து விட்டன. வானவெளி வெறிச்சோடிக் கிடந்தது. ''அங்கற்றா'' என்று வசந் காட்டினான். ஒரு வெள்ளி பால் வெளியில் ஓடி எரிந்து மறைந்தது. என்னடா அது என வசந்தன் வாயைக் கிண்டினேன்.

''மச்சான் உதைத்தான் வெள்ளி விழுகிறது என்கிறவை. பார்க்கக் கூடாதாம். பார்த்தா உடனே பால் மரத்தைப் பார்க்க வேணுமாம்.'' என்று சுழல விட்டான் கண்ணை. கண்ணுக்கெட்டிய தூரம் வரை மரமேயில்லை. ''உதப்பார்த்தா ஆறாவதுக்கும் என்னமும் நடக்கும் என்று ஐயா சொல்லுவார்'' என்றான் அவன்.

*தொடரும்.........*

# கல்லுக்குள் ஈரம்



## எழுத முடியாத காவியங்கள்

### தாயகத்தின் தந்தை

அந்த வீரன் கொழும்பில், தந்தை தன் மகனைப்பற்றி பெருமைப்படும் எல்லாவற்றிலும் அங்கு தன்னை அடையாளம் காட்டினான். அங்கு அவனுக்கு அவனே முதலாளி, வழிகாட்டி, பொறுப்பாளன் எல்லாம். அவனிடம் அந்த தனித்த செயற்பாட்டுக்குத் தேவையான பக்குவம் இருந்தது. ஆரம்பத்தில் எல்லோரையும் போல கொழும்பைப் பார்த்து திகைக்கவும் இல்லை. இவனுக்கு அமைந்துவிட்ட செயற்பாட்டுத் துணையும் அந்தமாரிதி அமைந்துவிட, சிங்களத்துச் சீமை எங்கள் சிங்கவுக்கு உள்ளங்கையாய் ஆனது.

அவனிடமிருந்த இயல்பான நற்பண்புகள் நண்பர்களைப் பெற்றுக் கொடுத்தது. ஆகமொத்தத்தில் அவன் ஆரம்பத்தில் தனக்குக் கூறப்பட்ட இலக்கைத் தொடும் வாய்ப்பைப் பெற்றேவிட்டான். சிங்களத்து ஆக்கிரமிப்புணர்வின் முக்கிய வேரில் ஒன்று, அதுவே "முதன்மை வேர்" ஆகவும் கூடும் அவனது பணித்தெரிவு அதுவே,

"உடல் உழைத்து,
உயிர் விதைத்து, காடு திருத்தி,
நாடு சமைத்து காலாதிகாலமாய்
எம் தமிழர் வாழ்ந்திட்ட
ஊர்மனைகள், கணேநேர
ஆக்கிரமிப்பில்'' அத்தனையும்
சுட்டெரித்து அகதிகளாய்
ஆக்கிவிட்ட கொடுங்கோலன் தம்
நாட்டை விற்றேனும் 'எம்'
நாட்டை விடாதழிக்க
சிங்களத்தை விலை பேசும்
சீரில்லாப் புத்திசாலி'' 'எம்மினத்து
உயிர்களை ஆயிரமாய்
கொன்றொழித்த கொடுங்கரம்
இதிகாசத்து கோலியாத் போல
கொடுங்கோலன்' சிங்களத்துக்
கொடுங்கோலன். அடக்கு
முறைக்குள்ளான மக்களது
தாவீது போல, ஈசாயின்
இளையமகன் தாவீது - போல்
ஐயாவின் மூத்தமகன் தாவீது
எங்களது தாவீது, தாவீது -

**"தேசாபிமான உணர்வானாது மக்களை ஆழமாகப் பற்றிக் கொள்ளும் பொழுதுதான் ஒரு தேசம் தனக்கே உரித்தான தனித்துவமான ஆளுமையைப் பெறுகின்றது: இந்தத் தேசிய ஆளுமையைக் கொண்ட மக்கள் இனம் தான் அரசை அமைத்துக் கொள்ளும் தகுதியைப் பெற்றிருக்கின்றது"**

தமிழீழ தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன்

திரும்பி வரும் திட்டமில்லா
திடமனது வீரன். வாய்ப்பான
சூழலில், வாகான வேளையில்
அவன் கைக்கவண்
கொடுங்கோலன் கதைமுடிக்கும்'
'இன்றென்றெண்ணி கவண்
மறைத்துக் காத்திருப்பான் தாவீது.
ஒன்றது பொருந்த இன்னொன்று
பிசகும். கவண் மறைத்து தளம்
சேர்வான், மனம் சோராத் தாவீது'
'கொடுங்கோலன் கோலியாத்
தாய்மண்ணில் இட்ட தீ அவன்
மனதெல்லாம் எரிக்கும். சோரான்
தாவீது, ஓயான் தாவீது,
'காத்திருந்து பார்த்து' கதை
முடிக்கும் கவண் ஏந்தி களம்
புகுந்தான் தாவீது. 'தாவீது
வெல்வான்' கோலியாத் வீழ்வான்,
வென்ற தாவீது முழக்க மிட்டு
வருவான் அவனை வரவேற்க
அவனது மக்கள்... அது
இதிகாசத்துக் கதை, "இது நடை
முறை யாதார்த்தம் இங்கும்
தாவீது வென்றான். கோலியாத்
வீழ்ந்தான்'' 'ஆனால் தாவீது
வரவில்லை. எங்கள் செல்வன்
வரவேயில்லை வித்தாகி
வீழ்ந்தான்.'

சிங்களத்தின் மலையான மலை சரிந்து வீழந்தது. செய்தி கேட்டு நிமிர்ந்தார் ஐயா. நாளும் பொழுதும் ஐயாவை நடுநடு ங்கி பதைக்க வைத்த அந்த எதிர்பார்ப்புச் செய்தி வந்தேவிட்டது. எந்தப் பத்திரி கையை தான் பார்த்து விடக் கூடாது என நினைந்திருந்தாரோ அந்தக் கொடியதிலும் கொடியதான பத்திரிகை ஐயாவின் கரம் சேர்ந்தே விட்டது.

'மலையான மலையைப்
புரட் டிப் போட்ட மாவீரன் என்
பிள்ளையா?' 'ஐயா! ஆதரிக்க
யாருமின்றி சிங்களத்து வீதிவழி
வீழ்ந்தது என் மகனா?' 'எம்
இனத்து உயிர் குடித்து உலாவி
வந்த பகை முடித்தான், அவன்
என் மகனா?' 'ஐயகோ!
துணைக்கு வர யாருமின்றி துடி
துடித்து வீழ்ந்தது என் மகனா?'


*தொடரும்.........*

# இந்திய-இலங்கைக் கூட்டு கடற்பயிற்சி சமாதானத்தைச் சீர்குலைக்கும் முயற்சி

## இலங்கைத் தமிழர்களின் இனஒழிப்பையும் ஒடுக்கு முறையையும் சிங்கள அரசு செயல் வடிவம் கொடுத்திருந்த உச்சக்கால கட்டத்தில் தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்து ஆயுதங்கள் பலவும் நிதியும் தந்துதவிய இந்தியாவை நாம் மறக்கவில்லை

அவர்கள் அனைவரும் இந்திய நாட்டின் விடுதலை வீரர்களாகப் போற்றப்படுகின்றார்கள். அவர்களைப் பிரிட்டிஸ் ஆட்சியாளர் துரோகிகளாகவோ, பயங்கரவாதிகளாகவோ பார்க்கவில்லை. ஆனால் எமது மக்களின் சுதந்திரத்திற்காக எமது மண் மீட்புக்காக எமது இழந்த உரிமைகளைப் பெறுவதற்காக மேதகு தலைவர் வே.பிரபாகரன் தலைமையில் போராடும் அனைத்து மக்களும் எமது தந்தை நாட்டால் வெறுக்கப்படுவதேன்?

பூர்வீகமாக நாம் வாழ்ந்து வரும் நாடு ஈழம். அதற்கு இரத்தினதீபம், இலங்கை என்று பல தமிழீழப் பெயர்களே இருந்தன. இன்றும் இருக்கின்றன. அன்று புத்தர் பிறந்த இந்திய நாட்டில் இருந்து பௌத்தம் ஒழிக்கப்பட்டு, விரட்டப்பட்டு, சிங்கள பௌத்தமாக இங்கு வந்தவர்கள், பல்லாண்டு காலமாக இந்திய நாட்டுடன் கலை, கலாசார, மொழி மற்றும் பல்வேறு பட்ட வகைகளில் ஒன்றுபட்டு வாழ்ந்த தமிழ் மக்களாகிய எம்மை ஒடுக்குதற்கு துணை போக காந்தீய வழிச் சத்தியம் வழிவகுத்துள்ளதா? நேருவின் நேரிய ஜனநாயகம், இந்திரா காந்தியின் சிறந்த வெளிக்காட்டுக் கொள்கை வழி வந்த இந்திய தேசம் அவர்கள் மறைவின் பின் படிப்படியாக தமிழர்களுக்கு எதிராகச் செயற்படுவதேன்? இந்தியாவின் சிறந்த சிந்தனையாளரான வி.கே.கிருஷ்ணமேனன் ஐக்கிய நாடுகள் சபையின் கஷ்மீர் பிரச்சினை தொடர்பாக ஆறு மணி நேரமாகப் பேசிய போது இந்தியாவைப் பற்றி ஒரு பெரிய வரலாற்று உண்மையை ஒரே வழியில் அருமையாகச் சித்தரித்தார். "India is an old country but a new nation" என்று குறிப்பிட்டார். அதாவது இந்தியா ஒரு புராதன நாடு. ஆனால் புதிய தேசம் என்றார். இந்தப் புதிய தேசம் காட்டும் வழி இதுதானா? தமிழ் மக்கள் நினைத்திருக்கும் இந்தியா இன்றைய இந்தியா அல்ல.



"பைத்தியம் தெளிந்தால் தான் கலியாணம் ஆகும். கலியாணம் ஆனால் தான் பைத்தியம் தெளியும்" என்ற வரிகளுக்கொப்ப இன்று நாம் செய்ய வேண்டியது என்ன என்பதை நாம் செய்து கொண்டிருக்கின்றோம். அன்று இந்தியா பாகிஸ்தான் பிரிவுக்காக இந்திய நாட்டுத் தலைவர் ராஜாஜி கூறிய கருத்தே இது.

**இந்தியப்படைகளின் அட்டூழியம்.**

இலங்கைத் தமிழர்களின் இனஒழிப்பையும், ஒடுக்கு முறையையும் சிங்கள அரசு செயல் வடிவம் கொடுத்திருந்த உச்சகால கட்டத்தில் தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்து, ஆயுதங்கள் பலவும், நிதியும் தந்துதவிய இந்தியாவை நாம் மறக்கவில்லை. ஆனால் அதே இந்தியா இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியேற்ற ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் அரசியல் சாணக்கியத்தில் சிக்கி இலங்கைத் தமிழ் மக்களுக்கு எதிராகவே அமைதிப் படையாக வந்த இந்தியப் படைகளை ஆக்கிரமிப்புப் படைகளாகச் செயற்படச் செய்தது.

அன்று சுமார் 75 ஆயிரத்திலிருந்து ஒரு இலட்சம் இந்திய துருப்புக்கள் வரை இலங்கையின் தமிழர் தாயகப் பிரதேசமான வட கிழக்கில் குவிக்கப்பட்டனர். சமாதான சமத்துவ வாழ்வைப் பெற்றுத் தர வருகின்றார்கள் என்று இந்தியப் படையினருக்கு மாலை அணிவித்து, கைலாகு கொடுத்து, ஆராத்தியும் எடுத்து எமது தந்தை நாட்டுப் படையினரை வரவேற்றோம்.

இலங்கையின் பெரிய மண்டைக் காரரான ஜே.ஆரின் தலைமையிலான சிங்களப் படைகள், தமது இழந்த உரிமைக்காகப் போராடிய போராளிகளை அழித்தொழிப்பதாகக் கூறிக்கொண்டு தமிழ் மக்களையே அழிக்கும் செயல்களில் ஈடுபட்ட போது இலங்கை இனப் பிரச்சினைக்கு நல்லதோர் நிரந்தரத் தீர்வுகாணும் நடுவராகப் பணியாற்ற அன்றைய மறைந்த பிரதமர் அன்னை இந்திராகாந்தி முன்வந்தார்.

"மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும். அது முடிந்த பின்னால் என் பேச்சிருக்கும்" என்று சினிமாப்படப் பாடல் மூலம் தமிழ் உணர்வையும், பற்றையும், கடமையையும் வெளிக்காட்டி பல்வேறு உதவிகளை எமது போராட்டத்திற்கும் தமிழ் மக்களுக்கும் நல்கிய முன்னாள் தமிழக முதல்வர் மாமனிதர் எம்.ஜி.இராமச்சந்திரனுக்குப் பின் தமிழ்நாட்டு முதல்வர்கள் யாரும் கை கொடுத்ததாக இல்லை.


இலங்கையில் சிறந்த நடிகரை மணந்து பறி கொடுத்த ஜனாதிபதியும் நாட்டியம் பயின்று தனது தாய் வழியே சினிமாவில் நுழைந்து பின் எம்.ஜி.ஆர்.வழியில் அரசியல் வந்த தமிழ் நாட்டுத் தலைவியும் முறையே அரசியலில் தனது தாய் தந்தையை மிஞ்சி இறுதிவரை அரசியலில் இருக்க வேண்டும் என்ற முனைப்புடனும், மற்றவர் அரசியலில் தனக்கு எதிரிகள் இல்லாமல் ஒதுங்கி ஒழித்து விட வேண்டும் என்ற உணர்வோடும் செயற்படுவதால் இலங்கைத் தமிழர்கள் சொல்லொணாத் துயரங்களை எதிர்கொண்டுள்ளனர். "ஆயுதம் ஏந்திய ஈழப் போராளி குழுக்களுக்கு இனித் தமிழ் நாட்டில் இடமில்லை" என மு.கருணாநிதியும் கூறி எம்மை ஓரம் கட்டினார்.

இந்திரா காந்தி ஆட்சிக் காலத்தில் சர்வ கட்சி மகாநாடென்றும், வட்ட மேசை

### காவிய வேங்கை

மகாநாடென்றும் காலத்தை இழுத்தடித்த "தமிழர் முதுகுத் தோலால் செருப்புத் தைப்பேன்" எனக்கூறிய ஜே.ஆர்.ஜெயவர்த்தன அன்னை இந்திராகாந்தி மறைந்ததும் பிரதமராக வந்த சிறிய மண்டைக்காரரான ராஜீவ் காந்தியை தான் நினைத்தபடி ஆட்டுவித்தார். அதற்கு ஒத்து ஊதினாற் போல் அவரது ஆலோசகர்களும் இராஜதந்திரிகளும், இந்திய புலனாய்வுப் பிரிவும் செயற்படத் தொடங்கியது. இதனால் நடுவராக இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இருந்த இந்தியா சிங்கள அரசு பக்கம் தலை சாய்த்து தமிழ் மக்களுக்கு எதிரானது.

சர்வதேசப் போர் மரபுகளை எல்லாம் மீறிய இந்திய அமைதிப் படை



ஆக்கிரமிப்புப் படையாக மாறி அராஜகம் புரியத் தொடங்கியது.

1. தீபாவளித் தினத்தன்று யாழ் வைத்தியசாலைக்குள் புகுந்து வைத்தியர், தாதியர், நோயாளர் என்று பாராமல் பல நூற்றுக்கணக்கானோரைச் சுட்டுக் கொன்றது.
2. பல கிராமங்களிலும் நகரிலும் பல தமிழர்களைச் சுட்டுக் கொன்றது.
3. பல பெண்களை மானபங்கம் செய்தது. கற்பழித்துக் கொலை செய்தது.
4. பல தமிழ் இளைஞர் யுவதிகளை விசாரணை என்ற பெயரில் சித்திரவதை செய்தது. சிறை வைத்தது.
5. கடுக்கன் காதில் அணிந்திருந்ததால் ஆணிலும் காம வெறியாட்டம் நடத்தியது.
6. விடுதலைப்புலி உறுப்பினர்களைக் கைது செய்து இலங்கை இராணுவத்திடம் ஒப்படைத்து கொலை செய்தது.
7. சிங்களப் படைகளுக்கும், நாட்டை விட்டு ஓடி மறைந்திருந்தவர்களுக்கு ஆயுதங்களும் பயிற்சியும் வழங்கி விடுதலைப் போராட்டத்தை நசித்து புலிகளுக்கு எதிராகத் தூண்டியது.
8. பத்திரிகையாளர், பத்திரிகை நிறுவனம் என்பன கொலை செய்யப்படுவது, அச்சுறுத்துவதையும், இல்லாதொழிப்பதையும் இவர்களுக்குக் கற்றுக் கொடுத்தது என்று அடுக்கிக் கொண்டே போகலாம்.

இந்நிலையில் ராஜீவ்காந்தியோ, இலங்கையில் இந்தியத் தூதுவராக இருந்த தீக்ஷித்தோ பாதிக்கப்பட்ட மக்களின் துயர்களைய முன்வரவில்லை. எமது தமிழ் மக்கள் செய்த முறையீடுகள் அவர்கள் காதில் விழவில்லை. ஏன் உண்ணாவிரதம் சாகும் வரை இருந்த தியாகி திலீபன், அன்னை பூபதி ஆகியோர் அகிம்சைத் தீ வளர்த்தது கூட காந்திய நாட்டுக்குத் தெரியாமல் போனது.

கிழக்குப் பாகிஸ்தான், வங்களாதேசாகப் பிரிந்த போது அதற்கு மூலகாரணமாக இருந்த இந்திய இராணுவம் அங்கும் இதே போன்று அட்டூழியங்கள் புரிந்ததும் உடனடியாகத் திருப்பி அழைத்து அப்பாவி மக்களைப் பாதுகாத்த அன்னை இந்திராகாந்தியின் மகன் ராஜீவ்காந்திக்கு எமது மக்களின் மீது நடாத்தப்பட்ட கொடிய அட்டூழியங்கள் புலப்படவில்லை. இன்றும் இந்திய இராணுவத்தின் அட்டூழியங்களை வங்களாதேசம் எவ்வாறு மறக்கவில்லையோ அவ்வாறே ஈழத் தமிழ் மக்களும் புதுடில்லி அரசையும், இந்திய இராணுவத்தையும் என்றுமே மறக்க மாட்டார்கள். காரணம் இந்திய இராணுவத்தின் அட்டூழியச் சுவடுகள் இன்றும் அழியாமல் கிடக்கின்றன. "நேருவின் நேரிய ஜனநாயகக் கொள்கையும் அன்னை இந்திராகாந்தியின் ஈழமக்கள் மீது கொண்ட உணர்வையும் உரிமையையும் வெளிநாட்டுக் கொள்கையையும் இன்றையத் தலைவர்கள் முன்னெடுக்கவில்லை"


**ஈழத்தமிழர் மீது கசப்பை ஏற்படுத்திய ராஜீவ் கொலை**

அன்று தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த சமயம் ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட சம்பவம் பற்றி தமிழ் மக்கள் மகிழ்ச்சி கொள்ள வில்லை. தொடரும்.......

---




### மனமுவர்ந்து உதவுக



**ரணில் விக்கிரமசிங்காவுக்கு!**

சுனாமிப் பேரழிவு எம் தாயக தேசத்தைப் பதம் பார்த்துவிட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் பலிக்கடாவாக்கப்பட்டு விட்டனர். போரினால் சிதைந்து அழிந்த தேசம் சுனாமியால் அள்ளுண்டு போய்விட்டது. அரச நிவாரண உதவிகள் இன்னும் வந்து சேரவில்லை.

உலங்கு வானூர்தியில் வருபவர்கள் உல்லாசமாக வட்டமடித்துப் பார்த்துவிட்டுச் செல்கின்றனர். அனர்த்தத்தால் பாதிப்புற்றவர்கள் சிந்தும் கண்ணீர் அந்தரத்தில் வட்டமடிப்பவர்களுக்கு துளியளவும் தெரியாது. அரசசார்பற்ற நிறுவனங்கள், தனியார் காட்டும் அக்கறையும் மனிதாபிமானமும் ஐக்கிய இலங்கை எனக் கட்டியம் கூறும் ஆட்சியாளர்களிடமில்லை.

மனிதாபிமான மீட்புப்பணிகள் கூட மந்த கதியில் நடக்கிறது.

தமிழினத்தின் விடுதலைக்கான குரல்வளையை நசுக்க சதியா? இப்போதைய சூழ்ச்சிகள் என தமிழ் மக்கள் கருதும் நிலையில் நடக்கும் நாடகங்கள்.

இதற்குள் உங்கள் கட்சியின் ஆதரவு அதிகம் தேவைப்படும். அண்மையில் யாழ் சென்று வந்தீர்கள். அனர்த்தத்தைக் கண்டிருப்பீர்கள்.

கிழக்கிற்கும் வாருங்கள் பாருங்கள். அழிந்து சிதைந்து கிடக்கும் தேசமதைப் புனரமைக்க உதவிக்கரம் நீட்டும் தமிழினத்திற்கு மனமுவர்ந்துதவுக.

கடந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் கைச்சாத்திட்ட போர் நிறுத்தம் தொடர்கிறது சுனாமிப் பேரலையால் இனிவரும் காலத்தில் போர் நிறுத்தம் சிதைந்து விடக்கூடாது, அது தொடரப்பட வேண்டும். அதேவேளை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தாயகதேசமும் அர்த்தமுடைய வகையில் புனரமைக்கப்பட வேண்டும்.

தற்போது சர்வதேச சமூகப் பிரதிநிதிகள் வருகிறார்கள். கொழும்புடன் திரும்புகிறார்கள்.

தென்னிலங்கையில் நடந்த சுனாமிப் பேரலை அனர்த்தத்தையே இவர்கள் தேச அழிவாகச் சித்தரித்துக் காட்டுகின்றனர்.

அழிவுகள் அதிகம் அம்பாறை என்று ஆட்சியாளர்கள் சொல்லியிருக்க மாட்டார்கள். அம்பாந்தோட்டை என்றிருப்பார்கள் என தமிழ் பேசும் சமூகம் கவலை கொள்கிறது.

இந்நிலையில் பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் சர்வதேச சமூகத்திடம் தாயக தேசத்தில் நிகழ்ந்த அனர்த்தத்தின் கொடூரங்களைக் காட்டுங்கள். தமிழர் தாயக புனரமைப்புப் பணிக்கு விடுதலைப்புலிகளின் நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று தேவை. அது இடைக்கால தன்னாட்சி அதிகார சபையாக அமையவேண்டும். அதனூடாக தாயகப் புனரமைப்புப்பணி உறுதியாக முன்னெடுத்துச் செல்லப்படும் என்பதைக் கருத்திற் கொண்டு இதற்காக வலியுறுத்துங்கள் எனக் கூறி முடிக்கிறேன்.

இங்ஙனம்.

ஈழமகன்

# குழந்தைகள் மெலிவடைவதால் பெற்றோருக்கு கவலை வேண்டாம்



குழந்தைகளின் ஆரோக்கியத்திற்கும், அதன் உடல் பருமனுக்கும் எந்தத் தொடர்புமில்லை. ஆனாலும் குழந்தைகள் மெலிவாக இருப்பது அவர்களது பெற்றோரைப் பெரிதும் கவலைக்குள்ளாக்குகின்றது. குழந்தை மெலிவாக இருக்கக் காரணங்கள் பலவுள்ளன.

குழந்தைகள் மெலிவாக இருப்பதற்குப் பரம்பரைக் காரணமாக இருக்கலாம். குழந்தையின் தாய் அல்லது தந்தை வழியில் யாரேனும் மெலிவாக இருந்தால் , குழந்தையும் அப்படியிருக்கலாம். இக்குழந்தைகள் சாப்பிடுவதில் எந்தக் குறையும் இருக்காது. எந்தவித நோயாலும் பீடிக்கப் பட்டிருக்க மாட்டார்கள். கோழையாகவோ, பயந்த சுபாவமுள்ளவர்களாகவோ இருக்க மாட்டார்கள்.

சில பெற்றோர் தங்கள் குழந்தை மிகவும் திடகாத்திரமாக வளர வேண்டும் என்ற ஆர்வத்தால் எந்த நேரமும் சாப்பிடச் சொல்லி வற்புறுத்திக் கொண்டே இருப்பார்கள். சாப்பிடா விட்டால் பலவந்தப் படுத்தி ஊட்டுவார்கள். இதனால் குழந்தை பசி குறைந்து அது சாப்பிடும் அளவும் குறைந்து மெலிவாகும்.

எது கேட்டாலும் உடனே வாங்கிக் கொடுக்கும் பெற்றோர்களும் உண்டு. அதனால் குழந்தை சொக்லெட், பிஸ்கட் போன்றவற்றையே சாப்பிட்டுக் காலத்தைக் கழிக்கும். இதனாலும் குழந்தையின் பசி குறையும். வேறு எந்த உணவைக் கொடுத்



தாலும் சாப்பிடாது. சாப்பாட்டில் சீனி சேர்த்துக் கொடுப்பது, கோபி போன்று தாம் சாப்பிடுகின்ற எல்லாவற்றையும் குழந்தைக்கும் கொடுத்துப் பழக்குவது போன்றவையால் குழந்தையின் இயற்கையான பசி குறைந்து, சோறு, தயிர், கீரை போன்ற அத்தியாவசியமான உணவுகள் உட்கொள்வது குறைந்து உடல் பருமனும் குறையும்.

வசதி குறைந்த குடும்பத்தில் குழந்தைக்குத் தேவையான பால், தயிர், பருப்பு போன்றவற்றை வாங்கிக் கொடுக்க பெற்றோருக்கு வசதியிருக்காது. இதனால் குழந்தைகள் மெலிந்து காணப்படுவார்கள்.

வசதியான குடும்பங்களில் பெற்றோரின் அறியாமையால் சில குழந்தைகளின் உடல் நலன் பாதிக்கப்படும். பாலில் நீரை அதிகம் சேர்ப்பது அதன் போஷாக்கைக் குறைத்து விடும். பாலை அப்படியே கொடுத்தால் எளிதில் சமிபாடடையாது என்பது அவர்களது தவறான எண்ணம். பாலில் நீர் கலப்பதால் அதன் சுவையை ஈடுகட்ட சீனி சேர்த்துக் கொடுப்பார்கள். இதனால் பசியின்மை, புளித்த வாடையுடன் மலம் வெளியேறுதல், அடிக்கடி காற்று வெளியேறுதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படும்! இப்பழக்கத்தை பெற்றோர் தவிர்க்க வேண்டும்.

நன்றாக இருந்து வந்த குழந்தை திடீரென மெலிய ஆரம்பித்து விட்டது என்றால், அக்குழந்தையை மருத்துவரிடம் அழைத்துச் சென்று பரிசோதிக்க வேண்டும். திடீர் மெலிவிற்கு பிறைமரி கொம்ப்ளக்ஸ், டி.பி. நோய் போன்றவை காரணமாக இருக்கலாம். சில குழந்தைகளுக்கு அபூர்வமாக நீரழிவு நோயும் ஏற்படலாம். அதனாலும் உடல் மெலியலாம். எனவே முறையாக மருத்துவ சிகிச்சை தேவை.

மெலிவான குழந்தைகள் எல்லாமே ஆரோக்கியமற்றவர்கள் என அர்த்தமில்லை. சாப்பிடும் விதத்திலோ, செயற்பாடுகளிலோ எந்தக் குறையும் இல்லாத பட்சத்தில் மெலிவான குழந்தையைப் பற்றி அனாவசியமான பயம் வேண்டாம்.

# மகளிர் மகுடம்



## பெண்ணே! கேள்.



புதுமையின்
புன்னகையாய்
புதுயுகத்தின்
ரீங்காரமாய் - வெளியில்
வந்தவள் - நீ
பெண்ணே! கொஞ்சம்
செவிசாய்த்துக் கேள்!

பெண்ணுக்குப் பெருமையா...?

பொறுமையின்
பொக்கிஷமே - பூவையவள் தான்
அதை யோசித்தாயா...?
எரிமலையாய் வெடிக்கிறாயே!
ஆளப் பிறந்தவள் - நீ
ஆணவத்தை விட்டுவிடு!!

அமைதியின்
அத்திவாரமே பெண்மைதான்
அதை மறந்து விட்டு
அட்டகாசப் பறவையாய்
உலகம் சுற்றுகிறாய்! - இது

எவரையும் அடக்க முற்படாதே!
அடங்கியிரு!! - அகிலமே
உன் புகழ் பாடும்!

பு.கயல்விழி .மட்..நொச்சிமுனை

# தலை முடிக்கு மஜாஜ் செய்து சிறந்த பலனைப் பெறலாம்



ஒவ்வொரு மாதமும் தலை முடியின் நுனியை மட்டும் சற்று ஒழுங்கு செய்து கொள்வது நல்லது.

இவ்வாறு செய்வதால் முடியின் நுனியில் ஏற்படும் பிளவு முடியின் வேர்வரை பரவாது.

வாரத்திற்கு ஒரு தடவை முடியின் வேர்ப் பகுதியில் மாத்திரம் சுத்தமான தேங்காய் எண்ணெய்யோ அல்லது ஆமெண்ட் எண்ணெய்யோ அழுத்தித் தடவி 'மஜாஜ்' செய்வது நல்லது. அது வேர்ப்பகுதியை நன்கு விழிப்படையச் செய்யும். அதனால் தலைமுடி நன்கு வளரத் தொடங்கும்.

வாரத்தில் இரண்டு நாட்களுக்கேனும் தலையில் பசும்பாலைத் தேய்த்து சற்று ஊற வைத்துக் குளித்து வரவும். இதனால் தலைமுடி நன்கு பளபளப்பாகும்.

நல்ல உணவுப் பழக்கத்தினாலும் தலைமுடி உதிர்வதைத் தடுக்கலாம்.


நீரழிவுக் காரர்களுக்கு அதாவது சீனி வியாதிக்காரர்களுக்கு முடி உதிரவே செய்யும். இரத்தத்தில் உள்ள சீனி அளவைக் குறைத்துக் கொண்டால் தலைமுடி உதிர்வது சற்றுக் குறையும்.

காசநோய்க்காரர்களும், இரத்த சோகைக் காரர்களும் தலைமுடியைப் பலி கொடுக்க வேண்டியது தான்.

சிலருக்கு பரம்பரைச் சொத்தாக நல்ல செழுமையான முடி அமைந்து விடுவதுண்டு. அவர்கள் அதைப் போஷிப்பதில் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும்.

# நாற்பது வயதுப் பெண்களுக்குரிய ஆசனங்கள்

நாற்பது வயது கடந்த பெண்களைத் தாக்கும் உடற் கோளாறுகளைப் போக்க கீழ்க்காணும் ஆசனங்களைச் செய்வதால் உடலில் நல்ல இயக்கம் ஏற்பட்டு உடல் கோளாறுகள் நீங்கும். இதனால் தன் உடல்மீது ஏற்படும் வெறுப்பு மறைந்து புரிந்துணர்வுடன் செயற்பட ஆசனங்கள் உதவுகின்றது.



சலபாசனம், தனுராசனம், அதோமுகஸ்வானாசனம், பஸ்சிமேத்தானாசனம், பாதபத்மாசனம், யோக முத்ராசனம், விபரீதகரணி, சர்வாங்காசனம், ஹலாசனம், மத்சியாசனம், அர்தமச்சேந்திராசனம், சுவாசனம், நாடிசுத்தி ஆகியவற்றைச் செய்வதன் மூலம் உடல் கோளாறுகள் நீங்கும் என்பதில் ஐயமில்லை.

சாதாரணமாக நோயின் தாக்கத்திற்கு ஏற்ப தாய்மார்கள் பாதிக்கப்படுகிறார்கள். இது அவர்களின் வாழ்க்கைநெறி, உணவு மற்றும் ஜீரணக் கோளாறுகள், குடும்பத்தில் ஏற்படும் மனக் கசப்பான நிகழ்ச்சிகளால் வெறுப்பு போன்றவற்றால் இந்தக் கோளாறுகள் ஏற்படுகின்றன. எனவே யோகாசனங்களைத் தக்க குருவின் மூலம் அறிந்து தினமும் பயின்றால் சுகமான வாழ்வு பெறலாம்.

# கருவளையம் நீங்க....



பேரிச்சம்பழம் 1, பிஸ்தாபருப்புதலா 4, குங்குமப்பூ 1 சிட்டிகை எடுத்து முதல் நாள் இரவு ஊற வைக்கவும். அடுத்த நாள் அரைத்து கருவளையம் மீது தடவி 15 நிமிடத்தில் துடைக்கவும்.

புரோட்டின் பவுடர் அல்லது ஸ்கிமிட் மில்க் பவுடர் 2 டிஸ் கரண்டி எடுத்து தண்ணீரில் குழைத்து கருவளையத்தில் தடவி சிறிது நேரத்தில் கழுவலாம்.

ஒரு முட்டையின் வெள்ளைக் கருவை கண்களின் அடியில் தடவி 10 நிமிடத்தில் குளிர்ந்த நீரால் கழுவவும். கருவளையங்களும் குறையும். முகச்சுருக்கங்களும் மறையும்.

பார்வையில் கோளாறுகள் இருந்தாலும் அதனால் கருவளையம் வரலாம். இதற்கு கண் மருத்துவரின் ஆலோசனையுடன் சரியான கண்ணாடி அல்லது லென்ஸ் உபயோகித்தால் சரியாகி விடும்.

# வைத்தியக் குறிப்புக்கள்

❋ வாய், வயிறு ஆகியவற்றில் புண் இருந்தால் தேங்காயப் பாலில் சிறிது தேனைக் கலந்து சாப்பிட்டுவர புண் நாளடைவில் மறைந்து விடும்.

❋ அடிக்கடி நெஞ்சுவலி ஏற்பட்டால் உழுந்துமாவைக் களியாகச் செய்து சாப்பிட்டுவர நெஞ்சுவலி நீங்கி விடும்.

❋ நீங்காத வயிற்றுவலி நீங்க தினமும் காலையில் அப்பிள் ஜூஸ் பருகி வர வலி நீங்கி இரத்த விருத்தி உண்டாகும்.

❋ உடற் பருமன் குறைய கரிசலாங்கண்ணி இலையை பருப்புடன் சேர்த்து பொரியல் செய்து சாப்பிட உடற் பருமன் குறையும். (இரவில் இதைச் சாப்பிடக் கூடாது)

❋ இரவில் நித்திரையின்றி துன்பப் படுபவர்கள் ஒரு கப் சூடான பாலில் சில துளிகள் தேன் கலந்து பருகினால் சுகமாகத் தூக்கம் வரும்.

❋ வல்லாரையை பருப்புடன் பொரியல் செய்து சாப்பிட்டு வர நினைவாற்றல் அதிகரிக்கும்.

❋ தலைவலி, ஒற்றைத் தலைவலி நீங்க தினமும் திராட்சை ரசம் பருகி வந்தால் வலி மறையும்.

## லவேரியா


**தேவையானவை:-**

அரிசிமா அல்லது கோதுமைமா -1 சுண்டு.

| | |
|---|---|
| தேங்காய் | - $1/2$ பாதி |
| சீனி | - 100 கிராம். |
| ஏலப் பொடி | - 1 தேக்கரண்டி |
| உப்பு | - அளவாக |

**செய்முறை:-**

மாவுடன் உப்பைச் சேர்த்துக் கொதி நீர் விட்டுக் குழைக்கவும். தேங்காய்ப் பூவுடன் சீனியைக் கலந்து வறுத்து ஏலத்தையும், சேர்த்து ஈரம் அண்டியதும் இறக்கவும்.



மாவை இடியப்ப உரலில் இட்டு எண்ணைய் பூசிய வாழை இலையில் இடியப்பத்தைப் பிழியவும். நடுவில் கலவையை வைத்து சரி பாதியாக இலையை மடித்து ஓரங்களை அமர்த்திய பின் இலையை விரித்து எடுத்து நீராவியில் அவித்தெடுக்கவும்.

# முகப்பரு தோன்றுவதற்கான காரணங்கள்.......

சருமத்தின் அடிப்பகுதியில் மயிர் கால்கள் இருக்கின்றன. அத்தோடு தொடர்புடைய சுரப்பிகளும், எண்ணெய்ச் சுரப்பிகளும் அங்கே அமைந்திருக்கின்றன.

எண்ணெய்ச் சுரப்பிகள் அதிகமாக எண்ணெய் சுரக்கும் போது, எண்ணெய் மயிர்க் கால்களில் சேர்ந்து சருமத்தில் உள்ள நுண்ணிய துவாரங்களை அடைத்து விடுகின்றன. அதில் பக்ரீறியாக்கள் செயற்பட்டு அமிலமாக மாறி விடுகின்றன. அந்த அமிலம் சருமத்திற்குக் கொடுக்கும் தொல்லையால் முகப்பரு தோன்றுகின்றது.

முகப்பருவில் பத்துக்கும் மேற்பட்ட வகைகள் உள்ளன. சிலவகை முகப்பருக்கள் மூக்கைச் சுற்றிலும் நெற்றி மற்றும் தாடைப்பகுதியிலும் தோன்றும்.

முகப்பரு அதிகமாக எண்ணெய்த் தன்மை கொண்ட சருமத்தில் தான் தோன்றுகின்றன. சருமத்திலுள்ள நுண்ணிய துவாரங்கள் மூடாமல் காத்துக் கொள்ளலாம். இதன் மூலம் முகப்பரு தோன்றுவதை ஓரளவு தவிர்க்கலாம். முகத்தில் மட்டுமன்றி தோள்கள், முதுகு நெஞ்சுப் பகுதிகளிலும் முகப்பரு தோன்றுகின்றது. அந்தப் பகுதியில் உள்ள சுரப்பிகள் அனைத்தும் அதிகமான எண்ணெய் உற்பத்தி செய்வதே அதற்குக் காரணம்.

முகப்பரு ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குத் தொற்றுவது கிடையாது. முகப்பருவைக் கிள்ளி விடுவதால் அது ஓரிடத்திலிருந்து இன்னொரிடத்திற்குப் பரவுவதில்லை. ஆனால் முகப்பருவைக் கிள்ளி விடுவது மூலம் அது புண்ணாகிப் பெரிதாகி விடும். புண்காய்ந்து போகவும் காலதாமதம் ஆகும்.

சிலருக்கு தலையில் அதிக அளவு பொடுகு இருக்கலாம். பொடுகு இருப்பவர்களுக்கெல்லாம் முகப்பரு அதிகம் ஏற்படும் என்பதில்லை. ஆனாலும் எண்ணெய்த் தன்மை கொண்ட சருமம் இருப்பவர்களுக்கே பொடுகு அதிகமாகத் தோன்றும். அதனால் சிலருக்கு பொடுகும் இருக்கும். முகப்பருவும் அதிகம் தோன்றும். எந்த வகையான முகப்பருவாக இருந்தாலும் மூலிகை சிகிச்சை மூலம் குணப்படுத்தி விடலாம்.

# தரம் 05 மாணவர்களுக்கான முன்னோடி வழிகாட்டல் வினா விடைகள் 2005

**பயிற்சி 08**

01. ஜாமினி என்பவள் ஜானகிக்கு தங்கை, ஜாமினி என்பவள் உமாவிற்கு தங்கை, ஜாமினி மேனகைக்கு தங்கை.
    1. எல்லோரிலும் இளையவள் ஜாமினி 11. எல்லோரிலும் மூத்தவள் மேனகை
    111. எல்லோரிலும் இளையவள் உமா
02. படித்தவர்கள் எல்லோரும் விவேகிகள் அல்ல. ஆகவே
    1. படித்தவர்களில் சிலர் விவேகிகள்
    11. படிக்காதவர்களில் எவரும் விவேகிகள் அல்ல. 111. படிக்காதவர்கள் அனைவரும் விவேகிகள்
03. எஸ்கிமோக்கள் அனைவரும் கட்டையானவர்கள் ஆகவே.
    1. எஸ்கிமோக்கள் எல்லோரும் கட்டையானவர்கள் 11. எஸ்கிமோக்களில் உயர்ந்தவர்களும் உண்டு.
    111. எஸ்கிமோக்கள் மெலிந்த தோற்றமுடையவர்கள்.
04. நெல்ஷன் மரியால் கரிய நிறமுடையவள். அவள் ஒரு நீக்ரோ இனத்தவள். ஆகவே நிக்ரோ இனத்தவர்கள் கரிய நிறமுடையவர்கள்.
    1. சரி 11. பிழை 111. கூறமுடியாது.
05. சித்திரை மாதத்தில் வெயில் அதிகம். வெயில் அதிகமான மாதங்களில் வெப்பம் அதிகமாக இருக்கும். ஆகவே சித்திரை மாதத்தில் வெயில் அதிகமாக இருக்கும்.
    1. சரி 11. பிழை 111. கூறமுடியாது

**பயிற்சி - 09**

**பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01. கடந்த காலங்களில் எமது நாட்டில் மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டது.
    1.மழையின்மையால் ஆகும்.
    11. மின்சாரம் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டமையினால் ஆகும்.
    111. மின்கம்பங்கள் சரிந்து விழுந்தமையினால் ஆகும்.
02. கமல் பத்து நாட்கள் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றான். அதற்குக் காரணம்
    1. வீட்டைவிட வைத்தியசாலை சொகுசானது என்பதனால் ஆகும்.
    11. கமலுக்கு பீடித்திருந்த நோய் அதிகரித்ததால் ஆகும்.
    111. கமலின் வசிப்பிடமே வைத்தியசாலை என்பதால் ஆகும்.
03. மாணவர்கள் அதிகமாகப் புத்தகங்கள் வாசிப்பது சிறந்த ஒரு பழக்கமாகும். காரணம்.
    1. புத்தகங்கள் வாசிப்பதனால் அறிவு விருத்தியடையும் என்பதனால் ஆகும்.
    11. புத்தகங்கள் விலை குறைவு என்பதனால் ஆகும்.
    111. ஆசிரியர்களும் புத்தகங்களையே வாசிக்கின்றார்கள் என்பதனால் ஆகும்.
04. இரவில் நித்திரைக்குச் செல்லும் முன் பல் துலக்குதல் வேண்டும். அதற்குக் காரணம்.
    1. பல் துலக்கியபின் நன்கு தூங்கலாம் என்பதால் ஆகும். 11. பல் பாதுகாக்கப்படும் என்பதால் ஆகும்.
    111. பற்கள் சக்தி பெறுகின்றன என்பதால் ஆகும்.
05. கொழும்பை நோக்கிச் சென்ற பேருந்து ஒன்று, புகையிரத வண்டியில் மோதியது. இவ்விபத்துக்குக் காரணமாக இருக்கக் கூடியது.
    1. பஸ் சாரதியின் கவனயீனம் ஆகும். 11. புகையிரத சாரதியின் கவனயீனம் ஆகும்.
    111. பலத்த காற்று வீசியமையினால் ஆகும்.


**பயிற்சி - 10**


**பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**


01. சென்ற வருடம் சஸ்னி வகுப்பில் முதலாம் மாணவியாக வந்தாள். அதற்குக் காரணம்.
    1. ஆசிரியை நன்கு கற்றுக் கொடுத்ததனால் ஆகும்.
    11. சஸ்னி படிப்பில் கெட்டிக்காரி என்பதினால் ஆகும்.
    111. வகுப்பில் ஏனைய மாணவர்கள் நன்கு படிக்காததினால் ஆகும்.
02. அசுத்தமான நீரைப் பருகுவது தடுக்கப்படல் வேண்டும். அதற்குக் காரணமாக இருக்கக்கூடியது.
    1. அசுத்தமான நீர் சுவை குறைந்தது என்பதால் ஆகும்.
    11. நோய்கள் பரவும் என்பதால் ஆகும்.
    111. அசுத்தமான நீர் தட்டுப்பாடு என்பதால் ஆகும்.
03. இந்தப் பிரதேசத்தில் சகல மரஞ்செடி கொடிகளும் காய்ந்து உள்ளன. அதற்குக் காரணமாக இருக்கக் கூடியது.
    1. அதி கூடிய சூரிய வெப்பம் ஆகும்.
    11. மழை கிடைக்காமை ஆகும். 111. அசுத்தமான நீர் தேங்கி நிற்பதால் ஆகும்.
04. ஞாயிற்றுக் கிழமைகளில் வீதிகளில் செல்லும் வாகனங்களின் எண்ணிக்கை குறைவாகும். அதற்குக் காரணமாக இருக்கக் கூடியது.
    1. ஞாயிற்றுக் கிழமை விடுமுறை நாள் என்பதனால் ஆகும்.
    11. ஞாயிற்றுக் கிழமைகளில் மக்கள் பஸ் வண்டியில் பயணம் செய்வதால் ஆகும்.
    111. ஞாயிற்றுக் கிழமைகளில் மக்கள் சினிமாவுக்குச் சென்று விடுகின்றனர் என்பதால் ஆகும்.
05. இலங்கை ஒரு தீவு ஆகும். அவ்வாறு கூறப்படுவது.
    1. இலங்கையைச் சுற்றி கடல் இருப்பதனால் ஆகும்.
    11. இலங்கை இந்தியாவுக்கு அண்மையில் அமைந்திருப்பதனால் ஆகும்.
    111. இலங்கை மாங்காய் வடிவில் அமைந்திருப்பதனால் ஆகும்.


**பயிற்சி - 10**

**பின்வரும் ஒவ்வொரு உருவிலும் நிழற்றப்பட்டுள்ள பகுதியைத் தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் பின்னங்களாக எழுதுக.**


01)

= ..........................


02)

= ..........................


03)

= ..........................





**பின்வரும் ஒவ்வொரு உருவிலும் நிழற்றப்பட்டிருக்கும் பகுதியைப் பின்னங்களாக உரிய வெற்றிடத்தில் எழுதுக.**


01)

= ..........................


02)

= ..........................




03)

= ..........................


04)

= ..........................


05)

= ..........................


06)

= ..........................

**பின்வரும் ஒவ்வொரு உருவிலும் நிழற்றப்பட்டிருக்கும் பகுதியைப் பின்னங்களாக உரிய வெற்றிடத்தில் எழுதுக.**

01)

= ..........................

02)

= ..........................


= ..........................


= ..........................

## மாணவர் பரிசுக் குவியல்

**தமிழ் பேசும் மாணவ செல்வங்களுக்கு!**

ஈழநாதம் மட்டக்களப்பு பதிப்பு மாணவர் அறிவுத் திறனை விருத்தி செய்யும் வகையில் வாரந்தோறும் பரிசுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. மட்டக்களப்பு ராஜாஸ் புத்தக நிலையத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படும் இந்தப் பரிசுக் குவியலில் நீங்களும் அதிஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்படுமிடத்து பெறுமதி மிக்க அறிவு நூல்கள், பாடசாலை உபகரணங்கள் பரிசுகளாக வழங்கப்படும்.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்,

கீழ்வரும் வினாக்களுக்கு சரியான விடை எழுதி, பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தி அனுப்புதல் வேண்டும்.

முதலாவது அதிஷ்டசாலிக்குப் பரிசும் பாராட்டுப் பெறும் ஐந்து மாணவர்களின் பெயர், பாடசாலை விபரங்களும் பிரசுரிக்கப்படும்.

**விடைகள் வந்து சேரவேண்டிய இறுதித் திகதி-** 2005-01-24

**அனுப்பவேண்டிய முகவரி**

மாணவர் பரிசுக்குவியல் —20,
ஈழநாதம்[மட். பதிப்பு],
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை

**ஆழிப் பேரலை அனர்த்தம் காரணமாக கடந்த 26-12-2004 ஈழநாதத்தில் வெளியான பரிசுக்குவியல் வினாக்களை மீண்டும் பிரசுரிக்கின்றோம்.**

01. உலகில் மிகப்பெரிய நூலகம் எங்கு அமைந்துள்ளது?
02. சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் யார்?
03. உலகில் ஆறுகள் இல்லாத நாடு எது?
04. உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி எத்தனை ஆண்டுகளுக்கொருமுறை இடம் பெறும்?
05. ஜப்பான் நாட்டின் தலைநகரம் எது?

**மட்டு நகரில் சகலவிதமான பாடசாலை உபகரணங்கள் மற்றும் அப்பியாசக் கொப்பிகள் அறிவு நூல்களுக்கு :-**




தொ.பே.இல:- 065-2222371 065-2225341

# தருமம் தலை காக்கும்

ஒரு கிராமத்தில் அழகன் என்னும் இளைஞன் தன் தாயுடன் வாழ்ந்து வந்தான். அவன் கல்வியறிவு சற்றுமில்லாதவனாக இருந்தான். ஆனால் நல்ல உழைப்பாளி விவசாயத்தையே தொழிலாகக் கொண்டிருந்தான். ஆனால் அவன் மகாகஞ்சன். யாருக்கும் அன்பளிப்பாகவோ, உதவியாகவோ, பரிசாகவோ எதுவும் கொடுக்கமாட்டான். பிறருக்கு மட்டுமல்ல அவனும் நல்ல விதமாக அழகிய ஆடைகள் வாங்கி அணியமாட்டான். சுவையாகச் சமைத்து உண்ணமாட்டான். ஆடம்பரச் செலவுகள் எதுவும் செய்யமாட்டான். பணத்தை எண்ணியெண்ணிக் கட்டுக் கட்டாக இரும்புப் பெட்டியில் பூட்டி வைத்திருந்தான். அழகனின் தாயும் அவனுக்குப் பயந்து எதுவும் செய்யாது அவனைப் போலவே வாழ்ந்து வந்தாள்.

இப்படி வாழ்ந்து வரும் வேளை தாய் அழகனுக்கு திருமணம் செய்து பார்க்க ஆசைப்பட்டு அழகனிடம் தன் ஆசையைக் கூறினார். திருமணம் செய்து கொண்டால் மனைவியாக வருபவளுக்கும் சேர்த்து நிறையச் செலவாகுமே.. பணமெல்லாம் கரைந்து விடுமே என்றெண்ணித் தாயின் ஆசைக்கு மறுப்புத் தெரிவித்தான்.

அழகனின் மறுப்பைக் கண்டு மனம் நொந்து எனக்கும் வயதுபோய் விட்டது, இப்பெல்லாம் கண்ணும் சரியாகத் தெரியுதில்ல, காதும் கேக்குதில்ல, உடம்பெல்லாம் படபடவெண்டு நடக்குது. எத்தின நாளைக்கு நானும் உயிரோடு இருக்கப் போறன் ..... நான் கண்ண மூடினபிறகு நீ மட்டும் இருந்து என்ன செய்யப் போகிறாய் ... உன்ர நன்மைக்குத்தான் சொல்லுறனப்பா" என்று கூறினாள். தாயின் சொல்லைக் கேட்டு அரைமனதுடன் சம்மதம் கூறினான் அழகன். சில தினங்களின் பின்பு அக்கிராமத்தில் எளிமையான முறையில் திருமணம் நடந்தது. திருமணம் நடைபெற்று சில தினங்களில் அவனின் தாயும் இறந்து போனாள்.

திருமணமானதும் மேலும் கஞ்சத்தனம் காட்டினான் அழகன். மனைவியை இஸ்டப்படி சமையல் செய்ய விடமாட்டான். காலையில் இரண்டு பேருக்கும் இரண்டு ரொட்டி செய்வதற்குரிய மாவை அவனே எடுத்துக் கொடுப்பான். மதிய உணவு சமைப்பதற்குத் தேவையான அரிசி, காய்கறி வகைகளையும் அளவாக அவனே எடுத்தக் கொடுப்பான். மனைவியும் அப்படியே செய்து வந்தாள். இப்படி வாழ்ந்து வரும் வேளை ஒருநாள் காலையில் ரொட்டி சுட்டுக் கொண்டிருக்கும் போது ஒரு பிச்சைக்காரர் வந்து ''பசுக்குது சாப்பிட ஏதாவது தா தாயே" என்று கையேந்தி பரிதாபமாக நின்றான். ஆனால் அவருக்குக் கொடுக்க இரண்டு ரொட்டிகளைத் தவிர வேறெதுவும் அவள் கையில் இல்லை, எனவே அந்த ரொட்டிகளில் பாதியை அப்பிச்சைக்காரருக்குக் கொடுத்தாள். அவரும் சாப்பிட்டு பசியாறி நன்றி கூறிவிட்டுச் சென்றான்.

அதன்பின்பு அழகன் வந்து ''பசிக்குது ரொட்டியை எடுத்துவா சாப்பிடுவோம்" என்றான். அவன் மனைவி ரொட்டியை எடுத்து வந்து வைத்தாள். அப்போது பாதி ரொட்டியை கண்டு ''என்ன இது பாதி ரொட்டி ஆருக்குக் கொடுத்தாய்?" என்று கேட்டான். ''பிச்சைக்காரருக்கு கொடுத்ததாகச் சொன்னால் ஏசுவார்" எனமனதில் நினைத்தவளாக ''எனக்கு கடுமையாகப் பசிச்சிது ரொட்டி சுடக்குள்ள பாதிய நான் சாப்பிட்டிற்றன் " என்று பொய் கூறினாள். ''அப்பசரி, பாதிய நீ சாப்பிடு" என்று சொல்லி முழு ரொட்டியைச் சாப்பிட்டான் அழகன்.

நாட்கள் நகர்ந்து சில தினங்களின் பின் ஒருநாள் இரவு ஜாமத்தில் ஆழ்ந்த நித்திரையிலிருந்த அழகன் புலம்பியடித்துக் கொண்டு எழுந்தான். ஆச்சரியத்தோடு மனைவியை நோக்கிய அழகன் தனது மனதில் தோன்றிய எண்ணத்தை அறிய, ''ஆமா சில நாட்களுக்கு முதலொருநாள் ரொட்டி சாப்பிடக்குள்ள பாதி ரொட்டி இல்லாம இருந்ததே அத நீதான் சாப்பிட்டியா?" என்று கேட்டான்.

''சிந்தித்த அவள் ஏசுவீர்களெனப் பயந்தே பாதி ரொட்டியைச் சாப்பிட்டதாக பொய் சொன்னதாகவும் கூறினாள். அந்தப் பாதிரொட்டி தான் தன்னைக் கனவில் வந்து காப்பாத்தியது. ''தர்மம் தலைகாக்கும்" என்பதையுணர்ந்து அவன் இதுவரை காலமும் கஞ்சனாகவும் பிறருக்கு உதவியேதும் செய்யாது கீழ்த்தரமான வாழ்க்கை வாழ்ந்ததையிட்டு மனம் வருந்தி வேதனைப்பட்டு அன்றிலிருந்து நிறையத் தான தருமங்கள் செய்யலானான்.

## எனது நண்பி

- எனது நண்பி பெயர் சிரோமி.
- சிரோமி நல்ல நண்பி.
- நாங்கள் இருவரும் ஒரே வகுப்பில் படிக்கிறோம். சிரோமி எல்லோரையும் விட நல்ல நண்பி.
- சிரோமி எனது வீட்டிலிருந்து சிறிது தூரத்தில் வசிக்கிறாள்

த. ஜிவசங்கரி, தரம்-4வி,
மட். விவேகானந்தா
ம.ம.வித்.

## தானைத் தலைவன்

யானை ஒன்று காட்டிலே
யாரும் அறியா இடத்திலே
தானைத் தலைவன் ஆகிய
தத்துவத்தைக் கேட்பீரே

மாமிசம் உண்ணா மாண்பினால்
மற்ற மிருகம் யாவையும்
நண்பர் ஆக்கிக் கொண்டதே
பண்பாய் வாழ்ந்து வந்ததே

ஒரு நாள் வேற்று நாட்டுடை
ஓங்கி உயர் யானைகள்
காட்டை அழிக்க வந்துமண்
கவ்வித் திரும்பிச் சென்றதே

யானை உடைய வீரத்தை
யாரும் அறியலாச்சுதே பின்
சண்டை வேண்டாமென்றவை
அண்டி வாழ முயலுதே

**எம். ஐ. அப்றோஸ்**
**மருதமுனை கல்முனை**



தா. துசேந்தி
தரம் 10எஸ்
விஸ்னு மகா வித்தி.
வந்தாறுமூலை

## அரசியல் உலகப் பாராளுமன்றங்கள்

| நாடு | | பாராளுமன்றம் |
|---|---|---|
| 01. அமெரிக்கா | - | காங்கிரஸ் |
| 02. நேபாளம் | - | தேசிய பஞ்சாயத்து |
| 03. கனடா | - | மக்கள் சபை, செனட் |
| 04. ருஷ்யா | - | சுப்ரீம் சோவியத் |
| 05. தென்னாபிரிக்கா | - | ஹவுஸ் ஆப்அசெம்பிளி |
| 06. சுவீடன் | - | ரிக்ஸ்டாக்காங்கிரஸ் |
| 07. சுவிட்சர்லாந்து | - | பெடரல் அசெம்பளி |
| 08. ஈரான் | - | மஜ்ஜிலீஸ் |
| 09. இந்தியா | - | லோக்சபா, ராஜ்யசபா |
| 10. ஆஸ்திரியா | - | பெடரல் அசெம்பளி |

**ஆ.நிதிராஜ்**
**மட்-சிவானந்தா வித்தியாலய தேசிய பாடசாலை**

## பொது அறிவு

01. சமாதான சின்னமான வெண்புறாவை அமைத்துக் கொடுத்தவர் யார்?
*ஓவியர் பிக்காஸோ*
02. சுரங்க காவல் விளக்கைக் கண்டு பிடித்தவர் யார்?
*மார் பெக்*
03. செயற்கை கண்கள் தயாரிக்கும் நாடு?
*சோவியத் ரஷ்யா*
04. இரு பகுதிகளிலும் கண்களைக் கொண்ட உயிரினம் எது?
*வண்ணத்துப்பூச்சி*
05. ஆமைகளின் ஆயுட்காலம் எத்தனை ஆண்டுகள்?
*100 ஆண்டுகள்.*
06. சுவாசிக்காமல் உயிர்வாழும் உயிரினம் எது? ,
*ஈஸ்ட்*
07. வாயில் சுவை நரம்புகளே இல்லாத மிருகம் எது?
*திமிங்கிலம்*
08. மனிதன் ஆழ்ந்து உறங்கும் போது எத்தனை தடவைகள் புரள்கிறான்?
*40 தடவைகள்*
09. சீனாவின் துயரம் என அழைக்கப்படுவது எது?
*நோர்வே*
10. ஆசியாவில் கரும்புரவி என போற்றப்படும் வீராங்கனை யார்?
*சுசந்திகா ஜயசிங்க*
11. புவியின் உபயோகத்தைக் கண்டறிந்தவர் யார்?
*ஜேம்ஸ் வாட்*
12. இலங்கையில் அதியுயர்ந்த நீர் வீழ்ச்சி எது?
*பம்பரகந்த*
13. ஒலி தெறிப்படுவதால் ஏற்படுவது எது?
*எதிரொலி*
14. தலைகீழாகத் தொங்கிக் கொண்டு உறங்கும் விலங்கு எது?
*வௌவால்*
15. அரசாங்க பாடசாலை நடாத்தும் பொறுப்பை எப்போ பெற்றது?
*1960 ஆம் ஆண்டு*

**கு.தபேசகாந்**
**மட்-பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம்.**




## இறப்பர் பிறந்த கதை



அமெரிக்காவின் பழக்குடி மக்கள் பதினோராம் நூற்றாண்டிலேயே இறப்பரை அறிந்திருக்கின்றார்கள். பதினோராம் பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இறப்பர் பொருட்கள் இன்றைய புதைபொருள் ஆய்வாளர்களும் மிகவும் முக்கிய சான்றாக விளங்குகின்றன. அமெரிக்க மக்களிடம் இருந்தே ஐரோப்பிய மக்கள் இறப்பரைப் பற்றித் தெரிந்து கொண்டனர். ஆயிரத்து எண்ணூற்று முப்பத்தோராம் ஆண்டில் ''சார்ள்ஸ் குட் இயர்" என்ற அமெரிக்கர் இறப்பரை அன்றாட உபயோகத்திற்குப் பயன்படுத்துவது பற்றிச் சிந்தித்தார். அவரது நோக்கம் இலேசான வெப்பம் இறப்பரைத் தாக்கினாலும் இறப்பர் உருகி விடுவதைத் தடுத்து அதன் கட்டித்தன்மையை இழக்காமல் இருக்கச் செய்ய முடியுமா என்பதைக் கண்டறிந்தார். தனது முயற்சியில் வெற்றியும் கண்டார்.

**செல்வி அ. சுகேசனா, தரம் 5**
**மட் -கோட்டமுனை கனிஷ்ட வித்., மட்டக்களப்பு**

## பொன் மொழிகள்

புத்தகங்கள் நம் மனத்தோடு பேசுகின்றன.
நண்பர்கள் நம் இதயத்தோடு பேசுகின்றனர்.
இறைவன் நம் ஆன்மாவோடு பேசுகிறார்.
மற்ற அனைவரும் நம்செவியுடன் பேசுகின்றனர்.
-சீனப் பழமொழி-

இருபதில் அழகன்.
முப்பதில் வலிமையானவன்.
நாற்பதில் செல்வந்தன்.
ஐம்பதில் அறிவாளி என்று இல்லாதவன்.
பின்னாளில் அவற்றைப் பெறமுடியாது.
செக்கோஸ்லோவேக்கிய பழமொழி

நீ மென்மையாக இருந்தால்
உன்னைக் கசக்கிப் பிழிந்து விடுவார்கள்......
நீ விறைப்பாக இருந்தால் உன்னை
தகர்த்தெறிந்து விடுவார்கள்.
அரேபிய பழமொழி

மற்றவர்களுடைய வாழ்க்கையோடு
உங்களுடைய வாழ்க்கையை
ஒப்பிட்டுப் பார்க்காதீர்கள்.....
உங்கள் வாழ்க்கையை இரசியுங்கள்.
அதில் தான் இன்பத்தின் இரகசியம் இருக்கிறது.
பிரெஞ்சுப் பழமொழி

மௌனமாய் இருந்து அனைத்தையும் கேளுங்கள்.
கவனமாகவும் பொறுமையாகவும் இருங்கள்.
இந்த உலகத்தில் உள்ள அனைத்தையும்
கற்றுக் கொண்டு வாழலாம்.
நெதர்லாந்து பழமொழி

**க. திபருபி**
**தரம் 12 கலை**
**மட் -பட்டிருப்பு ம.ம.வி.தேசிய பாடசாலை.**

## உன்னதமான உறவுகள்

- நானே பெரியவன், நானே சிறியவன் என்ற அகந்தையை விடுங்கள்.
- எந்த விசயத்தையும், பிரச்சினையையும் நாசூக்காக கையாளுங்கள், விட்டுக் கொடுங்கள்.
- சில நேரங்களில் சில சட்டங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும். என்று உணருங்கள்.
- நீங்கள் சொன்னதே சரி. செய்ததே சரி, என்று வாதாடாதீர்கள். குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.
- மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள்.
- அளவுக்கு அதிகமாய் தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள்.
- உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.
- மற்றவர் கருத்துக்களை, செயல்களை, நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள்.
- மற்றவர்களுக்கு உரிய மரியாதை காட்டவும் இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள்.

**ஏ.கிருஷ்ணா**
**மட்-முதலைக்குடா மகா.வித்தி.**

இவ்வாரச் சிறுகதை

# மொட்டொன்று மலர்கிறது



அன்று திங்கட்கிழமை...! காலை ஒன்றுகூடல் முடிந்து மாணவர்கள் தத்தம் வகுப்பறைகளுக்குள் நுழைகின்றனர். முதலாம் பாடத்துக்கான மணி ஒலிக்கிறது. ஐந்தாம் தரவகுப்பறைக்குள் சேரலாதன் சேர் பிரவேசிக்கிறார்.

''குட் மோர்ணிங் சேர்..!'' என்று எல்லா மாணவர்களுமே எழுந்து நின்று தங்களது வகுப்பாசிரியருக்கு வணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். அதற்கு ஆசிரியரும் ''வெரிக் குட் மோர்ணிங்.. சிற்றவுண்..'' என்றதும் எல்லா மாணவர்களுமே தத்தம் ஆசனங்களில் அமர்கின்றனர்.

சேரலாதன் சேரின் பார்வையில் வேணுவின் ஆசனம் மாத்திரம் காலியாகவே கிடக்கிறது. ''வேணு இன்றைக்கும் வரவில்லையா பிள்ளைகள்'' என்று கேட்டார். ''இல்ல சேர்! இன்றைக்கும் இல்ல!'' ஒருமித்துப் பிள்ளைகள் பதிலைச் சொல்ல...

''என்ன நடந்ததாம்..? ஒருவரும் காணவும் இல்லையா பிள்ளைகள்...?'' கேள்விக்கு மேல் கேள்வியைத் தொடுக்கிறார் சேரலாதன் சேர்.

''என்ன நடந்தெண்டு தெரியா சேர்... கல்வாடி வேலைக்குப் போறான் சேர்... கண்ட நான் சேர்..'' இது வேணுவின் ஊரைச் சேர்ந்த குமாரின் வாயில் இருந்து வந்த பதில். ''நான் போன புதன் கிழம அம்மாவோட ஆஸ்பத்திரிக்குப் போகக்குள்ள சந்தையடியில வேணுவக் கண்ட சேர்... மூட சுமக்கிறான்..'' இது கஜேந்தினியின் பதில்..!

அவளையும் கேட்டளவில் ஆசிரியரின் கண்களில் கண்ணீர் முட்டுகிறது. இதயத்தை வேதனை தட்டுகிறது...! இருந்தும் தன் கடமையிலும் கண்ணாகவே இருக்கிறார். ''சரி... எல்லாரும் புத்தகத்தை எடுங்கோ'' எனப் பாடத்தைத் தொடங்குகிறார்.

அவருக்கோ. பாடத்தைப் போதித்துக் கொண்டு இருக்கையிலும். ''இவன் பிள்ள ஏனப்பா இந்த நிலைக்குத் தள்ளப்பட்டான்?'' என்பது தான் இதயத்தில் இடியாய் விழுகிறது.

''ஒழுங்காகத் தவறாது இவ்வளவு காலமும் ஸ்கூள் வந்து கொண்டிருந்த பெடியன்... நல்ல கெட்டிக்காரப் பெடியன்... நடந்தது தான் என்னவோ..?'' வேதனையோடு வேதனையாய் அன்றைய பாடசாலைப் பொழுதும் கழிகிறது.

எப்படியோ வேணுவைச் சந்திக்க வேண்டும். மீண்டும் வேணுவை ஸ்கூளுக்கு எடுக்க வேண்டும் எனத் திடசங்கற்பம் பூண்ட சேரலாதன் சேர் எதிர்பாராத விதமாகவே வேணுவைச் சந்திக்கின்றார்.

ஆம். அன்று மாலை ஆறுமணியளவில் சேரலாதன் சேர் தன் வயல் சென்று வரும் போது வேணுவும் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தான்..! கண்டதும் உடனே வைசிக்கிள் வேகத்தைக் குறைத்து நின்று கொண்ட ஆசிரியர்...

''எங்க நின்று வாறா வேணு...?'' கேட்டார். ''கல்வாடி நின்று சேர்..'' தலையைத் தொங்கப் போட்டபடி சொன்னான். ''கல்வாடி வேலை செய்யவும்... நாட்டாமை வேலை செய்யவும் தானா பள்ளிக்கு வந்த நீ..? திடீரெண்டு உனக்கு என்ன நடந்த..?'' உடல் கறுத்து. உருக்குலைந்து இருந்த கோலத்தைப் பார்க்கையிலே சற்றுச் சூடாகவே ஆசிரியரின் கேள்விகள் இருக்கிறது.

''எங்கட அம்மா சேர் வீணாக அப்பாவோட பிரச்சினைப் பட்டுத்து அப்பாவ வெறுத்துத்தாவு சேர்.. விவாகரத்தே செய்துத்தாவு சேர்... அதால அப்பா இண்டைக்கு எங்களோட இல்ல... ஆனாலும் அப்பாவால எங்கள கொஞ்சங்கூட மறந்திருக்க ஏலாது...... அடிக்கடி எங்களச் சந்திக்கிறதுக்கு ஓடி வருவார். ஆனா அம்மா விடமாட்டாவு எங்கள... ''கொப்பனோட எந்தத் தொடர்பும் ஒங்களுக்கு இனி இல்ல..'' என்று எனக்கும். என்ர ரெண்டு தங்கச்சிக்கும் அடிக்கிறவ சேர்..''

வேணுவின் கண்களோ கடல்களாக.... சேரலாதன் சேரின் கண்களும் சேர்ந்தொன்றாய் கண்ணீரைச் சிந்த... ''ஏறு மனே வேணு ஏறு..'' தன் பைசிக்கிளில் சிறுவனை ஏற்றி எடுத்துக் கொண்டு மெதுமெதுவாக அதைச் செலுத்துகிறார்.

வேணுவோ தன் சோகக் கதையைச் சொல்லிக் கொண்டே இருக்கிறான். ''அது மட்டுமில்ல சேர்... அன்றையோடே... ''பள்ளிக்கு நீ போனதெல்லாம் போதும். இனி நீதான் உழைக்க வேணும. கொள்ளி விறகப் போ இல்லாட்டி கல்வாடிக்குப் போ'' என்று சொல்த்தாவு சேர்... அதுக்கு நான் என்ர பள்ளிக்கூட வாழ்க்கையில தயவு செய்து மண் ணை அள்ளிப் போட வேணாம். பள்ளிக்கு நான் போகத் தான் வேணும் படிச்சு நல்லதொரு நிலைக்கு வந்த பிறகு உங்களுக்கெல்லாம் உழைச்சு நான் தரு வன் தானே அம்மா'' என்று சொல்ல சேர்...

பொத்துடா வாயப் பொத்து... சொல்லுறதக் கேக்கப் போறியா இல்லையா..? பள்ளிக்கு நீ போ பாப்பம். ரெண்டு காலையும் கட்டாயம் முறிச்சுப் போட்டு ருவன்... நீ பள்ளிக்குப் போனா ஆருடா உழைக்கிறது...? பட்டினிகிடந்து சாகுறது தான்'' என்று கேட்டுக் கேட்டுத் துரத்தித் துரத்தி அடிச்சவ சேர்... அதோட தான் நான் பள்ளிக்கு வாறத்த விட்டனான் சேர்..'' வேணுவோ விசயத்தைச் சொல்லி முடிக்க...

''இப்படியான அரக்க குணம் படைத்த தாயும் இருக்கிறாளா...?'' என ஆசிரியரின் விழிகள் ஆச்சரியத்தால் சுழல... வேணுவின் விழிகளும் வேதனை தாங்க முடியாமல் கண்ணீரைக் கக்கியபடி சுழல்கிறது.

''அழாத மனே அழாத... மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்குமே ஏதோ ஒரு விதத்திலையாவது ஏக்கங்களும் வேதனைகளும் இருக்கத்தான் செய்யுது... நீ மீண்டும் ஸ்கூளுக்கு வரத் தான் போகிறா... வரவேணும்.. ஒளிமயமான காலம் உனக்குண்டு..'' ஆசிரியரின் புத்திமதிகளுக்கு இடையே குறுக்கிட்ட சிறுவன்...

''நான் ஸ்கூளுக்கு இனிக் கடசிமட்டும் வரவே மாட்டன் சேர்... அப்பிடி வந்தா அம்மா என்ன அடிச்சே கொண்டு போட்டுருவாவு சேர்... அதத்தானே இப்ப நான் சொன்னன் சேர்...''

எவளவு தூரத்துக்கு வேணுவை தாயவள் அச்சுறுத்தி இருக்கிறாள் என்பதையும்... அது பிஞ்சு மனதில் எவ்வளவு பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது என்பதையும் ஆசிரியரால் நன்றாக விளங்கிக் கொள்ள முடிகின்றது. வேதனையால் அவருள்ளம் விம்முகின்றது.

''மனே வேணு... கவலயக் கைவிடு... நானும் இப்ப உன்னோட வாறன். உங்கட அம்மாட்ட இதப்பற்றிக் கதைக்கிறன்... ஸ்கூளுக்கு நீ வரலாம் சரிதானே'' என்று சேர் சொல்ல வீடும் நெருங்க நேரம் சரியாகவே இருந்தது. இருவரும் வளவுக்குள் நுழைகின்றனர்.

முற்றத்தில் இருந்து கொண்டு விளக்குகளுக்கு எண்ணெய் விட்டுக் கொண்டிருந்த தாய் பரிமளாவிடம் ''அம்மா இது என்ர வகுப்பாசிரியர் சேரலாதன் சேர்'' என வேணு சொன்னதும்...

''....வாங்க வாங்க இரிங்க..'' பாயொன்றை எடுத்து வந்து விறாந்தையில் விரித்து விட்டு விளக்குகளை ஏற்றுகிறாள் பரிமளா. பாயில் அமர்கிறார் சேரலாதன் சேர்..!

''அம்மா உங்களோட சேர் சில விசயங்களைப் பற்றிக் கதைக்க வேணுமாம்'' வேணு தாயவளின் காதுக்குள் கிசு கிசுக்க விளக்குகளை ஏற்றி விட்டு வெளியே வருகிறாள் அவள். வேணுவும் வந்து விறாந்தையில் அமர்கிறான்.

''என்ன ஐயா? ஏதோ கதைக்க வோணுமாம்...'' பரிமளாவோ வாயை முதலில் திறக்க... ''வேணு பாடசாலைக்கு வந்து கிட்டத்தட்ட ஒரு மாதமாகுதே... அது தான் பார்த்து த்துப் போவம் எண்டு வந்த நான்..'' எனக் கதையைத் தொடங்குகிறார் ஆசிரியர்...

''வேணு ஏனிப்ப பாடசாலைக்கு வாறானில்ல? ஏலாது என்று சொல்கிறானா?''

''இல்லைய்யா..! நான்தான் போக வேணாம் எண்டு சொன்ன நான்''... ''ஏன்'' குடும்பத்துக்க பிரச்சின ஐயா... விவாகரத்துச் செஞ்சித்தன்.. நானும் பிள்ளைகளும் தான் இஞ்சப்ப வாழுறம்... அதால உழைக்கிறதுக்கு ஒருவரும் இல்ல. அதால தான்..''

''அதால.. பெடியன நாட்டாமை வேலைக்கும் கல்வாடி வேலைக்கும் விட்டிருக்கையளா...?'' பரிமளாவோ ''ஓமென்று'' அதற்குத் தலையாட்ட...

''எந்த ஒரு தாயோ தந்தையோ தங்கட பிள்ளைகள் நல்லா வரவேணும் என்று தான் விரும்புவாங்க... ஆனா நீங்க... பிள்ளைகள் இப்படி சீரழிஞ்சு போவதைத் தானா விரும்புறீங்க..''

''.........'' அதற்கு பரிமளாவோ பெருவிரலால் நிலத்தைக் கீறிக் கொண்டு தலையைக் குனிந்து கொண்டு நிற்கிறாள்.

''அம்மா பிச்சை எடுத்தேனும் பிள்ளைகளப் படிப்பிக்கிறது தானம்மா பெற்றோருக்கு அழகு. வேணுவை பாடசாலைக்கு அனுப்ப வேண்டும். அத நீங்க விரும்ப வேண்டும்...''

''அப்பிடி என்டா என்னப் பிச்ச எடுக்கச் சொல்லுறயளா ஐயா...?''

''இல்ல..! ஆனா கல்வி அந்தளவு முதன்மையானது. முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது என்பதைத் தான் சொல்ல வாறன்..''

''இந்த உலகத்திலயம்மா பொன் அழியும். பொருள் அழியும். எல்லாமே அழியும்.. ஆனா கல்வி ஒன்று மட்டும் எதனாலும் அழியவே அழியாது... இப்பிறப்பில் மட்டுமில்ல ஏழு பிறப்புக்களிலேயும் தொடர்ந்து வந்து துணை செய்யும்.. அதால கல்விதான் ஒரு மனிதனுக்கு கண்..! பிள்ளை பெற்று விட்டால் மட்டும் போதாது. உரிய கால நேரத்தில் அவர்களைப் பாடசாலைக்கு அனுப்பி படிப்பித்து... புத்தி மதிகளைப் புகட்டி... நல்வழிகளைக் காட்டி உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்வது தானம்மா ஒவ்வொரு பெற்றோரினதும் தலையாய கடமை..''

''உங்கட குடும்ப விவகாரம் பற்றி நானிஞ்ச கதைக்க வரல்ல.. ஆனா அது எவ்வளவு தூரத்துக்குப் பாரதூரமான விளைவுகளைக் கொண்டு வந்திருக்கு என்பதைப் பற்றிப் பெரிதும் கவலப்படுறன்...''

எதுவுமே பேசாமல் எல்லாவற்றையுமே உள்வாங்கிக் கொண்டு ஒரு மௌனியாக நிறகிறாள் பரிமளா. வேணுவும் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டே இருக்கிறான். சேரலாதன் சேர் தொடர்கிறார்.

''வாழ்க்கையில் எந்தவொரு விடயத்தை எடுத்துக் கொண்டாலும் கஸ்ரப்படாம எதையுமே அடைய முடியாதம்மா... எப்படியோ கஸ்ரப்பட்டேனும் பிள்ளைகளப் படிப்பிச்சி விட்டுத்தயள் என்றால் பின்னுக்கு நல்லா இருப்பையள். இஞ்ச பாருங்க இந்தப் பெடியனக் கண்டு நாளைக்கு உங்கட இந்த மற்றப் பிள்ளைகளும் பாடசாலைக்குப் போக ஏலாது என்று தான் சொல்லப் போகுதுகள். அது மட்டுமில்ல எல்லா வகையிலையுமே பாரதூரமான பாதிப்புகளை இன்னுமின்னும் கொண்டு வரவே போகுது...''

''அதால இந்தப் பெடியன நீங்க பாடசாலைக்கு அனுப்பியே ஆக வேணும். முதல் பிள்ளைதான் குடும்பத்தில மற்றைய பிள்ளைகளுக்கும் நல்ல வழிகாட்டி. படிப்பிச்சே ஆக வேணும். இதற்கு நானும் என்னாலான உதவிகளைச் செய்யிறன்... என்ன சரிதானே...''

''சரி ஐயா நாளையில இருந்தே நிச்சயமாக நான் வேணுவைப் பள்ளிக்கு அனுப்புறன்.'' வாயைத் திறந்து சொல்கிறாள் பரிமளா.

''ரொம்ப நன்றியம்மா''தன் அகச் சோலையில் மகிழ்ச்சிப் பூக்கள் பூத்துக் குலுங்க பரிமளாவிடமிருந்தும். வேணுவிடமிருந்தும் விடை பெறுகிறார் ஆசிரியர்.

அன்று இரவல்லாம் பரிமளாவுக்கோ தூக்கமே இல்லை. எல்லாவற்றையுமே அணுவணுவாகச் சிந்தித்துப் பார்க்கிறாள். ஆசிரியரின் வரிகள் ஒவ்வொன்றும் எவ்வளவு அற்புதமான வரிகள்.. ஆழ்ந்த கருத்துடைய வரிகள்...

''சிக்... இப்பிடியும் ஒரு பெண்ணாக இருந்திருக்கனே... இந்த அருமையான மனுசன வெறுத்ததும்... விவாகரத்து செஞ்சதும்.. இவன் பிள்ளையளப் போட்டு படாதபாடு படுத்தினதும்.. எல்லாம் என்ர கொழுப்புத்தான். அதர்மம்தான். என்னப்போல ஒரு பெண்ணும் இந்த உலகத்தில இரிக்கக்கூடாது. சிக் நானொரு படு பாவி..! இனி எப்பாடு பட்டேனும் பிள்ளைகளைப் படிப்பிப்பேன்..'' அந்த உறுதியோடு தான் ஒருவாறு கண்ணயர்ந்து கொள்கிறாள் பரிமளா...

மறுநாள் மலர்கிறது. பரிமளா சொன்னது போலவே பாடசாலைக்கு வந்திருந்தான் வேணு. சேரலாதன் சேருக்கோ கொள்ளை ஆனந்தம். ஏன் அந்தப் பாடசாலைக்கே ஆனந்தம்.

''ஸ்கொலசிப் வருது மனே...நல்லாப் படிக்க வேணும்... பாஸ் பண்ண வேணும்... பெற்றோருக்கும். பாடசாலைக்கும். ஊருக்கும் பெருமை எடுத்துத்தர வேணும்.'' சேரலாதன் சேர் புத்தி புகட்டாத நாட்களே இல்லை.

''ஸ்கொலசிப்பில் இந்த ஸ்கூளால் ஐந்து மாணவர்களையாவது பாஸ் பண்ண வைக்க வேண்டும்'' என்னும் நல்நோக்கோடு சேரலாதன் சேரோ அயராது பாடுபட்டார். பலன் கிடைத்தது. எதிர்பார்ப்புக்கும் மேலாக எட்டு மாணவர்கள் ஸ்கொலசிப்பில் பாஸ்பண்ணி இருந்தனர். அவர்களுள் வேணுவே அதிகமான புள்ளிகளைப் பெற்றிருந்தான். சேரலாதன் சேருக்கோ எல்லையற்ற ஆனந்தம்.

பரிமளாவும் ஆனந்தத்தால் துள்ளினாள். ''அண்ணாவைப் போல நீங்களும் நல்லாப் படிக்க வேணும். அண்ணா படிக்கிற பள்ளியிலதான் உங்களையும் வாறவருஷம் கொண்டு சேர்த்து விடுவன்'' என மற்றப் பிள்ளைகளையும் ஊக்கப்படுத்தினாள்.

கால ஓட்டத்தில் ஓ-எல்லும் பாஸ் பண்ணி. ஏ எல் பரீட்சையும் எழுதி விட்டு பெறுபேற்றுக்காக காத்திருந்தான் வேணு. என்னே ஆச்சரியம் மூன்று பாடங்களிலும் ஏ'' தரச் சித்திகளைப் பெற்று அந்தப் பாடசாலையிலேயே சிறந்த பெறுபேற்றைப் பெற்று பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியிருந்தான். உடனே உபகாரப் பொருட்களுடன் சேரலாதன் சேரை அடைந்த வேணு ''எனது உயர்வுக்கெல்லாம் மூல முதல் நீங்கதான் சேர்..'' எனச் சொல்லும் போது இருவரின் கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் பொங்குகிறது.

சரவணன் கோயில்போரதீவு

# கதறல் ஒலி

கடலன்னை
வெகுண்டெழுந்தாள்
மாந்தர்கள் ~ பல
திசை ஓடினாலும்
அவளது
அரவணைப்பில்
சிக்குண்டு போயின
பல ஜீவன்கள்!
யாரறிவார்...?
இப் பரிதாபத்தை...
பல உயிர்கள்
பலவாறாகப் பிரிந்தாலும்
உடல்கள் இன்னும்
மீட்கப்பட வில்லையே!
சிதைந்து போன
இதயங்களுடன்
பரிதவிக்கும் உள்ளங்களை
கண்கூட பாரீர்!
குலைந்து போன
உடல்களை
நரிகள் வேட்டையாடும்
பரிதாப நிலையைப்பாரீர்!
எம்மிதயங்கள்
எப்படித் தாங்கும்
எண்ணில்லாத சோதனைகளை....
இயற்கை அன்னையே...!
வேண்டாம்
இனியும்
இப்படியொரு
அகோரக் காட்சி
நிறுத்தி விடு ~உன்
ஆளுமையை.....!

பு. கயல்விழி
மட்-நொச்சிமுனை

# "சுனாமியே" இனிவரவேண்டாம்

சுனாமியே.
நீ!
வந்தாய்
துன்பங்களையும்
துயரங்களையும்
பரிசாகத் தந்தாய்
நீ!
தந்த பரிசால்
மக்களாகிய நாங்கள்
அகதிகளாக
முகாம்களில்
தஞ்சம் புகுந்துள்ளோம்.
உன்
வருகையால்
படித்தவன், பாமரன்
என்ற பேதமும்
பணக்காரன், ஏழை
என்ற
உயர்வு, தாழ்வும்
வீரன், கோழை
என்ற வித்தியாசமும்
சமமாய்ப் போனது
இதனால்
இந்த
சமூகம்
ஓரளவு
திருந்தியிருக்கிறது.
கணவனை இழந்த
மனைவியும்,
மனைவியை இழந்த
கணவனும்,
பெற்றோரை இழந்த
பிள்ளைகளும்,
பிள்ளைகளை இழந்த
பெற்றோரும்,
என
வகைவகையாக
உறவுகளை
பிரித்து விட்டாயே!
இனியாவது
இறைவனில் பயபக்தி
மனித மனங்களில்
ஏற்பட வேண்டும்.
உன் வருகை
பல வித
அறிவையும்
அனுபவத்தையும்
ஏற்படுத்தியிருக்கின்றது.
இதனால்
உனக்கு
நன்றி சொல் வேண்டும்.
ஆனாலும்
நீ இனி வரவேண்டாம்.

சீமா.எம்.ஏ.காதர்
மருதமுனை

# இனியும் வேண்டாம்

ஆண்டவா!
தமிழன் என்ற சொல்லுக்கு
"அகதி" என்ற
மறு பெயர்
அகராதியில் கூட
இல்லையே... ஏன்
நீ அந்தப் பெயரைச்
சூட்டினாய் எங்களுக்கு.

குண்டு வெடியில் - தப்பி,
குள்ள நரிகளிடம் - தப்பி,
குடி இருந்த வீட்டை
விட்டு ஓடிய எங்களுக்கு,
குறுகிய சமாதானத்தை - தந்து
தலை நிமிர வைத்தவர்
எங்கள் தலைவர்
தமிழர்களின் அண்ணன்.

இந்த சந்தோஷம்
உம்மை என்ன செய்தது?
கரைகளை கழுவும் கடலுக்கு
"சுனாமி" என்ற
சக்தியைக் கொடுத்து
சும்மா இருந்த - எங்கள்
உறவினர்களை
சூறையாடி விட்டாயே...
இனியும் வேண்டாம் - உன்
சோதனையும் விளையாட்டும்
நாங்கள் நிம்மதியாய் இருக்க
உதவு ஆண்டவா...

ரீ.குணம்
சவூதி

# மறுபடியும் வந்திடாதே

சுனாமியே நீயா..?
இவ்வளவு உயிர்களையும்
காவு கொண்டுவிட்டு
இப்போது அமைதி காண்கிறாய்

இருபது வருடங்கள்
யுத்த அரக்கன்
கொடுத்த உயிரழிவை
ஐந்தே நிமிடத்தில்
உலகை
அதிர வைத்து விட்டாய்

கடலோரம் தான்
காற்றுவாங்க நல்ல இடம்
என்றிருந்த மக்களை
உயிர்குடித்த
கொடியவனே - நீ
பூண்டுவந்த
புதுக்கோலம் போதும் - நீ
மறுபடியும் வந்திடாதே

ந.விஜிதா

# சுனாமி அரக்கன்

கொடியதொரு அலையரக்கன்..
வந்து கொன்று நின்றதடா..
முதியோரோடு பிஞ்சுகளை...!
பெற்றெடுத்த குஞ்சுகளை..
தவிக்க விட்ட அன்னையரும்..
அன்னையரை அலையில் விட்டு..
துடிதுடித்த பாலகரும்..
கடலலையில் தத்தளித்து..
கையசைத்த சமிக்கைகளை..
கண்முன்னே பார்த்த போதும்....!
காப்பாற்ற முடியவில்லை..
உயிர்பிரியும் போது மனம்..
பதபதைத்துப் போயிருக்கும்..
கண்ணிமைக்கும் பொழுதினிலே..
வந்துயிர்கடித்த கொடியவனே..!
நீர்க் கோலம் பூண்ட..
நீதியில்லாக் கொலையரக்கா..!
மீண்டும் வருவாயோ..
உயிர்குடிக்க...

கே.நிலாநிதன் ராதா
மருத்துவப்பிரிவு

# ஊமை வாழ்வு

இறைவன் படைத்த உலகினிலே
இன்பம் காண துடிக்கையிலே
இரக்கம் அற்ற கடலலையே
இன்னல் தந்தாய் நெஞ்சினிலே.

அன்னை தந்தை பாசத்திலே
அன்பாய் மகிழ்ந்த நேரத்திலே
அகம்பாவம் கொண்ட பேரலையே
அரக்கன் போல வந்தாயே.

உன்னை நம்பி வாழ்ந்தோரை
உந்தன் வெறிக்கு ஆளாக்கி
உடமை உறவை சிதறடித்து
ஊமை வாழ்வை தந்தாயே.

சு.ப்பிரித்திவி
மட்-புதூர்

# காதல்

இத்தனை காலமாக
இருவரும்
காதலில் லயித்திருந்தோம்
உனது வீட்டார்கள்
ஒத்தாசை வழங்காததால்
என்னை தயவு செய்து
மறந்திடு என்கிறாய்
எப்படியம்மா மறக்க முடியும்
கடனை வாங்கினால்
திருப்பிக் கொடுத்திடலாம்
காதலை வாங்கினா
ஆயுள் வரைக்கும்
மறக்க முடியாதம்மா
அது தானம்மா காதல்

கண்ணன், எருவில்

# காண்போம் அமைதிப் பூங்கா

பாலாறும் தேனாறும் பாயுதிங்கே
பாங்குடனே பலகலையும் வாழுதிங்கே
செந் நெல்லும் தானியமும் குவியுமிந்த
குதூகலத்தில் ஆடிடுவர் நாட்டுக் கூத்து.

உலகிற்கே உணவளிக்கும் உழவர் கூட்டம்
அலைகடலில் மீனவர்கள் தேடும் தேட்டம்
ஆடை ஆபரணத் தொழிலாளர் மட்டம்
ஆர்வமுடன் வாழ்ந்து வழங்கள் சேர்க்கும்.

அன்பு மதங்கள் மூன்றாம் இங்கே
அன்னை தமிழின் கண்கள் இரண்டாம்
அன்பால் தமிழர் முஸ்லிம் ஒன்றாய்
இணைந்தே வாழும் நாட்கள் வேண்டும்.

கடலில் சேரும் நதிகள் போலும்
மாலையின் வண்ண மலர்கள் போலும்
தேனகம் தனில் வாழும் சமூகம் நாம்
இணைந்து காண்போம் அமைதிப் பூங்காவை.

மு.தவராசா
குருக்கள்மடம்.

# பொங்கியெழு....

உறுதியற்ற உள்ளத்தை
உதறி எறி
உரம் மிக்க நெஞ்சினாய்
உயர்ந்து நில்லு
பொறுதி கொண்டு தலைகுனிந்த
பொறுமை போதும்
பொங்கியெழு புயலாக
எதிரி பயந்தோட
அறுதியிட்டுக் கூறு நாங்கள்
அடிமை அல்லவென்று
அண்டை நாட்டு
வந்தேறு குடிகள் அல்ல சொல்லு
இறுதிவரை எமது தாய்
திரு நாட்டு மண்ணை
இன்னுயிர் போல் காப்போம்
என்று கவி பாடு!
வீரத் தமிழனாய் வாழு.

கவிக்குயிலன்
சேனையூர் - 06

# உனக்காக

என் இதயப் பூங்காவில்
ஒளி வீசப் பிறந்த இளம் நிலாப் பூவே
நீ சுவாசித்து விட்டு
மீதியிருக்கும் காற்றைத்தான் நான்
தத்தெடுத்து வைத்திருக்கிறேன் சுவாசிப்பதற்கு
அதுவும் உன் சம்மதம் கிடைத்தால் மட்டும்
என இதய அரங்கினில் உல்லாசமாய்த்
திரிந்து என்னுள் வாசம் வீசும் - நீ
எனக்கு இளஞ்சிட்டுத்தான் - நான்
உயிருடன் இருக்கும் வரை.

வ.டோமலா, எருவில்




# கடலே! ஏன் இப்படிச் செய்தாய்

பெரியதோர் ஓசை...
திரும்பிப் பார்க்கிறேன்
அதிவேகமாகச் சடுதியாய்
கடல் எழுந்து வருகிறது.

ஒரு கணம் பிரமிப்பு
மறு கணம் திகைப்பு
பயப்பீதி கொண்டு
மற்றவர் போல் ஓடுகிறேன்.
கடுகதியில் துரத்தி வருகிறது
கருங்கடல் பேரலை...

கால்களைத் தழுவிய கடல்
கண்ணிமைக்கும் நேரத்தில்
கழுத்துக்கு வந்தது
எங்கும் மரண ஓலம்

கெட்டியாக ஒரு மரத்தை
எட்டிப் பற்றிக் கொள்கிறேன்
சொல்லாமலே கால்கள்
விரைந்தேறுகிறது
விருட்சமதில்!

பதற்றத்துடன் பார்த்து
நிற்கிறேன் பலதும்
பெறுமதிமிக்க மானிட உயிர்கள்
பெரும் கடலால்
அடித்துச் செல்லப்படுகிறது.

வீதிகளில் சிலரின் விதிகளை
எழுதி முடித்து விட்டு
அள்ளித் துடைத்துக் கொண்டு
அடங்கிப் போய்
மீள்கிறது கடல்.

பல வெற்றுடல்கள்
நின்ற வெள்ளத்தில் மிதந்தன
இன்னும் சில உயிர்கள்
துடிதுடித்துத் திணறி
பின் அசைவற்றுப் போயின

உதவிகள் ஒத்தாசைகள்
ஒப்பாரி ஓலங்கள்
கடல் இரைச்சலையும்
பின்தள்ளி நிற்கிறது
மனிதக் கதறல் ஒலி

மலைத்துப் போய் நின்ற மனது
மீண்டு வருகிறது.
இறங்கி வருகிறேன்
கால்கள் கிடுகிடுவென
நடுங்கிக் கொண்டிருக்கிறது.

உயிர்களைக் குடித்து விட்டு
மீண்டும் சத்தமின்றி
உட்புகுந்து
சாதுப் பிள்ளையாகிறது கடல்!

ஆதரவளித்த கடலே
ஏன் இப்படிச் செய்தாய்?
இப்பிரளய பேரழிவிலிருந்து
எப்படி மீளப் போகிறோம்?

இறைவா?
இது உன் திருவிளையாடல்
தான் என்றால் நீயும் வேண்டாம்
இந்தப் பாழ் கடலும்
வேண்டாவே வேண்டாம்!

ச. முருகானந்தன்.

# குற்றச் செயல்கள்

மானத்தை விற்பதும்
மண்டியிட்டு வாழ்வதும்
மதம் மாறிச் செல்வதும்
மதுவுக்கு அடிமையாவதும்
மன்னிக்க விரும்பாததும்
மாதா பிதாவை
மதியாத தன்மையும்
மாசுள்ள செயல்களே!

அ.அரசரெத்தினம்
சேனையூர்.

# கடலலையின் கண்ணீர்

அன்று உதட்டில்
சிரிப்பை மட்டும் சிதறவிட்டோம்
இன்று கண்ணீரில் கதறுகிறோம்
பிஞ்சுக் குழந்தை முகம்
அடையாளமின்றி
அலங்கோலமாய் போனதேனோ
கொஞ்சி விளையாடிய
பிஞ்சு முகத்தை
தொட்டுப் பார்த்த கரம்
தொட முடியாமல் தவிக்கிறதே

பெற்றவள் பார்ப்பதற்குள்
குழந்தையுடல் கருகி
சாம்பலாகிப் போனது

யார் செய்த குற்றமோ
பால் போன்ற
பிஞ்சு முகம்
பரிதாபமாக போச்சுதே
கண்ணே வாய் விட்டு
அழ முடியவில்லை
வாடி நிற்கிறேன்
தாய் முகம் வாடுதம்மா
பூவான உன் உடம்பு
புண்ணாகி எலும்பு தெரிகிறதே.

கடலில் கால் பதித்து
விளையாடிய பிள்ளையிங்கே
கடலலை அடித்துச் சென்று
சிறகொடிந்து விட்டதே
பூவே நீ சிதறிவிட்ட
சில்லறைச் சிரிப்புகள்
ஒவ்வொன்றும் வேறுத்துக் கிடக்கிறதே
யார் போட்ட சாபமோ
வேதனையால் மனது துடிக்கிறதே.

சிவலிங்கம் சுமதி
ஏறாவூர் - 04

# பாசமழையே...நிறுத்திவிடு

மேகத்தாய்
மழைப் பாசத்தை
வாரி இறைத்தாள்!
பூமிக் குழந்தை
கண்சிமிட்டி சிரித்தது!
வரண்டு போன மண்
உள்ளம் துளிர்விட்டது!

மேகத்தைப் பார்த்து
பூரிப்படைந்தது பூமி!
பாசமழை பொழியப் பொழிய.....
வரண்ட மணி உள்ளம்
சகதியாகப் பட்டது!
துளிர் விட்ட பயிர்கள்
நாசமாக்கப்பட்டது - உடமைகள்
நீரோடு புறப்பட்டது!

உறங்குவதற்கோ இடமில்லை1
பாசமழையும் விடவேயில்லை!
நீருள்ளே நின்றும் - கால்கள்
வலுவிழந்து போயின!
பசிபட்டினி -எங்கும்
குழந்தைகளின் கதறல்!
பல நிறுவனம் - உதவி
புரிய முன்வந்தன
நிவாரணம் என்ற பேரில்
கொடுக்கப்படும் பொக்கிஷம்
இவையெல்லாம் போதுமா...?
எங்களது உடமைகள்
பயிர்கள் நாசமாக்கப்பட்டது
திரும்பி வந்திடுமா...?
யார் எது தந்தும் நொறுக்கப்பட்ட
இதயம்
சீராக்கப்படுமா...?
பாச மழையே...
பரிதவிக்கும் மக்களை
காப்பாற்றுவதற்கு - உன்
பாசத்தை நிறுத்திவிடு...!

-பு.க.விழி-

# அம்பாறை அகதிகளின் எதிர்காலம்?

* சுனாமியில் 12345 பேர் உயிரிழப்பு.
* காணாமற் போனோர் 2643 பேர்.
* 107 முகாம்களில் 133147 குடும்பங்கள்.
* உறவினர் நண்பர் வீடுகளில் 85636 குடும்பங்கள்.
* பாதிக்கப்பட்ட வீடுகள் 35459

அம்பாறை மாவட்டம் "சுனாமி" ஆழிப் பேரலை சூறையாடியதில் அதிகூடிய பாதிப்பைச் சந்தித்தது. அம்பாறை கரையோரப் பிரதேசம் இன்று திறந்தவெளி அகதிமுகாமாகக் காட்சியளிக்கிறது.

"சுனாமி" சூறையாடிய மக்கள் தொகை 12345 பேர். இத்தொகை நாளுக்கு நாள் மாறுபாடடைந்து வருவதனைக் காணலாம். இவர்களில் குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் அதிகம்.

கல்முனை (முஸ்லிம்) பிரிவு அதிகூடுதலான 3500 பேரை இழந்திருக்கின்றது. குறிப்பாக மருதமுனைக் கிராமம் சுமார் 2000 பேரளவில் இழந்திருக்கிறது.

சாய்ந்தமருதில் 2800 பேர் பலியாகியுள்ளனர். தனியொரு கிராமம் சந்தித்த மிகக்கூடிய இழப்பு இதுவாகும். இப்பகுதியில் 1200 ஆழ்கடல் பகுதிகளும், 520 தோணிகளும் சுனாமியில் சிக்கி சிதைந்துள்ளன. இவ் அனர்த்தத்தில் 10 கோடி ரூபா நாசம்.

காரைதீவுப் பிரதேசம் 2200 பேரை இழந்துள்ளது. கூடவே 03 பாடசாலைகள், ஐந்து ஆலயங்கள், 01 வைத்தியசாலை மற்றும் 3000 வீடுகளையும் இழந்துள்ளது. அத்தோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கான 05 அகதிமுகாம்களும் இயங்கி வருகின்றன.

கல்முனை (தமிழ்) பிரிவில் பெரியநீலாவணை, கல்முனை, பாண்டிருப்புக் கிராமங்களில் 2000 பேர் இறந்திருக்கலாமென புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. பாண்டிருப்பில் அறநெறிப் பாடசாலை மாணவர் 42 பேருடன் 5 ஆசிரியர்களும் கடலில் அடித்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அடுத்து திருக்கோவில், கோமாரி, பொத்துவில், ஆலையடிவேம்பு, நிந்தவூர் பிரதேசங்கள் கூடுலான அழிவுகளைச் சந்தித்திருந்தன.

அகதிமுகாம்களைப் பொறுத்த வரை கிராம சேவகர்கள், பொது நபர்கள் என்று நிருவகித்து வருகின்றனர். அரச நிவாரணப் பொருட்கள் விநியோகத்தில் ஆரம்பத்தில் பாரபட்சம் இடம்பெற்றதாக மக்கள் சீற்றமடைந்தனர். குறிப்பாக முஸ்லிம் பிரதேச அகதி முகாம்களுக்கு அரசநிவாரணங்களும், தனவந்தர்களின் நிவாரணங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களின் நிவாரணங்களும் தாராளமாகக் கிடைத்தது. ஆனால் தமிழ்ப் பிரதேச முகாம்கள் நிவாரணமின்றி அல்லல்பட்டதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டது.

முஸ்லிம் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் தத்தமது பிரதேச பராமரிப்பில் நின்றதைக் குறைகூற முடியாது என்ற நியாயமும் கூறப்பட்டது. இந்நிலையில் அரச அதிபரின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளர்களூடாக நிவாரணம் வழங்கப்பட ஆரம்பித்த போது ஒரு சில தமிழ்ப் பகுதிகளுக்கு நிவாரணம் கிடைத்தது. விஷேட அதிரடிப்படையினரும் உதவியுள்ளனர். இருப்பினும் திருக்கோவில், கல்லாறு போன்ற நிலத் தொடர்பால் துண்டிக்கப்பட்ட தமிழர் பகுதிகளுக்கு நிவாரணம் செல்லவில்லை.

சில நாட்கள் கழிந்த பிற்பாடே ஹெலிக்கொப்டர் மூலம் ஒரு தொகுதி நிவாரணம் வழங்கப்பட்டது. இந்நிலையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தொண்டர்கள் தாயகப் பகுதியில் காலடி எடுத்து வைத்ததும் நிவாரணப் பணிகள் சீராக ஆரம்பித்தன. இருப்பினும் அரச நிவாரணங்களின் "வரத்து" என்பன மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

முகாம்களின் நிருவாகம் சீரில்லாமலிருந்ததும் நிவாரணப் பணிகளில் தடங்கலை ஏற்படுத்தி மேலும் மழை, வெள்ளம் என்பன தடங்கலை ஏற்படுத்திய காரணிகளாகும். அவற்றுக்கும் மத்தியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்கள், சீஸர், கேசவன் ஆகியோரின் வழிகாட்டலில் சீராகச் செயற்பட்டு மக்களைப் பட்டினிச் சாவிலிருந்து மீட்டனர் என்று கூறலாம்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 3 நாட்களில் 1 கோடி 50 இலட்சம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருட்களை மக்களுக்கு வழங்கியதாக மன்னார் மாவட்ட பணிப்பாளரும், அம்பாறை மாவட்டத்திற்கென விஷேடமாக அவசர நிவாரணப் பணிக்கு நியமிக்கப்பட்டவருமான கேசவன் தெரிவித்தார்.

அரச அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் அம்பாறை மாவட்டத்திற்கு வந்தால் இங்குள்ள முஸ்லிம் அரசியல்வாதிகள் அவர்களது பிரதேசங்களுக்குக் கொண்டு காட்டுவதில் அதிக ஈடுபாடு காட்டினர்.

ஒரே ஒரு தமிழ் எம்.பி.க.பத்மநாதன் கூட 'சுனாமி'யால் பாதிக்கப்பட்டதன் காரணமாக அவரால் நிவாரணப் பணியில் பூரணமாக ஈடுபட முடியாமல் போயிற்று. ஆனால் ஆரம்பத்தில் அம்பாறை மாவட்டத்திற்கு 22 பேரும் குரல் கொடுப்போம், உதவுவோம் என்றவர்கள் வாய் மூடி மௌனியாக இருந்ததை மக்கள் விசனத்துடன் பார்த்தனர்.

தமிழ் மக்கள் அகதி முகாம்களிலும், ஏனைய இடங்களிலும் அலைந்து நிர்க்கதியாக இருந்தனரென்றே கூறலாம். கவனிப்பாரற்ற ரீதியில் பயப்பீதியுடன் காலத்தைக் கடத்தினர். திருக்கோவில், கோமாரி, விநாயகபுரம், தம்பட்டை போன்ற பிரதேச அகதிகள் சாகாமம், அக்கரைப்பற்று பகுதிகளில் தஞ்சமடைந்தனர்.

இன்றுகூட திருக்கோவில் பிரதேசம் துண்டிக்கப்பட்டுள்ளது. வடக்கே முகத்துவாரம், தெற்கே கோமாரிப்பாலமும் "சுனாமி" யாலும், வெள்ளத்தாலும் தகர்க்கப்பட்டுள்ளதால் அப்பிரதேசம் பிரதான பாதையால் செல்ல முடியாதவாறு துண்டிக்கப்பட்டுள்ளது.

ஆக அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, சாகாமம் ஊடாக மாத்திரமே நிவாரணப் பொருட்களைப் பலத்த சிரமத்தின் மத்தியில் கொண்டு செல்ல முடியும். திருக்கோவிலில் இன்று வரை மின்சாரம் வழங்கப்படவில்லை. அங்கு 13 முகாம்களில் 27 ஆயிரம் மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

அங்குள்ள முன்னாள் எம்.பி. அ.சந்திரநேரு, க.பத்மநாதன் எம்.பி ஆகியோரின் முயற்சியில் நிவாரணப் பொருட்கள் வந்து சேர்ந்ததாயினும் அவை சகல முகாம்களுக்கும் பூரணமாக விநியோகிக்கப் போதுமானதாக இருக்கவில்லை.

வருகை தரும் அமைச்சர்கள் முஸ்லிம் பிரதேசங்களுக்கு மட்டுமே சென்று விட்டு போகிறார்கள். இங்குள்ளவர்களும் அவர்களை இப்படியான பிரதேசங்களுக்குக் கூட்டிவருகிறார்களில்லை என திருக்கோவில் வாசி உதயகுமார் கூறினார்.



அங்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் காலடி எடுத்து வைத்த பிற்பாடு ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளதாக தம்பிலுவில் மத்தியகல்லூரி அதிபர் வி.ஜெயந்தன் கூறினார். இதனிடையே அகதிமுகாம் சுகாதாரம் என்பது பாரிய பிரச்சினையை எதிர்நோக்கியது.

இங்குள்ள சுகாதார அதிகாரிகளும் அவர்கள் பிரதேசத்திலேயே நிற்க தமிழர் பிரதேசம் பாராமுகமாக விடப்பட்டது. அதனால் கல்முனைப் பகுதியில் வாந்திபேதியால் இருவர் அஸ்பிரேசன் நியுமோனியாவால் மூவர் பலியாகியுள்ளனர்.

கொழும்பிலிருந்து உடனடியாக விஜயம் செய்த பிரதம தொற்று நோயியல் நிபுணர் டாக்டர். நிஹால் ஜெயசிங்க பல முகாம்களுக்கு 4 நாட்களில் விஜயம் செய்தார். மலசலகூட தட்டுப்பாடு, தண்ணீர் அசுத்தமாதல் போன்ற பிரச்சினைகள் எதிர்நோக்கப்பட்டதை நேரடியாக அவதானித்தார்.

> "சில நாட்கள் கழிந்த பிற்பாடே ஹெலிக்கொப்டர் மூலம் ஒரு தொகுதி நிவாரணம் வழங்கப்பட்டது. இந்நிலையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்கள் தாயகப் பகுதியில் காலடி எடுத்து வைத்ததும் நிவாரணப் பணிகள் சீராக ஆரம்பித்தன. இருப்பினும் அரச நிவாரணங்களின் "வரத்து" என்பன மட்டுப்படுத்தப்பட்டிருந்தது."

மேலும் அவர்களது சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு கடும் பணிப்புரை விடுத்தார். காரைதீவுப் பிரதேசத்திலுள்ள 05 அகதி முகாம்களுக்கு சுகாதார வைத்திய அதிகாரி வரவில்லையென எமது நிருபர் சகா கல்முனை ஆதார வைத்தியசாலையில் வைத்து டாக்டர். நிஹால் ஜெயசிங்கவிடம் கூற அந்த இடத்திலே தொலைபேசி மூலம் குறிப்பிட்ட அதிகாரியிடம் அன்று 5.00 மணிக்கு முன்னர் விஜயம் செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமெனப் பணித்தார்.

அதன் பின்னர்தான் குறிப்பிட்ட அதி

**விரி.சகாதேவராஜா**

காரி பிரஸ்தாப முகாம்களுக்கு விஜயம் செய்தார். அவரது வருகையின் பின்னர் தமிழர் பிரதேசங்கள் சற்று கவனிப்புக்குள்ளாகின. இவ்வேளையில் தமிழீழ சுகாதாரப் பிரிவினர் பொறுப்பாளர் ரி.வாமன் தலைமையில் களமிறங்கினர். அவர்களது கண்காணிப்பிலே வைத்திய சுகாதார வசதிகள் சீர்பெற ஆரம்பித்தன. சுமார் 50 பேர் கொண்ட குழுவில் டாக்டர்கள், யாழ் வைத்தியசாலை மருத்துவ பீட மாணவர்கள் அடங்கியிருந்தனர். பரவலாக முகாம்களில் பணியாற்றி வருகின்றனர். காரைதீவில் பிறந்து கண்டியில் கடமையாற்றும் அதிகாரி டாக்டர். சினேந்திரன் பாஸ்கரநாதன் கண்டியிலிருந்து சிங்கள டாக்டர்களுடன் வந்திறங்கி உயிர் காப்புப் பணியில் ஆரம்பத்தில் மேற்கொண்டிருந்தார். அதற்கான மருந்துப் பொருட்களையும் கொண்டுவந்திருந்தார்.

காரைதீவு விபுலானந்தா மணி மண்டபத்தில் அவர்களது வைத்திய சேவை சிறப்பாக நடைபெற்றது. காலம் கருதி சேவை செய்த அவர்களை மக்கள் நன்றியோடு பார்க்கின்றார்கள். இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்கள் எமது நிருபர் சகாவின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டு பரிமாறப்பட்டன. "சுனாமியால்" அள்ளுண்ட பலர் மரத்திலும், இடிபாடுகளிலும் அடிபட்டு பலத்த காயத்துக்குள்ளாகினர். மதில் வீழ்ந்து காயமுற்றவர்களில் கல்முனை வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி. கலைவாணி தம்பிராஜாவும் ஒருவராவார்.

காரைதீவு வைத்தியசாலை, சாய்ந்தமருது, நிந்தவூர் வைத்தியசாலைகள் பாதிக்கப்பட்டன. காரைதீவு வைத்தியசாலை தற்காலிகமாக காரைதீவு கமநல கேந்திர நிலையத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. அங்கு பணியாற்றிய டாக்டர் பகீரதி தமிழ்வண்ணன் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளார். ஆரம்பத்தில் சுகாதார அதிகாரிகள் அதனை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. சில நாட்களின் பின்பு வைத்திய அத்தியட்சகர் டாக்டர் கே.முருகானந்தம் மேற்கொண்ட முயற்சியால் மருந்துப் பொருட்கள் வழங்கப்பட்டன.


வைத்திய அத்தியட்சகர் டாக்டர்.கே. முருகானந்தம் பெரியநீலாவணை முதல் அட்டைப்பள்ளம் வரையிலான முகாம்களுக்கு விஜயம் செய்து மருத்துவ உதவி செய்தார். வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.நஜீமுதீன் புதனன்று திருக்கோவில் பகுதிக்கு விஜயம் செய்து சுகாதார நடவடிக்கைகளைப் பார்வையிட்டுள்ளார். இந்நிலையில் கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதியிலிருந்து தமிழீழ கல்வித் துறையினரின் 50 ஆசிரியர்கள் வந்து அவசர பணிகளில் ஈடுபட்டனர். வன்னிப் பொறுப்பாளர் ஞானம் தலைமையிலான குழுவினர் முகாம் சுத்தம், சடலங்களை அடக்கம் செய்தல், நீர் சுத்தமாக்கல் போன்ற பல விடயங்களில் ஈடுபட்டிருந்தனர்.

தற்போது நிவாரண லொறிகளின் வரிசைகள் குறைந்து வருகின்றன. எனவே அடுத்த கட்டம் என்ன? என்று சிந்திப்பது பொருத்தம். அரசாங்கம் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் 06 மாதம் உலருணவு வழங்குமென உலக உணவு ஸ்தாபனத்தின் நம்பிக்கையில் கூறியுள்ளது. அடுத்த கட்டம் என்ன? என்று கேட்பதற்குக் கூட சமகால சம்பவங்கள் வழிவைப்பதாயில்லை.

அடுத்து வரும் தினங்களில் அகதி முகாம்களின் எண்ணிக்கை குறையலாம். வெளியேறும் அகதிகள் நண்பர்கள், உறவினர்களின் வீடுகளில் வாழப்போகிறார்கள். இருப்பினும் அனைவருக்கும் 06 மாத காலம் உலருணவு வழங்கப்படுமென்று அரச அதிபர் கூறியுள்ளார்.

இவர்களுக்கு அதிரடிப்படையில்

தொடர்ச்சி 19ம் பக்கம்



# தமிழினை அழிப்புக்களின் நினைவுச் சுவடுகள்

## சுவடு -36

உறவுகள் தலையில் அடித்தவாறு ஓடிச் சென்றனர். அங்கு சென்று ஆலயத்தைப் பார்த்ததும் உறவுகள் இரத்த வெள்ளத்தில் தத்தளித்தனர். ஆலயத்திற்கு உள்ளேயும், வெளியேயும் சிலர் உயிரற்றும், அரைகுறை உயிருடன் அணுகிக் காணப்பட்டனர். கைகளை இழந்தவர்களும், கால்களை இழந்தவர்களுமாய், தலைகள் துண்டிக் கப்பட்ட நிலையிலும் கிடந்தனர். மொத்தம் 51 உறவுகள் அந்த இனவெறிக்கு இரையாகியிருந்தனர். 18 பேர் கைகள், கால்கள் இழந்த நிலையில் அரை குறையுடன் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தனர். 6 பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு அநாகரீகமான முறையில் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

அழுது புலம்பி தமது உறவுகளின் உடல்களைத் தூக்கியவாறு வீடு நோக்கிச் சென்றனர். காயப்பட்டவர்கள் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அன்றிலிருந்து திராய்க்



கேணிக் கிராமம் தனது சோபை இழந்தது. கண்முன்னே தமது உறவுகளுக்கு நடந்த கொடூரச் சம்பவத்தை எண்ணி, எண்ணி அவர்களின் மனம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. மேலும் இக்கிராமத்தில் இருந்தால் இவ்வாறே நாம் அனைவரும் கொல்லப்பட்டு விடுவோம் என எண்ணி தமது இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்தனர். காலம், காலமாக கட்டிக் காத்து வந்த நிலத்திலிருந்து மக்கள் வெளியேறினர். சிலர் அகதிகளாய் காடுகளிலும் வனாந்தரங்களிலும் அலைந்து அல்லல்பட்டனர். சிலர் தமது உறவினர் வீடுகளில் தஞ்சம் புகுந்தனர்.

இவர்களுக்கு நடந்த இந்த நிலையைப் பற்றி எவரும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. பேரினவாத அரசோ அல்லது சர்வதேச சமூகமோ வாய்திறக்கவில்லை. அனைவரும் மௌனியாக நின்றனர். தமது உறவுகளை இழந்தவர்களுக்கு எவரும் ஆறுதல் அழிக்கவில்லை. தமிழர்களின் உயிர் சிங்களப் பேரினவாத அரசின் கூலிப் படைகளாலும், முஸ்லிம் கும்பல்களாலும் நாளுக்கு நாள் சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்படுவதற்கு அந்த மௌனங்கள் மேலும் அந்த இனவாதிகளுக்கு வலுவூட்டலைக் கொடுத்தன. இதனால் மென்மேலும் அம்பாறை மாவட்டத்திலுள்ள தமி

ழ்க் கிராமங்களிலும் தமது இனவெறியை அரங்கேற்றம் செய்தனர்.

1983 தொடக்கம் ஆரம்பிக்கப்பட்ட இனவெறி மெல்ல, மெல்ல விஸ்பரூபம் எடுத்து 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியிலே அதன் முழுத்தாண்டவத்தையும் காட்டத் தொடங்கியது. இதனால் அம்பாறை மாவட்டத்தில் சிங்கள இனவெறியர்களின் கொடுமைகளைத் தாங்க முடியாமல் குடும்பம், குடும்பமாக மக்கள் தமது சொந்த நிலங்களை விட்டு வெளியேறினர். வெளியேறியவர்களை அப்படியே போகட்டும் என்றுகூட இனவாதிகள் நினைக்கவில்லை.

மாறாக முஸ்லிம் கும்பல்கள் சிலவற்றைப் பயன்படுத்தி அவர்களைக் கொன்று குவித்தனர். வயது வித்தியாசமின்றி அனைவரையும் வேட்டையாடினர். பால் மணம் மாறாத பச்சிளங் குழந்தைகளைக் கிழித்தனர். கால்களைப் பிடித்து சுவரில் தூக்கி அடித்தனர். கையெடுத்துக் கும்பிட்ட கன்னிப் பெண்களைக் கதறக் கதறப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி அவர்களின் இறுதி மூச்சு அடங்கும் வரை கொடூரமான முறையில் சித்திரவதை செய்து



கொலை செய்தனர்.

அன்றாடம் தொழில் நிமிர்த்தமாகச் சென்ற ஏராளமான ஆண்கள் வயது வித்தியாசமின்றிக் கைது செய்யப்பட்டு புலி என்ற முத்திரை குத்தப்பட்டு அநியாயமான முறையில் கொலை செய்யப்பட்டனர். இத்தனை கொடுமைகளையும் தாங்க முடியாத மக்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் திசைமாறி உறவுகளை இழந்து தவித்தனர். கணவனை இழந்த மனைவியும், மனைவியை இழந்த கணவனும், தாய்தந்தையரை இழந்த பிள்ளைகளும், பிள்ளைகளை இழந்த பெற்றோருமாய் எமது உறவுகள் பரிதவித்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் அட்டைப்பள்ளம், திராய்க்கேணி, வீரமுனை, பாண்டிருப்பு, கல்முனை, கோமாரி, பொத்துவில், உடும்பன்குளம் எனப் பல கிராமங்களில் சிங்களப் படைகள் மற்றும் முஸ்லிம் கும்பல்களாலும் தமிழ் மக்கள் திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டனர். சிங்களக் காடையர்களால் தமிழ் மக்கள் விரட்டி விரட்டி வேட்டையாடப்பட்டனர். இதனால் எமது மக்கள் பொருளாதார ரீதியில் பாரிய வீழ்ச்சியை எதிர் நோக்கினர். தமது உழைப்பும் தாமும் என்று சொந்த வயல் நிலங்களில் கொட்டிய செல்வங்களைச் சேர்த்து நிம்மதிப் பெருமூச்சுடன் வாழ்ந்த மக்கள் ஒருவேளைச் சோற்றுக்குக் கூட வழியின்றி அலைந்தனர்.

இருப்பிடங்கள் மட்டுமன்றி கல்விக்கூடங்கள் மத வழிபாட்டுத் தலங்கள் என்பன திட்டமிட்டு அழிக்கப்பட்டன. பிள்ளைகளின் கல்வி பாழடிக்கப்பட்டது. உரிய வயதில் உரிய நேரத்தில் கல்வியைத் தொடர முடியாமல் இடைநடுவில் பறிக்கப்பட்டது. இவை அத்தனையும் மேற்கொள்

**தருவது-நிர்மலன்**

வதன் மூலம் தமிழர் தாயகங்களிலிருந்து அவர்களை விரட்டியடித்து விட்டு இலங்கையில் சிங்கள இனவாதப் பெரும்பான்மையினம் அனைத்து இடங்களையும் கைப்பற்றி விடலாம் என்று கங்கணம் கட்டியிருந்தனர். இதன் விளைவாக இன்று அம்பாறை மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான விதவைப் பெண்கள் வாழ வழியின்றி கண்ணீரும் கம்பலையுமாக உள்ளனர்.

*(சுவடுகள் தொடரும்)*


**வாசகர் கவனத்திற்கு,**
**தொடர்ந்து வெளிவரும் இக் கட்டுரை தொடர்பான மேலும் தகவல்கள், ஆலோசனைகள், ஏதும் இருப்பின் அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் எமக்கு அறியத்தரவும்.**
**எமது முகவரி:-**
**ஈழநாதம்(மட். பதிப்பு)**
**கொக்கட்டிச் சோலை**

ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு) வாரம் தோறும் வழங்கும் குறுக்கெழுத்துப் போட்டியில் பங்குபெற விரும்புவோர் போட்டிப்படிவத்தைப் பூர்த்தி செய்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும். சரியான விடை அனுப்பும் ஒரு அதிஸ்டசாலிக்கு 250 ரூபா பணப்பரிசும், பாராட்டுப் பெறும் 10 அதிஸ்டசாலிகளின் பெயர் விபரமும் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

*விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி:- 24.01.2005*

## குறுக்கெழுத்துப் போட்டி 36

**குறுக்கெழுத்துப் போட்டி இல -36**
**ஈழநாதம் (மட்டக்களப்பு பதிப்பு)**
**பிரதான வீதி,**
**கொக்கட்டிச்சோலை.**



### இடமிருந்து வலம்

01. அகிம்சை வழியில் உயிர் நீத்த போராளி.
04. முடிவு.(குழம்பியுள்ளது)
06. பம்பரை
08. "ஜெயசிக்குறு" சண்டை இறுதியாக இடம்பெற்ற வன்னிப் பிரதேசம். (குழம்பியுள்ளது)
10. பாதத்தின் ஒரு பகுதி.
11. வெளிக்காரணிகளின்றி தாமாகவே செயற்படும் தன்மை (குழம்பியுள்ளது)
13. இனிப்பை நினைக்கும் போது வாயில் ஊறுவது.
15. திரவங்களின் பாய்ச்சலுடன் தொடர்புபடும் இரட்டைக் கிழவிச் சொல்.
16. தோல் வாத்தியம் ஒன்று (திரும்பியுள்ளது)
17. அடக்குமுறை எங்கெல்லாம் உள்ளதோ அங்கெல்லாம் இது ஏற்படும்.

### மேலிருந்து கீழ்

01. சிலரின் நிலைமை சில சமயங்களில் இவரின் நிலை போல் அந்தரத்திலிருக்கும்.
02. பிணைப்பு எனவும் சொல்லலாம். லஞ்சத்தையும் குறிக்கும்.
03. ஔவையாரின் நண்பனான மன்னன் (குழம்பியுள்ளது)
05. இதில் அடிக்கடி பிடிப்பு ஏற்படுவது சிலருக்குத் தீராத உபாதையாகும்.
07. கர்ணனைப் பேழையில் வைத்து ஆற்றில் இட்டவள். (குழம்பியுள்ளது).
09. வீடுகளில் அரிசியில் உமி நீக்கப் பயன்படும் எளிய சாதனம் (குழம்பியுள்ளது)
12. தமிழரின் பாரம்பரிய சண்டை முறையொன்றில் பயன்படும் கோல். (குழம்பியுள்ளது)
14. அதிஸ்டமான கிழமை என்பார்கள் (தலைகீழ்)
16. மைதானங்களில் இது சீராக வெட்டப்பட்டிருக்கும். (தலைகீழ்)

### குறுக்கெழுத்துப் போட்டி 34ற் கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. சந்தேகம்
5. தயிர்
6. கேது
8. வயிறு
9. தரிசு
11. யோகம்
12. பணி
14. தந்தை
16. வந்தனம்
17. சின்னம்

**மேலிருந்து கீழ்**

1. சங்கேதம்
2. தேர்
3. கயிறு
4. பர்வதம்
7. துரியோதனன்
10. சுகந்தம்
13. அம்மணி
15. சிந்தை

### பரிசு பெறும் அதிஸ்டசாலி

**க.கமால்தீன்**
**புன்னைக்குடா வீதி**
**ஏறாவூர் -3**

### பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்


1. க.காந்தன், கொம்மாதுறை, செங்கலடி.
2. க. கவிதாஸ், ஆர்.கே.எம்.வீதி, கல்முனை
3. வ. நவநீதன், மட்-அரசடி.
4. பொ. காந்தினி, கொக்கட்டிச்சோலை
5. எஸ். நவா, அம்பிளாந்துறை
6. ரீ. சுபாஜினி, பிள்ளையார் கோவில் வீதி, கல்லாறு.
7. த. றேணுகா, புலவர்மணி வீதி, குருக்கள் மடம்
8. து.முரளிதரன், கடற்கரை வீதி, களுவாஞ்சிகுடி.
9. ரீ.தாமரைச்செல்வி, பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை.
10. க.கங்காதரன், ஏறாவூர்.



# ஈராக் தேர்தல் எப்படி அமையும்?

2005 ஜனவரி 30ம் திகதி நடத்தப்படவுள்ள ஈராக் பொதுத்தேர்தல் எத்தகைய ஒரு நிலைப்பாட்டைத் தோற்றுவிக்கப்போகிறது என்பதுதான் இன்றைய உலக அரசியல் ஆய்வாளர்களது எதிர்பார்ப்பாக இருக்கிறது. இலவு காத்த கிளிபோல் இயட் அலாவியர்களும் அதிகரித்த வன்முறைகள் இன்று குறையும், நாளை குறையும் என்று எதிர்பார்த்து எமார்ந்திருக்கும் ஒரு நிலைப்பாட்டிலேயே இருக்கிறார் என்பது ஒன்றும் புரியாத புதிரல்ல. ஈராக்கில் சுமுகமான ஒரு தேர்தலை நடாத்தி முடிக்க வெளிக்கிட்டிருக்கும் இடைக்காலப் பிரதமர் இயட் அலாவி அவர்கள் நாட்டின் பாதுகாப்பைப் பொறுத்தவரை சாணேற முழஞ்சறுக்கும் ஒரு துர்ப்பாக்கிய நிலையில் இருந்து வருகிறார்.

தற்போதய ஈராக் சூழலைப் பொறுத் தவரை சுமுகமான தேர்தல் முடிக்கப் பல கவசங்களைப் புனைய வேண்டிய தேவையும் அலாவியர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருந்தது என்னவோ உண்மைதான். சதாமுக்கு எதிரான வெளிநாட் டுப் படைகளின் இறக்குமதி முதலாவது கவசம், அறுபது நாட்கள் தொடர்ச்சியான அவசரகாலச் சட்டம் இரண்டாவது கவசம், இதுபோதாதென்று மேலும் ஒரு மாதகால அவசரகால நிலை நீடிப்பு மூன்றாவது கவசம், இதற்கு அடுத்தபடியாக என்ன கவசம் வரவிருக்கின்றது என்பது அலாவியர்களுக்கே வெளிச்சம். எது எவ்வாறெ னினும் அவசரகால நிலை அமுலில் இருக்கும் போதே ஜனநாயக விழுமியத்தைத் தழுவிய ஒரு தேர்தல்



இல்லாது போனா லும் நெருக்கடியான ஒரு தேர்தலையாவது நடாத்தி முடித்து விட்டாலே போதும் என கருதவேண்டிய காலகட்டத்திற்கு வந்துவிட்டார் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. அதிகளவு அமெரிக்கப்படையினர் ஈராக் மண்ணுக்கு அழைக்கப்பட்டிருந்தும் தீவிரவாதம் குறைவதற்குப் பதிலாக அதிகரித்திருப்பதே யாதார்த்தம் எனவேதான் ஈராக் மண்ணில் சுமுகமான தேர்தல் எனும் பெயரில் ஒரு வகையான திருவிளையாடல் நடைபெறப்போவது திண்ணம். ஈராக்கில் தேர்தல் பற்றிய அறிக்கை அமெரிக்கப் படையதிகாரி ஒருவரி னால் வெளிப்படுத்தப்பட்டிருப்பது இதற்கு கட்டியம் கூறுபவையாகவே தென்படுகிறது.

அதிகரித்திருக்கும் வன்முறைக்கு எடுத்துக்காட்டாக கடந்த 04.01.2005 அன்று காலையில் இடைக்காலப்பிரதமர் இயட் அலாவி அவர்களின் உத்தியோக பூர்வ காரியலயத் திற்கு மிக அருகாக பாரிய கார்க்குண்டு ஒன்று வெடிக்க வைக்கப்பட்டிருந்தது. இதுவரைக்கும் தூரம் தொலைவில் வெடிக்க வைத்துக் கொண்டிருக்கும் கார் மற்றும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தற்போது அதி உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்திருக்கும் பிரதம மந்திரியவர்களின் தலைவாயிலில் வெடிக்க வைக்கப்பட்டிருக்கும் சம்பவமானது அகில உலகத்தின் கண் புருவத்தையும் ஒரு கணம் உயர்த்தியிருக்கும் என்பதில் சந்தேக மேயில்லை.

கூட்டுப்படைகளின் தொகை மிக அதிகமுள்ள நிலையில் இப்படி நடைபெறவிருப்பது சட்டபூர்வமானதாக இருக்குமா என்னும் ஒரு கேள்வியும் ஜனவரி 30ற்குப் பிற்பாடு ஈராக்கில் தோற்றம் பெறலாம். இதற்கான விடை இப்போதைக்கு கடினமானதொன்றே.

மேலும் 30 நாட்கள் அவசரகால நீடிப்பானது ஈராக்கில் இருக்கக்கூடிய நெருக்கடி யான நிலைப்பாட்டை இலைமறைகாயாகவே உலகுக்கு புலப்படுத்தி நிற்கின்றது. இது மட்டுமின்றி 07.01 வெள்ளியன்று இணையத் தளத்திலிருந்து வெளியாகிய ஒரு செய்தியில் இடைக்காலப்பிரதமர் அலாவியவர்கள் பக்தாத் நகர தீவிரவாதச் செயல்களுக்கு முன்னைநாள் ஆட்சித் தலைவர் சதாம்குசைனின் விசுவாசிகளே காரணமென்று குற்றஞ் சாட்டியுள்ளார். மேலும் இச்செய்தியில்:-

**தேசிய இராணுவ விடுதலை நாள்:-**

நிகழ்வின் போது இயட் அலாவி யவர்கள் பேசுகையில் எமது மக்களினதும், இராணுவத்தினரதும் இரத்தத்தை சிந்த வைப்பவர்கள் சர்வதிகாரி சதாமுடைய ஆதரவாளர்களன்றி வேறில்லையென்றும் கொலைகள், தீவிரவாதச் செயல்கள் போன்ற ஒட்டுமொத்தமான சகல குற்றச் செயல்களுக்கும் பொறுப்பாளர்களாகிய இவர்கள்தான் எமது அரசின் வேகத் திட்டங்களுக்கும் எமது மக்களுக்கும் எதிரான கொடிய விரோதிகள் என்றும் மிகக் கடுமையாகச் சாடியிருக்கிறார். இவரது கருத்து எதை வெளிப்படுத்தி நிற் கிறதென்றால் இப்போதைக்கு ஈராக்கில் தீவிரவாத மழைவிடாது. என்பதைத் தவிர வேறோன்றுமில்லை.

இடைக்காலப்பிரதமர் ஒரு இனப்பாகுபாடு காட்டாத ஒரு சியா இனத்து முஸ்லிம் அரசியல்வாதி என்பது தெளிவானதொன்றாக இருந்தாலும் அதிகளவு சுன்னி இனத்து முஸ்லிம் மதப் பெரியார்கள் நடைபெறவிருக்கும் தேர்தலைப் பகிஸ்கரிப்பதெனும் முடிவுடன் இருப்பதாகவே தெரிவிக்கப்படுகின்றது.

ஏனெனில் குறிப்பாக ஈராக்கின் மேற்குப் பிராந்தியத்தின் பாதுகாப்பு நிலவரம் கவலைக்குரிய தொன்றாக இருந்து வருகி ன்றது. இப்பகுதி மக்கள் வாக்குப்பதிவை சற்றுத் தாமதப்படுத்தி வைக்கும்படி அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆனால் அமெரிக்க நிர்வாகம் தேர்தலை ஒத்திவைக்கவோ அன்றி தாமதப்ப டுத்தவோ தயாராக இல்லையென்று கூறிவிட்ட தாகவும் இங்கு தெரியவருகின்றது. இதேநேரம் அமெரிக்கப்படைத்தரப்பில் பேசவல்ல அதிகாரி ஒருவர் தகவல் தெரிவிக்கையில் தொடர்ச்சியாக நடை பெற்றுவரும் தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கை காரணமாக பல இடங்களில் சட்டம் ஒழுங்கு பேணப்படுவதில்லையென்றும் குறிபிட்டுச் சொல்லப்போனால் அன்பர், நயின்விற், சலகடின், மற்றும் பக்தாத் போன்ற மாகாணங்களில் இயல்புநிலை முழுவதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவே தெரிகிறது என்றும் கூறியிருக்கிறார். ஆனால் ஏனைய 14 மாகாணங்களிலும் தேர்தல் பணிகள் தொடர்ந்து நடைபெறுவதனால் தேர்தல் அனுமதிக்கப்படலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் ஈராக் தேர்தலா னது ஜன நாயக அதிகாரத்தை இனிமேல் சியாற் இன முஸ்லிம் சமூகத்துக்கு கை மாற்றப்பட்டு விடும் என தெரிவிக்கப்படுவதில் ஓரளவு உண்மை இருப்பதாகவே எண்ணத் தோன்றுகிறது. முதலாம் உலகப் போருக்குப் பிற்பாடு நவீன மயப்படுத்தப்பட்ட ஈராக்கின் அரசியல் அதிகாரம் தொடர்ச்சியாக சுன்னி இனத்து முஸ்லிம்களின் சமூகத்தவர்களாலேயே கையாளப்பட்டு வந்திருக்கிறது.

ஈராக்கின் பொதுத்தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் ஜோர்தான் தனது முன்னைய நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டிருப்பதாகவே தெரியவருகிறது. இதுவரைக்கும் ஈராக் பொதுத்தேர்தல் ஒன்றை வேண்டா வெறுப்பாக நோக்கிவந்த ஈராக் சார்புடைய அண்டைய அரபு நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களால் கூட்டாக வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் (07.01.2005) ஈராக்கின் சகல சமூகங்களும் எதிர்வரும் தேர்தலில் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்கப்பட்டிருப்பதாக இணையத் தளச் செய்தி தெரிவிக்கின்றது. ஜோர்தான் மன்னர் இரண்டாவது அப்துல்லா அவர்கள் பொதுத் தேர்தல் பற்றி தனது ஆலோசனைகளையும் வெளிப்படுத்தியிருப்பதாகவும் அறியக்கூடியதாக இருக்கிறது.

ஆனால் ஜோர்தான் வெளியுறவு அமைச்சர் ஹனி அல் மொலீக் அவர்களின் அறிக்கையில் திட்டமிடகப்பட்டுள்ள ஈராக் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டே ஆகவேண்டும் எனவும் ஈராக்கில் உள்ள சகல பிரஜைகளும வயதுவித்தியாசமின்றி வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று தங்களுக்கு நம்பிக்கையானவர்களை ஆட்சியில் அமர்த்த தெரிவு செய்து கொள்ள வேண்டும். இது தவறினால் திறந்திருக்கும் கதவுகளால் ஏனையவர்கள் அரசியலுக்கு தெரிவு செய்யப்பட்டு விடுவார்கள் என்று மறைமுகமாக சுன்னி இனத்து முஸ்லிம் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

இது வரவேற்கப்பட வேண்டிய தொன்று தான். என்றாலும், காலம் கடந்த உபதேசம் என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். எது எவ்வாறெனினும் ஜோர்தானில் தோதல் பற்றிய மனமாற்றம் ஒரு புதிய திருப்புமுனை மட்டுமல்ல இயட் அலாவியவர்களுக்கு சற்று மன ஆறுதலையும் தரக்கூடிய செய்தியென்றும் எடுத்துக் கொள்ளலாம். இதனிடையே 07.01.2005 அன்று வெள்ளிக் கிழமை ஈராக்கின் மாகாண ஆளுனர் ஒருவரும் இவரது உதவியாளர்களும் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டிருப்பதாக வேறொரு செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.



மேலும் 09.01.2005ல் ஈராக் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதாகவும் தெரியவரு கிறது. எது எப்படியாயினும் அடாது மழை பெய்தாலும் விடாது தேர்தல் ஆட்டம் நடைபெறவே போகிறது.

**-நிலமகள்-**

**"இது வரைக்கும் தூரம் தொலைவில் வெடித்துக் கொண்டிருந்த கார் மற்றும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் தற்போது அதி உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்திருக்கும் பிரதம மந்திரியவர்களின் தலைவாயிலில் வெடித்த சம்பவமானது அகில உலகத்தின் கண் புருவத்தையும் ஒரு கணம் உயர்த்தியிருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை"**

**04.01.2005 ஈராக் இடைக்காலப் பிரதமர் காரியாலயத்திற்கு மிக அருகில் கார்க் குண்டு ஒன்று வெடிக்க வைக்கப்பட்டது.**

**06.01.2005 அன்று மேலும் ஒரு மாதகாலத்திற்கு ஈராக்கில் அவசரகால நிலை நீடிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.**

**07.01.2005ல் ஈராக் மாகாண ஆளுனர் ஒருவரும் அவரது உதவியாளரும் கடத்தப்பட்டுள்ளார்கள்.**

**06.01.2005ஆம் திகதிவரை ஈராக்கில் உயிரிழந்த அமெரிக்கப் படையினரின் மொத்த எண்ணிக்கை பற்றி AP செய்தி ஸ்தாபனம் வெளியிட்டிருக்கும் அறிக்கையின் படி 1350 ஆகும்.**

# தெற்காசியாவில் அதிகரித்து வரும் பெண்களுக்கெதிரான வன்முறை

இன்று உலகளாவிய ரீதியில் பெண்களுக்கு எதிரான .வன்முறை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு போவதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றது. இது தொடர்பாக சமூகத்தில் ஆர்வம் கொண்ட பல அமைப்புக்கள் இந்த பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைக்கு எதிராக நடவடிக்கைகளினை மேற்கொண்டும் குரல் கொடுத்தும் வருகின்றன.

இலங்கையை பொறுத்த மட்டில் இருவரில் ஒருவர் இந்த இம்சைக்கு உள்ளாகுவதாக ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் நிதியுதவியுடன் இயங்கும் பெரிய பிரித்தானிய நிறுவனம் தெரிவிக்கிறது இலங்கையில் மட்டுமல்லாது தெற்காசியா விலும் இந்த நிலை படுமோசமாக இருப்பதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

தெற்காசியாவில் இரண்டு பெண்களில் ஒருவர் வீட்டு வன்செயலுக்கு முகம் கொடுக்கின்றனர் வன்செயலானது பெண்களது வாழ்க்கையிலே தப்பமுடியாத ஒரு யதார்த்த நிலையாக காணப்படுகிறது சமூக வழக்காறுகளும் எண்ணச் சிந்தனைகளும் பெண்களுக்கு எதிரான வன்செயலை ஊக்கப்படுத்தி வலுவான நிலைக்கு தள்ளுவதுடன் வீடு, குடும்பம், சமூகம், அரசாங்கம் என சகல மட்டங்களிலும் இவ் வன்செயலானது ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இவ்வன் செயல் பற்றிய மௌனத்தை கலைப்பதென் பது இலகுவான விடயம் அல்ல பெண்களுக்கு ஒரு சிறந்த தெளிவான கருத்தொன்றை ஏற்படுத்தும் போது தெளிவான சிந்தனை ஒன்று ஏற்படுகின்ற போதுதான் இவ்வாறான வன் முறைகளினை கட்டுப்படுத்த முடியும் என்பது உண்மை யான விடயமாகும்.

வன்முறை என்பது பெண்களுக்கு உடல் ரீதியாக, உளரீதி யாக, அல்லது பாலர்ரீதியாக அமைந்த வகையில் தீங்கை விளைவிக்கும் அல்லது வருத்தத்தை விளைவிக்கும் அல்லது இவற்றை விளைவிக்க கூடியவாறு இழைக்கப்படும் நடவடிக்கைகளும் இடம் பெறும் இது இவர்களின் பொது வாழ்க்கை தனி வாழ்க்கை என்பவற்றினை பாதிக்க கூடியவாறு அமையும்.

தெற்காசியாவில் வக்கிர தன்மை

**- நவமலர் வவுனியா -**

கொண்ட கலாசாரத்தில் பால்நிலையை அடிப்படையாக கொண்ட வன்செயலானது பெண்களின் வாழ்வுரிமையையும், உரிமையையும் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது தெற்காசியாவில் 50 மில்லியனுக்கு குறைவாக உள்ள பெண்களில் பெரும் பகுதியினர் முதிர்ச்சி அடையா



மலும் கவனிப்பார் அற்ற நிலையிலும் மரணமாகிறார்கள். (UNDP) ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சியின் 2003 ஆண்டு மனித அபிவிருத்தி அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது தெற்காசியாவில் பெண்கள் கவலைக்கிடமான ஆபத்தான நிலையில் இருக்கின்றார்கள். 56 விழுக்காடான தெற்காசிய பெண்கள் கல்வியறிவு அற்றவர்களாகவும் உலகத்தில் மூன்றில் ஒரு பங்குபேர் பிரசவத்தில் மரணிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிராந்தியத்திற்கு அப்பால் ஓரளவுக்கு சுகாதார வசதிகள், போஷனை, கல்வி ஆகியவற்றில் முன்னேற்றம் அடைந்திருந்தாலும் வேறு வகையான பாரபட்சத்திற்குள் உள்ளாகிறார்கள் அதாவது ஆணா, பெண்ணா என்று கண்டறிவதன் மூலம் பெண் சிசுக்கள் கொலைகள், கருக்கலைப்பு மூலமாக பெண்கள் அழிக்கப்பட்டு வருகின்றார்கள். இந்தியாவில் இந்த நடவடிக்கை படுமோசமாக உள்ளது 100 ஆண் குழந்தைகள் பிறக்கின்ற போது 95 பெண்பிள்ளைகள் பிறப்பார்கள் ஆனால் 2001 ஆண்டின் கருத்து கணிப்பில் பார்க்கும் போது 100 ஆண் குழந்தைகளுக்கு 92.7 விழுக்காடான பெண் பிள்ளைகளே பிறந்துள்ளது சில மாநிலங்களில் இந்த நிலை படுமோசமாக உள்ளது குறிப்பாக பஞ்சாப், குஜராத், மாநிலங்களில் 79.3,87.8 விழுக்காடாக குறைந்துள்ளது

தெற்காசியாவில் இரண்டில் ஒரு பெண் வன்செயலை நாளாந்தம் அனுபவித்து கொண்டு உள்ளார் இப்பிரதேசத்தில் காணப்படும் சமூக, பொருளாதார, கலாசார, அரசியல், சட்டம் ஆகிய காரணிகள் பெண்களை இயலாமை தன்மைக்கு இட்டு செல்கின்றன அல்லது தள்ளியுள்ளது என்பது உண்மையான விடயமாகும்.

பாக்கிஸ்தானில் 80 விழுக்காடான பெண்கள் வீட்டு வன்செயலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் இருந்தாலும் பல சந்தர்ப்பங்களில் கௌரவ கொலைகள் இடம் பெறுகிறது அவை தொடர்பான முறைபாடுகளும் பதியப்படுவதில்லை 2002 ஆண்டின் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் படி 450 க்கு அதிகமான பெண்கள், யுவதிகள் உறவினர்களாலேயே இந்த கௌரவ கொலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்

ஓவ்வொரு ஆறு மணித்தியாலத்திற்கும் இந்தியாவிலே இளம் திருமணமான பெண் உயிருடன் எரிக்கப்படுகிறார் இதில் என்ன கொடு வினை என்றால் அவள் இறக்கும் வரை அடிக்கப்படுகிறார் அல்லது

(தொடர்ச்சி 19ம் பக்கம்)




கீழ் குறிப்பிட்ட நாடுகளின் வெற்றிடங்களுக்கு வேலை வாய்ப்புகள் உள்ளன. எனவே விரும்புவோர் வெளிநாட்டு முகவர்களினால் தினமும் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நேர்முகப் பரீட்சை நடத்தப்படும். தகுதியுடையோர் கீழ் கண்ட முகவரிக்கு தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

**பாலசிங்கம் தாமரைவதனன்**
**பதுளைவீதி கரடியனாறு, (தமிழீழ காவல்துறைக்கு முன்னால்).**

**தொ.பேசி. 077-6668747, 071-2528248**

கீழ்க்குறிப்பிட்ட நாடுகளில் வேலைகள் காலியாக உள்ளன. சவுதி அரேபியாவிற்கு ஒரு வாரத்தில் பயணம். மற்றும்

டுபாயில் அமைந்துள்ள **பிரிட்டிஷ் வேஷற் அன்ட் கோ.** பிரித்தானிய அமெரிக்க கூட்டுப்படை முகாமிற்கு உணவு வழங்கற் பகுதிக்கு கீழ்க்கண்ட வெற்றிடங்கள் உள்ளன. தரமான சம்பளத்திற்கு வேலைகளுண்டு. தகுதியுடையோர் பாஸ்போட் மற்றும் பாஸ்போட் சைஸ் நான்கு புகைப்படம், கல்விச் சான்றிதழ்கள் மற்றும் வேலைச் சான்றிதழ்கள் சகிதத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றோம். 10 நாட்களுக்குள் அனுப்பிவைக்கப்படும்.

**முற்குறிப்பு :-** தேவையேற்படின் 50,000 வரை வங்கிக் கடன் பெற்றுத் தரப்படும். மற்றும் பெண் சுத்திகரிப்பாளர்களுக்கான வெற்றிடங்கள் குவைத், டுபாய், சவுதி அரேபியா ஆகிய நாடுகளில் வேலை வாய்ப்புக்களுக்குத் தகுதியுடையோர் தொடர்பு கொள்ளவும். பாஸ்போட் முதற்கொண்டு விமான நிலையம் வரை எதுவித கட்டணங்களுமின்றி இலவசமாக அனுப்பிவைக்கப்படும். தங்கள் வெளிநாட்டுக் கனவை எதுவித முற்பணமும் இன்றி நனவாக்கிட உடன் விரையுங்கள்.

**மாவீரர், போராளி குடும்பங்களுக்கு 50 வீத கழிவுகள் உண்டு.**

| Position | Qty | Salary DHs | SL Rs |
|---|---|---|---|
| 1.Store keeper/ warehouseman | 04 | 2024 | 58600 |
| 2.General labour | 150 | 1472 | 42600 |
| 3.Carpenter | 60 | 2024 | 58600 |
| 4. Electrician | 05 | 2024 | 58600 |
| 5.Plumber | 60 | 2024 | 58600 |
| 6. A/C Technician/ HVAC tech | 60 | 2024 | 58600 |
| 7. Admin clerk /Computer operator | 40 | 2392 | 69000 |
| 8. Heavy equipment operators | 30 | 2024 | 58600 |
| 9.Generator mechanical | 20 | 2024 | 58600 |
| 10.Janitors | 40 | 1472 | 42600 |
| 11. Tyre repair Technician | 03 | 1656 | 48000 |
| 12. Llabour foreman | 06 | 2024 | 58600 |
| 13. Lab technician / safety supv | 03 | 2780 | 80000 |
| 14.Nurse | 02 | 2944 | 85300 |
| 15.Chef | 02 | 3680 | 106700 |
| 16.Reefer mechanic | 01 | 2024 | 58600 |
| 17.Site escorts | 07 | 2024 | 58600 |
| 18. Auto electrician | 01 | 2024 | 58600 |
| 19.Water treatment plant operator | 01- | 2024 | 58600 |
| 20 Asst. cook | 01 | 1656 | 48000 |

Food, Accommodation, Medical and insurance provided. 8 hours 5 day per week and 1 day off. Overtime above normal working hours. Two years contract Onward & return ticket on completion of contract by employer. All others terms as per the contry's labour law.

விரும்புபவர்கள் உடனடியாக பாஸ்போட்டுடனும் 4 கலர் புகைப்படங்களுடனும் இரண்டு தொகுதிபடிப்பு அனுபவ நற்சான்றிதழுடன் தொடர்புகொள்ளவும்.

**சுனாமி பேரலையால் அழிவிற்குட்பட்ட அனைத்து உறவுகளுக்கும் எமது அனுதாபத்ததை தெரிவிப்பதோடு உயிர்பிரிந்த உறவுகளின் ஆத்ம சாந்திக்காக பிராத்திக்கின்றோம்.**

**ஏறாவூரைச் சேர்ந்த தருமரெத்தினம் நவநீதன் என்பவருக்கு டுபாய் நாட்டுக்கு செல்வதற்கான வீசா தற்போது கைவசம் உள்ளதால் இவர் எங்கிருந்தாலும் உடன் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு வெளிநாடு செல்வதற்கான ஒழுங்கினை மேற்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.**

FOREIGN EMPLOYMENT

**U.A.E.** vacancies

ABU DHABI - DUBAI - SHARJAH - AJMAN - RASAL KHAIMA

(A CHAIN OF RESTAURNT IN U.A.E)

| தொழில் | எண்ணிக்கை | சம்பளம் U.A.E டினார் | சம்பளம் இலங்கை ரூபா |
|---|---|---|---|
| பரிமாறுபவர்கள் (ஆண்) | 60 | 850- 1050 | 24,225 - 29,925 |
| தலைமைச் சமயற்காரர் | 03 | 1200-1800 | 34,200 - 51,300 |
| சமையற்காரர் (ஆண்) | 14 | 900-1300 | 25,650 - 37,050 |
| உதவிச் சமயற்காரர் | 22 | 750-1100 | 21,375 - 31,350 |
| இறைச்சி வெட்டுபவர்கள் | 06 | 800-1100 | 22,800 - 31,350 |
| உபஉணவுச் சமையலர் | 06 | 1000-1200 | 28,500 - 34,200 |
| வேக்கரியாளர் | 06 | 800-1000 | 22,800 - 28,500 |
| Salad தயாரிப்பாளர் | 06 | 800-1000 | 22,800 - 28,500 |
| சமையல் உதவியாளர்கள் | 24 | 600-800 | 17,100 - 22,800 |

நேரடியாகப் பின்வருவனவற்றுடன் வரவும்

பாஸ்போட், 3 புகைப்படம், 1 முழுப் புகைப்படம் (சீருடையுடன்), க.பொ.த. பெறுவேறு (O/L) பெறுபேற்று சான்றிதழ், உத்தியோக அடையாள அட்டை

**விதி முறைகள்:-** இலவச உணவு, தங்குமிட வசதி, வைத்திய வசதி, காப்புறுதி, கிழமைகளில் 6 நாட்கள் 8 மணித்தியால வேலை செய்ய வேண்டும். ஒரு நாள் ஓய்வு இரு வருடங்களுக்குப் பிறகு திரும்பி வர இலவச விமானப் பயணச் சீட்டு, ஏனையவை அந்நாட்டு தொழிலாளர் சட்டப்படி

**SAAD TRADING & CONT, Co.**
***SAUDI ARABIA***

interview will be January on 2005


**01 வாரத்தில் பயணம், தகுதிக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்**

| CATEGAORY | QTY | CATEGAORY | QTY |
|---|---|---|---|
| கணக்காளர் | 15 | செயலாளர்கள் (ஆண்) | 10 |
| வரவேற்பாளர்கள் | 15 | தலைமை பரிமாறுபவர்கள் | 10 |
| சுத்திகரிப்பு மேற்பார்வையாளர்கள் | 15 | | |
| சலவைத்தொழில் மேற்பார்வையாளர்கள் | 10 | தள கண்காணிப்பாளர்கள் | 15 |
| சலவைத் தொழில் உதவியாளர்கள் | 20 | | |
| வீட்டுப் பணியாளர்கள் | 20 | பெண் சுத்திகரிப்பாளர்கள் | 10 |
| அறை உதவியாளாகள் | 20 | வாகன பரிசோதகர்கள் | 10 |
| தலைமை சமையல் காரர் | 05 | சமையல் காரர் | 10 |
| பரிமாறுவோர் | 15 | Steward | 20 |
| இறைச்சி வெட்டுவோர் | 10 | சமையல் உதவியாளர் | 25 |
| ஆண் சுத்திகரிப்பாளர் | 30 | உயர் தர வாகன இயக்குனர் | 15 |
| ஏ.சி. தொழில்நுட்பவியலாளர்கள் | 15 | தொழிலாளர்களர் | 25 |

one way ticker will be provided for male workers, after successful completion of contract. Medical & free Food or food. Accommodation will be provided, 02 years renewable contract. other service & conditions will be as per saudi arabia labour laws. SALARY NEGOTIABLE BUT NOT less than S.L.B.F.E. Amount

# "கில்லி" அடிச்சாரு சிக்சரு



கில்லி இப்படித்தான் கில்கிறிஸ்டை ஆஸ்திரேலியக் காரர்கள் செல்லமாக அழைக்கின்றனர். மற்ற அணி வீரர்களுக்கோ இவரது பெயரைக் கேட்டாலே கிலி ஏற்பட்டு விடுகிறது. இது எந்தள வுக்கு உண்மை என்பது சமீபத்திய சிட்னி டெஸ்டில் அப்பட்டமாக வெளிப்பட்டது. பொதுவாக டெஸ்ட் போட்டிகளில் 90 ஓட்டங்களை எட்டி விட்டாலே பேட்ஸ் மேன்கள் மனதில் சதம் அடிக்கும் ஆசை பிறந்து விடும். அப்புறமென்ன.

'நிதானத்துக்கு' போய்விடுவர். ஒவ்வொரு பந்தையும் தட்டிவிடவே பயப்படுவர். இவர்களுக்கு மத்தியில் கில்கிறிஸ்ட் மிகவும் வித்தியாசமானவர். இவர் சிட்னி டெஸ்டில் பாகிஸ்தானின் முகமது ஆசிப் பந்துவீச்சில் தொடர்ந்து மூன்று சிக்சர் அடித்து சதத்தை எட்டியது மறக்க முடியாத விஷயம். 120 பந்துகளில் 113 ஓட்டங்களை விளாசிய இவருக்கு, இந்த சதம் கொஞ்சம் விசேஷமானது. ஆம்இரு சாதனைகளைப் படைத்தார். வங்கதேசம் தவிர மற்ற 9 டெஸ்ட் அந்தஸ்து பெற்ற அணிகளுக்கு எதிராக சதம் அடித்தவர் என்ற பெருமையைப் பெற்றார். தவிர டெஸ்ட் அரங்கில் அதிக சதம் அடித்த விக்கெட் காப்பாளர் என்ற புதிய சாதனையும் படைத்தார்.

65 போட்டிகளில் விளையாடியுள்ள இவர் 4, 109 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதன் சராசரி 52. 67. இதில் 13 சதம், 19 அரைசதம் அடங்கும். காப்பாளராக 253 கேட்ச், 27 ஸ்டம்பிங் செய்துள்ளார். 192 ஒரு நாள் போட்டிகளில் 6,661 ஓட்டங்கள் குவித்துள்ளார். 287 கேட்ச், 39 முறை ஸ்டம்பிங் செய்துள்ளார். விஸ்டன் வீரர்.

ஒரு நாள், டெஸ்ட் என்ற வித்தியாசம் பார்க்காமல் விளாசல் ஆட்டத்தை வெளிப்படுத்துவது தான் கில்கிறிஸ்டின் சிறப்பம்சம். இதனால் தான் 'கிரிக்கெட் பைபிள்' விஸ்டன் இவரை சிறந்த விளாசல் வீரராக போற்றுகிறது. இவர் 100 பந்துகளுக்கு 80 ரன் எடுப்பதாக விஸ்டன் கணக்கிட்டுள்ளது.

'அவுட்' என தெரிந்தால் நடுவரின் முடிவுக்காக காத்தி ராமல் தானாகவே வெளியேறும் கில்கிறி ஸ்ட், அதிகம் அலட்டிக் கொள்ளாதவர். இவர் சிட்னி சதம் பற்றி கூறுகையில், ''சதத்தை வைத்து எனது திறமையை மதிப்பிட்டு விடாதீர்கள். அணிக்காக விளையாடுகிறேன். அவ்வளவுதான்," என்றார் அடக்கத்துடன். அதே நேரத்தில் கேப்டன் பாண்டிங் இவரை புகழ்ந்து தள்ளினார். ''வாழ்க் கையில் இப்படிப்பட்ட வீரரை ஒரு முறைதான் பார்க்க முடியும் இவரது துடுப்பாட்டத்தை ரசித்து கொண்டே இருக்கலாம் விக்கெட் காப்பாளர் டெஸ்டில் 13 சதம் அடிக்கிறார் என்பது நம்ப முடியாத விஷயம்," என்றார் பாண்டிங்.

## சின்ன வயசு பெரிய மனசு

இந்த பேரழிவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு விளையாட்டு உலகமும் நேசக்கரம் நீட்டுகிறது. உள்ளூர் வீரர் முதல் உலக சாம்பியன் வரை தங்களால் முடிந்த உதவிகளை அள்ளித் தருகின்றனர். உதாரணமாக 'பார்முலா ஒன' கார் ரேஸ் மன்னன் சூமாக்கர் ரூ.45 கோடி நிதி திரட்டித் தருவதாக உறுதி அளித்துள்ளார். ஜெர்மனி கால்பந்து கூட்டமைப்பு ரூ.13 கோடி அளித்துள்ளது. இதே போல் பிரான்ஸ் கால்பந்து கூட்டமைப்பு ரூ.8. 5 கோடி வழங்கியுள்ளது. பாதிக்கப்பட்ட நாடு களின் கால்பந்து அமைப்புகளுக்கு, சர்வதேச கால்பந்து கூட்ட மைப்பு (பிபா) மற்றும் ஆசிய கால்பந்து கூட்டுக் குழு இணைந்து ரூ.13.5 கோடி வழங்கியுள்ளது.

இது தவிர, வித்தியாச மாகவும் சில வீரர்கள் நிதி அளிக்க முன் வந்துள்ளனர். ஜெர்மனி டென்னிஸ் வீரர் நிக்கோலஸ் கெய் பர், தற்போது நடக்க உள்ள மூன்று ஆஸ்திரேலிய தொடர்களில் தான் வீசும் ஒவ்வொரு 'ஏஸ்' சர்வீஸ்களுக்கும் தலா ரூ. 4 ஆயிரத்து 500 வழங்குவதாக கூறியுள்ளார். என். பி. ஏ. , கூடை ப்பந்து அணியின் முன்னணி வீரர்கள் சிலர், போட்டியின் போது தாங்கள் எடுக்கும் ஒவ்வொரு புள்ளிகளுக்கும் தலா ரூ. 45 ஆயிரம் வழங்குவதாக உறுதி அளித்துள்ளனர். நமது கால்பந்து அணி கெப்டன் பாய்சங் பூட்டியாவும் ரூ. 15 ஆயிரம் அளித்துள்ளார். இவர்கள் மட்டுமல்ல, இன்னும் நிறைய நிறைய பேர் பல உதவிகள் செய்துள்ளனர்.


## உடனடி உதவி?

இப்படி அனைவரும் போட்டி போட்டுக் கொண்டு உதவி செய்து வரும் வேளையில் இந்தியா கிரிக்கெட் வீரர்கள் என்ன செய்துள்ளார்கள் என்று கேட்கிறீர்களா. சச்சின் டெண்டுல்கர், சவுரவ் கங்குலி, ராகுல் டிராவிட், அனில் கும்ளே, லட்சுமண் போன்ற மூத்த வீரர்கள் தனிப்பட்ட முறையில் உதவி செய்ததாகத் தெரியவில்லை. இவர்கள் நினைத்தால் ஒரு கிராமத்தையே தத்தெடுக்கலாம். கொஞ்சம் தாமதித்து வேண்டுமானால் உதவி அளிக்கலாம்.

ஆனால் சுனாமி குறித்து கேள்விப்பட்ட உடனேயே உதவி செய்யாதது தான் ஏமாற்றம் அளிக்கிறது.

## பார்த்திவுக்கு பாராட்டு

இவர்களுக்கு மத்தியில் விதி விலக்காக விளங்குபவர் விக்கெட் காப்பாளர் பார்த்திவ் பட்டேல் மட்டுமே. சுனாமிப் பேரழிவு ஏற்பட்ட சில தினங்களில் தனது சொந்த ஊரான ஆமதாபாத்தில் உள்ள பள்ளிகளுக்கு சென்று, அங்குள்ள மாணவர்களிடம் நிதி திரட்டியுள்ளார். இதன் மூலம் ரூ. 2 லட்சம் வசூலானதாம்.



சமீபத்தில் ஆமதாபாத் வந்திருந்த பிரதமர் மன்மோகன் சிங்கிடம், பொது நிவாரண நிதியில் சேர்த்து விடுமாறு ரூ. 2 லட்சத்தை வழங்கியுள்ளார் பார்த்திவ். நமது அணியில் மிக மிக இளம் வயதுக்காரர் இவர்தான். ஆனாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தன்னால் முடிந்த அளவு நிதி திரட்டி அளித்துள்ள பார்த்திவை கட்டாயம் பாராட்ட வேண்டும்.

இவரைப் பார்த்தாவது மூத்த வீரர்கள் தங்களால் முடிந்த உதவி வழங்க வேண்டியது அவசியம். இது அவர்களது கடமையும் கூட. இதே இலங்கை கிரிக்கெட் அணியைப் பாருங்கள். நியூசிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்ட இவர்கள், சுனாமியால் உடனடியாக நாடு திரும்பினர். தங்கள் குடும்பத்தினரை பார்த்த பிறகு, பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு உதவி செய்யக் கிளம்பி விட்டனர். தற்போது இவர்கள் புது முடிவெடுத்துள்ளனர். கிரிக்கெட் வீரர்கள் அனைவரும் இணைந்து சில கிராமங்களைத் தத்தெடுத்துக் கொள்ளப் போகிறார்களாம். அங்குள்ள மக்களுக்கு தேவையான நிதி உதவி அளித்து வீடுகளைக் கட்டிக் கொடுக்க உள்ளனர். குழந்தைகளுக்கு படிப்பு உட்பட அனைத்து வசதிகளையும் செய்து தர முடிவெடுத்துள்ளனர்.

கிரிக்கெட் விளையாட்டு மூலம் பல கோடி ரூபாய்கள் சம்பா தித்தால் மட்டும் போதுமா? இப்படிப்பட்ட நெருக்கடியான காலங்களில் விளையாட்டு வீரர்கள் பொது மக்களுக்கு உதவிகளும் செய்ய வேண்டும். செய்வார்களா நம்மவர்கள்?

## களையிழந்த காலே

'காலை நேரம் சரியாக 9. 26 மணி இருக்கும். இலங்கை மக்களுக்குப் பேரிழப்பைத் தந்த நேரம் அது. ஆம்அந்த நேரத்தில் நான் பொக்கிஷமாக நினைத்து ஆளாக்கிய காலே கிரிக்கெட் மைதானம் உருக்குலைந்து போனது. கண்ணை விட்டு நீங்காத சோகத்துடன் அந்தப் பழைய நினைவுகளை உங்களோடு பகிர்ந்து கொள்ளப் போகிறேன்.' இப்படிக் கண்ணீர் அலைகளுடன் கூறுகிறார் ஜெயானந்தா வர்ணவீரா. யார் இவர் என்பதைப் பார்ப்போம்.

ஜெயானந்தா வர்ணவீரா. 1985 - 95 வரை இலங்கை கிரிக் கெட் அணிக்காக விளையாடியவர். காலே நகரில்இருந்து சர்வதேச அரங்கில் கால் பதித்த முதல் வீரரும்கூட. கடலை ஒட்டிய காலே மைதானத்திற்கும் இவரு க்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இவருடன் 21 மைதான பராமரிப்பாளர்கள் சேர்ந்து காலே மைதானத்தை உருவாக்கி உள்ளனர். துவக்கத்தில் தடகள வீரர்களுக்கு பயன்பட்டு வந்த இந்த மைதானம், பின்னர் கிரிக்கெட்டிற்காகப் பயன்படுத்தப்பட்டது. செதுக்கிய சிற்பமாகபார்த்து, பார்த்து வடிவமைத் துள்ளார் வர்ணவீரா. சர்வதேச போட்டி இங்கு துவங்கியது 1998ல். சுனாமி தாக்கிய நேரத்தைக் காட்டும் கடிகாரத்தையும், முதல் டெஸ்ட் போட்டி நடந்த போது எடுத்த போட்டோவையும் கண் கலங்கி பார்த்தபடியே வர்ண வீரா கூறும் கதையை கேட்போம்.

''இலங்கை அணிக்கு இது ராசியான மைதானம். 11 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி இங்கு 7 போட்டிகளில் எங்கள் அணி ஜெயித்துள்ளது. 2 போட் டிகளில் மட்டுமே தோல்வியை தழுவி உள்ளோம். ஆஸ்திரேலிய அணியின் ஷேன் வார்ன் 500விக் கெட்டை வீழ்த்தியது கூட இங்கு தான். இப்படி சாதனைகளுக்கு பெயர் பெற்ற இந்த மைதானம் சோதனையை சந்திக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட் டுள்ளது. சுனாமி அலைகள் தாக்கிய டிச. 26ல் இந்த மைதானத்தில் 15 வய திற்குட்பட்ட இலங்கை பள்ளி அணியும், பிரிட்டிஷ் அணி ஒன்றும் மோத தயாராக இருந்தன. அந்த நேரத்தில்தான் இந்த சம்பவம் நிகழ்ந்தது. நல்ல வேளையாக மாணவர்கள் தப்பித்து விட்டனர். ஒரு மாணவனின் தந்தை இறந்து விட்டார். மீண்டும் இந்த மைதானத்தைச் சீரமைக்க குறைந்தது 2 அல்லது 3 கோடி ரூபாயாவது தேவைப்படும். பெரும்பாலான மணல்களையும், நீரையும் வெளியேற்றி விட்டோம். முதன் முதலாக உருவாக்கும்போது இருந்த மனநிலை இல்லாமல் போனாலும், பழைய முறையில் மைதானத்தை மாற்ற முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. இலங்கையில் 95 சத வீத மக்கள் கிரிக்கெட்டை நேசிப்பவர்கள். இவர்களின் முயற்சியா லும், கடவுளின் கருணையாலும் காலே மைதானம் மீண்டும் பழைய பொலிவு பெறும் என்ற நம்பிக்கை உள்ளது" என்றார் வர்ணவீரா.

### குட்டி அன்னா காலோவில்

டென்னிஸ் போட்டிகளில் ரசிப்பதற்கு விஷயம் நிறைய இருக்கும். பெண்கள் டென்னிஸ் என்றால். இன்னும் கொஞ்சம் கூடுதல் அதிகமாக. ரசிகர்கள் பார்வை, இந்த விளையாட்டின் மேல் அதிகம் திரும்பினால். ஊருக்கு ஊர் இங்கு அழகிப் போட்டி நடப்பது போல, சர்வதேச அளவில், டென்னிஸ் போட்டிகள் இப்போது களைகட்டத் துவங்கி விட்டன.

### கிரிக்கெட் போதும்

சர்வதேச அளவில் பிரபலமான வீராங்கனைகள் பங்கேற்ற டென்னிஸ் தொடர் ஒன்று ஆஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட் பகுதியில் சமீபத்தில் நடந்தது. முன்னணிகள் எல்லாம் ஆஜரானதால், ஆஸ்திரேலியர்கள் கிரிக்கெட்டைக் கூட ஒதுக்கி வைத் து விட்டு கோல்ட் கோஸ்ட் பகுதிக்கு டிக்கெட் முன்பதிவு செய்து விட்டனர். இந்தத் தொடரில் அதிகம் ரசிக்கப்பட்டவர். டாட்டி யானா காலோவின்.

### இன்னொரு ரஷ்யா

அன்னா கோர்னிகோவா, மரியா 'ரபோவா ஆகியோருக்குப் பிறகு ரசிகர்கள் கவனத்தை அதிகம் கவர்கிறார் இந்த காலோவின். வயது என்ன இருக்கும் என்று நினைக்கிறீர்கள்.? ஜஸ்ட் சிக்ஸ்ஸ்டீன்! அன்னா, மரியா, காலோவின் மூன்று பேருக்கும் ஒரு விசேஷ ஒற்றுமை இருக்கிறது. மூன்று பேருமே ரஷ்யப் பெண்கள். முன்னவர்கள் இருவரும் ரஷ்யாவுக்காக விளையாட காலோவின், குட்டிக் குழந்தையாக இருந்த போதே பிரான்ஸ் பறந்து விட்டாராம். இப்போது பிரான்ஸ் நாட்டுக்காக விளையாடுகிறார்.

### சுனாமி வேகம்

''பதினாறு வயதிலேயே இந்தப் பெண் இப்படிப் பாய்கிறதே?" என்று டென்னிஸ் ரசிகர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். 2004 'ஹேப்பி நியூ இயர்' தினத் தன்று டென்னிஸ் தரவரிசையில் காலோவின் 300க்கும் மேலே.மிக மேலே ஒரு இடத்தில் இருந்தார். அதற்கடுத்த நாளில் இருந்து ஒரு முடிவுடன் களமிறங்கினார். சுனாமி வேகத்தில் சுழன்றடிக்க. எதிர்த்தாடிய பெண்கள் திகிலடித்து ஒதுங்கிக் கொண்டனர். விளைவு. தர வரிசையில் விறுவிறுவென முன்னேறி, ஆண்டு முடிவில் 'முன்னணி 30" பட்டியலில் இடம் பிடித்து விட்டார்.

### நீச்சல் வீராங்கனை

ரசிகர்கள் எல்லாம் இவரை 'குட்டி அன்னா கோர்னிகோவா' என்று அழைக்கின்றனர். கடந்த ஆண்டு விம்பிள்டன் டென்னிஸ் 'டிவி'யில் பார்த்திருந்தீர்களேயானால், ஏன் அப் படி அழைத்தார்கள் என்பதற்கான காரணம் விளங்கியிருக்க முடியும். ''யாரோ நீச்சல் வீராங்கனை வழி தவறி, டென்னிஸ் களத்துக்குள் நுழைந்து விட்டாரோ''என்று ஆச்சரியப்படுத்தும் விதமாக ஒரு சூப்பர் டிரஸ் போட்டுக் கொண்டு களமிறங்கினார்.

## மனமே நீ ஆறிவிடு மறுபடியும் உயிர்த்துவிடு



ஆழிப் பேரலையே பொங்கி எழுந்து
ஊழித் தாண்டவம்
ஆடி முடிந்தது!
சுனாமிப் பேரலையே
சுற்றத்தைக் கொன்றதுமேன்
ஓங்கி அலை அடித்து
ஊரைப் பறித்தது மேன்?
உறக்கங் கலையுமுன்பே மக்கள்
உயிரைக் குடித்தது ஏன்?
பச்சைப் பாலகர்கள் செய்த
பாவம் என்ன சொல்லு
மிச்ச மேது மின்றி பல
குடும்பம் அழிந்தனவே!
அம்மா கண்முன்னே
அப்பா பிள்ளைகளும்.....
அப்பா கண்முன்னே
அம்மா பிள்ளைகளும்.....
பிள்ளைகள் கண்முன்னே
பெற்றோர் உறவுகளும்.....
பேயென வந்த கடலலையால்
பிணமாகி ஒதுங்கினரே!
ஆற்ற முடியவில்லை மனம்
ஆறாது துடிக்கிறதே!
முப்பது ஆண்டுக்கு மேலாய்
முன்னோக்கிப் பாய்ந்த அலை
கடலோரம் வாழ்ந்த மக்கள்
உயிர் குடித்துப் போனதுவே!
என் இனிய தாயகமே!
என் பாவம் நாம் செய்தோம்?
ஒரு கூட்டுப்பறவையென
வாழ்ந்த உறவுகளை
ஒரு நொடியில் பறித்தாயே!
உடமை போகட்டும்
ஊரும் அழியட்டும்
உயிருக்கு உயிரான எம்
உறவுகளை மீண்டும் தருவாயா?



ஓயாத மரண ஓலம் இனி
காயாது எம் நெஞ்சம்
ஆறாது!
கடல் செல்வம் அள்ளித் தந்தாய்
களி கொண்ட வாழ்வுதந்தாய் இன்று
மடல் போல் கண்ணீரில் குளிக்க வைத்தாய்
கடலம்மா!
ஏனம்மா கோபம் கொண்டாய்
உனை நம்பி வாழ்ந்த உன்
உறவுகளை ஏன் பறித்தாய்?
இனியும்
உன்னருகில் யார் வாழ்வார்
இரைச்சல் கேட்டவுடன்
இதயம் துடிக்கிறதே
ஒதுங்கிய சடலங்கள்
ஒன்றா இரண்டா?
ஒவ்வொரு குழியிலும்
அப்பப்பா எத்தனை?
எத்தனை
இன்றும் எரிக்கின்றோம்
கட்டிய வில்லை
கருமாரி செய்யவில்லை
பட்டுடைகள் கட்டவில்லை
பாசங்கள் பார்க்கவில்லை
பொட்டு வைக்கவில்லை
பூ வைத்துப் பார்க்கவில்லை
கட்டை அடுக்கவில்லை
குவியலாய்ப் புதைத்தீரே!
எட்டிப்பாத்த இதிகாசம்
இன்று எம் கண் முன்னால்
பூமி நடுங்கியது
கடல் கோள் கலங்கியது
கறுப்பு நுரை பொங்கியது
காலம் தந்த பரிசோ?
மனமே நீ ஆறிவிடு
மறுபடியும் உயிர்த்துவிடு

-இராஜிசண்முகநாதன்-

## மரண வீட்டில்............

"எங்கட சொந்த இடம் மாங்கேணி அங்கு இறந்தவர் எனது சின் னம்மா நாங்கள் மரண வீட்டுக்குச் சென்று கடதாசிக்கூட்டம் விளையாடிக் கொண்டிருந்தபோது இரவு 9.30 மணியிருக்கும் கேற்றடிப் பக்கம் "பளீர்" என ஒரு வெடிச் சத்தம் கேட்டது. வெடிச்சத்தம் கேட்டவுடனே விளையாடின ஆக்கள், வீட்டில இருந்த பெண்கள் எல்லோரும் எழும்பி அங்குமிங்கும் ஓடினார்கள். அப்படி ஓடிக் கொண்டிருக்கும் போது ஆட்கள் ஓடின பக்கம் அடுத்த வெடிக் கேட்டது. வெடிக் கேட்டதுதான் தெரியும் என்னைத் தூக்கி அங்கால எறிஞ்சமாதிரியிருந்தது. நான் நிலத்தில கிடந்து பார்த்தன். என்னால எழும்ப முடியல்ல. சனமெல்லாம் கத்திக்கத்தி ஆள்ல ஆள் முட்டி மோதி விழுந்தடிச்சு ஓடுறாங்க."

"வெடிபட்ட ஆட்கள் நிலத்தில கிடந்து கையக்கால அடித்துக் கத்துறாங்க. வெடிபட்டவர்களை ஒருத்தரும் கவனிக்கவில்லை. எல்லாரும் தங்களைத் தாங்கள் காப்பற்றிக் கொள்வது போன்று ஓடினார்கள். பிறகு சாவிட்டில சனங்கள் கத்திற சத்தம் கேட்டு ஓடிப்போன ஆட்கள்ல சிலர் வந்து காயப்பட்ட ஆட்களை தூக்கி நிமிர்த்தினார்கள். பிறகு சம்பவத்தைக் கேள்விப்பட்டு ஆமிக்கார ஆட்கள் வந்து அவங்கட வாகனத்திலையும், வீதியால் போய்வந்த டிப்பர், லொறி என்பவற்றையும், கொண்டு வந்து காயப்பட்ட ஆட்களை வாழைச் சேனை ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்தார்கள். வாகனத்தில ஏத்தினதுதான் தெரியும் பிறகு எனக்கு என்ன நடந்ததென்று தெரியாது. விடியப் பார்த்தன் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில இருக்கன்." இதுல எண்ட தம்பிக்காரன் மற்றும் என்ற இரண்டு பிள்ளைகளுக்கும் காயம் என அவர் தெரிவித்தார்.

"இச்சம்பவத்தில் காயமுற்ற மற்றுமொரு சிறுமி தம்பிமுத்து டிசாந்தி வயது 14 அவர் கூறுகையில்:-

"இறந்தது எங்கட அப்பம்மா அண்டைக்கு இரவு ஆட்களெல்லாம் கடதாசிக்கூட்டம் விளையாடிக் கொண்டிருந்தார்கள் பெற்றோல் மெக்ஸ் எரிந்து கொண்டிருந்தது. வளவு நிறையச் சனம் அப்போது சாவீட்டில தண்ணி முடிஞ்சி. தண்ணி அள்ளுறத்துக்காக நானும், எங்கட அண்ணனும் போனம் அப்ப பார்க்க எங்களுக்கு எதிருக்கு விளாங்கா மாதிரி உருண்டு வந்தது அப்ப நான் அண்ணனிடம் சொன்னேன். அண்ணா விளாங்கா மாதிரி ஏதோ உருண்டு வருகிறது. என்று சொல்லி முடிக்கிறதுக் கிடையில "பளீர்" என்று பெரிய வெடிச்சத்தம் கேட்டது. என்னைத்தூக்கி பக்கத்தில எறிஞ்சது நான் விழ அண்ணா ஓடிவந்து என்னைத் தூக்கின துதான் தெரியும், அடுத்த தரம் "பளீர்" என்று ஒரு வெடிச்சத்தம் கேட்டது, அப்போது அண்ணாவும் அம்மா என்று கத்திக் கொண்டு விழுந்து விட்டார். பிறகு சனமெல்லாம் கத்திக் கத்தி எங்களுக்கு மேலாலயெல்லாம் கடந்து கடந்து ஓடினாங்க. காப்பாத்துங்க, காப்பாத்துங்க என்று அண்ணா கிடந்து கத்தினான். பிறகு என்ன நடந்ததென்று தெரியாது. கொஞ்ச நேரத்தால பார்த்தன் சிங்களத்தால கதைச்சிக், கதைச்சி என்னைக் கையிலயும், காலிலையும் பிடித்து வாகனத்துல ஏத்துறாங்க. அவங்க வாழைச் சேனை ஆஸ்பத்திரிக்கு கொண்டுவந்து பிறகு மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் வண்டியில கொண்டு வந்தாங்க நான் இங்க இருக்கின்றன். அண்ணா மேல் வாட்டில இருக்கிறான். என அந்தச் சிறுமி அழுதழுது கூறினாள்.

குடும்பச் சண்டை, மதச் சண்டையாக மாறி உயிர்களைக் காவு கொள்ளும் விதத்தில் செயற்படுவார்களாக மனிதர்கள் சிலர் காணப்படுகின்றனர் என்பதை நினைக்கும் போது எமது சமூகம் வெட்கித் தலைகுனிய வேண்டியுள்ளது. இது மனித நாகரீகமற்ற ஒரு செயல். இனத்தால், மொழியால் ஒன்று பட்டு நிற்கும் எமது சமூகத்தில் இப்படியானவர்களின் இழிவான செயல்கள் வரலாற்றில் மறக்க முடியாதவைகள்.

## தெற்காசியாவில்........

நஞ்சருந்து வதற்கு தள்ளப்படுகிறார் ஒவ்வொரு வருடமும் சீதன கொடுவினை காரணமாகவும் வேறு சித்திர வதை காரணமாகவும் 15,000 இளம் பெண்கள் பாதிப்பு க்குள்ளாகிறார்கள் இந்தியாவின் தேசிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி 50 விழுக்காடன பெண்கள் குறைந்தது ஒரு தடைவ என்றாலும் உடல் ரீதியாக, உள ரீதியாக அல் லது பாலியல் ரீதியாக பாதிக்கப் படுகிறார்கள்.

47 விழுக்காடான பங்களா தேசத்தின் பெண்கள் தமது நெருங் கிய சகாக்களினால் உடலியரீதியான வன் முறைக்கு ஆழாகிறார்கள் உள ரீதியான பாதிப்புக்குள்ளாகிறார்கள் ஒவ்வொரு கிழமையும் 10 அதிகமான பெண்கள் அசிட் வீச்சுக்கு ஆளாகிறார்கள் இது அவர்களை உருக்குலைந்த நிலைக்கு இட்டு செல்வதுடன் பார்வையற்ற நிலைக்கும் இட்டு செல்லுகிறது பங்களாதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின் படி தொழில் புரியும் பெண்களில் 32 விழுக்காடான பெண்கள் வீட்டு வன்செயலுக்கு ஆளானதன் மூலமாக தமது தொழிலை கைவிட்டுள்ளனர்

தேசிய பெண்கள் குழுவின் தலைவியின் கூற்றின் படி இலங்கையில் பெண்களுக்கெதிராக வன்செயல்கள் அதிகரித்து செல்லுகிறது 60 விழுக்காடான பெண்கள் வீட்டு வன் செயலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்பதாகும்

நேபாளத்தை எடுத்து கொண்டால் பாலியல் மோசடிக்காக ஆண்டு ஒன்றுக்கு 5,000-7,000 வரையிலான பெண்கள், யுவதிகள், சிறுமிகள், பாலியல் சேட்டை மோசடிக்கு ஆளாகிறார்கள் நேபாளத்தை சேர்ந்த சுமார் 2 லச்சம் பெண்கள் இந்தியாவில் பாலியல் தொழில் புரிகிறார்கள். மோசடி, கடத்தல், போன்றவற்றுக்கு உள்ளான பெண்களின் உண்மையான தகவல்கள் எதுவும் பதியப்படவில்லை இவ்வாறான வஞ்சகத்திற்கு உள்ளானவர்கள் பல ஆயிரமாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது

ஆப்கானிஸ்தானிலும் குறிப்பிட்டு கூறக்கூடிய பல சம்பவங்கள் இடம் பெற்று இருந்தாலும் புள்ளி விபரங்கள் இல்லாத போதிலும் பலவந்த திருமணங்கள், கடத்தல் தாக்குதல் போன்றவை இடம் பெறுகிறது தலிபான் குழுக்களினால் குறித்த ஆடை அணியாத பெண்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தப்படும் நடைமுறை அங்கேயுள்ளது

இந்தியாவில் 32 மாநிலங்கள் உள்ளது இவற்றில் 27 மாநிலங்களில் பெண்கரு சிதைவுக்கு உட்படுத்தப்படுகிறார். இந்த விளைவுகள் உடனடியாக நில மாநிலங்களில் உணரப்பட்டுள்ளள போதிலும் இது நீண்டகால விளைவுகளை ஏற்படுத்த கூடியதாக அமைந்துள்ளது என்று பல மனித உரிமைகள் அமைப்புக்கள் தெரிவிக்கின்றன தற்போது தொழில் நுட்பம் வளர்ச்சி பெற்றுள்ள போதும் இன்றும் பிறந்த பெண் குழந்தைகளுக்கு கள்ளிப் பால் கொடுத்து கொலை செய்யும் நடைமுறை இருந்து வருகின்றமை குறிப்பிடதக்கது

தெற்காசியாவில் கிட்டத்தட்ட 40 விழுக்காடான மக்கள் வறுமையில் சீவிக்கின்றார்கள் உலகிலே 400 மில்லியன் மக்கள் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் இதன் காரணமாக அபிவிருத்தி சுட்டெண்ணான பிறப்பு, ஆயுட்காலம், தாய்மை, மரணம், கல்வி, சுகாதாரம், தொழில், ஆகியவற்றில் பாரிய அளவு பாதிக்கப்பட்டுள்ளது

சர்வதேசத்தில் இன்று பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளுக்கு எதிராக பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள் மனித உரிமைகள் அமைப்புக்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றார்கள் 2000 ஆண்டிலே 118 நாடுகள் தேசிய நடவடிக்கை திட்டங்களை தயாரித்து அதை நடைமுறை படுத்துவதற்காக சில நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது

## அம்பாறை அகதிகளின்....

கூடாரம் (TENT) சமயலுபகரணங்கள் (Kitchen Utencils) வழங்கப்பட வேண்டுமென அகதிகள் வேண்டுகின்றனர். பொதுவான இடங்களில் அவற்றைக் (கூடாரங்களை) அமைக்க வேண்டும். கடலிலிருந்து 500 மீற்றருக்குள் குடிமனைகள் அமைக்க முடியாதென அரச அதிபர் கூறுகிறார்.

கடலோரப் பாதுகாப்புச் சட்டத்தின்படி 300 மீற்றருக்குள் குடிமனைகள் அமைக்க முடியாது என்று கூறப்படுகிறது. யார் எதைக் கூறினாலும் மக்கள் நலன் கருதிக் கூறுகிறார்கள் என்பதை அறியலாம். ஆனால் வீடுகளையிழந்த 35459 குடும்பங்களுக்கு வீடுகளை நிருமானிக்க நிலத்திற்கு எங்கு போவது? இது பாரிய பிரச்சினை.

அகதி முகாம்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கும் அம்பாறை கச்சேரி பாரபட்சமாகி நடக்கக்கூடாதென புலிகளின் மட்டு. அம்பாறை அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன், மாவட்டப் பொறுப்பாளர் குயிலின் பன், ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் போன்றோர் வேண்டுகோள் விடுக்கின்றனர். இயல்பு வாழ்க்கை திரும்பும் வரை அகதிகளிலும் பாரபட்சம் காட்டாமல் நிருவாகத்தை நடாத்துவது காலத்தின் அவசியமாகும்.





உறவை இழந்து உடமை இழந்து, ஊரை இழந்து அகதிகளாகி மட் இந்துக் கல்லூரியில் தஞ்சமடைந்துள்ள மக்களின் அவலங்கள்



பேரழிவில் பாதிக்கப்பட்ட களுவாஞ்சிகுடி பிரதேச மீட்புப்பணியில் கனரக வாகனங்களும், விடுதலைப்புலிகளும் மற்றும் பொது மக்களும்



கல்லாறுக்கு வருகை தந்த பிரிட்டிஷ் றோயல் கடற்படையினா



பட்டிருப்பு கோட்டத்தில் பாதிப்புற்ற மக்களின் துயர் துடைப்பு பணி தொடர்பான கலந்துரையாடல்

வாகனேரி பிரதேசத்தில் மத முரண்பாடு காரணமாக கைக்குண்டு வீச்சிக்கு இலக்காகி காயமடைந்து மட் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டோர்





மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் பொது மக்கள் இணைந்து மேற்கொண்டு வரும் மீட்பு துயர் துடைப்பு பணிகளின் போது

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 14-01-2005 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது